
கல்கி

KALKI 10-2-1974 50 காசு



எஃகு நகரம் ஒரு பூஞ்சோலை நகரமாகவும் ஆக முடியுமா?



இந்தியாவின் எஃகு நகரமான ஜாம்ஷெட்பூர் ஒரு முன்மாதிரி நகரமாகத் திகழவேண்டும் என்றே திட்டமிடப்பட்டிருந்தது.

''நிழல் தரும் மரங்களைக் கொண்ட, அகன்ற தெருக்களாக அமைத்திட மறந்திட வேண்டாம். ஒன்று விட்டு ஒன்று, துரிதமாக வளர்ந்திடும் வகை மரங்களை நடவும். புல்வெளிகளுக்கும் பூங்காக்களுக்கும் போதிய வசதி செய்திடவும்.''—என்று ஜாம்ஷெட்ஜி டாடா தனது மகன் தோராப்புக்கு எழுதியிருந்தார்.

இன்று ஜாம்ஷெட்பூர் அவ்வண்ணமே உள்ளது—எஃகு நகரத்தோடு ஒரு பூஞ்சோலை நகரமாகவும் பரிமளிக்கிறது.

குடியிருப்பு வீடுகள் கூட, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்ஜி வெளியிட்ட விருப்பங்களை நினைவில் நிறுத்தி, திட்டமிட்டு அமைக்கப் பட்டிருப்பதோடல்லாமல், இன்னும் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.



டாடா ஸ்டீல்


கல்கி பொருளடக்கம்



"கல்கி"யில் வெளி வரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்ப வங்களும் கற்பனையே

பிரமாதீச, தை 28 ■ பிப்ரவரி 10, 1974

கல்கி சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00



மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
ரின். சோப் அல்ல இது. புத்தம் புதுமையான ஒரு சலவைச் சாதனம்—வில்லை வடிவிலே ஒரு டிடர்ஜெண்ட். சிக்கன மிக்கது ரின்: சோப்பை விட மேலும் அரை மடங்கு அதிகத் துணிகளை வெளுத்திடும். திறந்த சோப்புப் பெட்டியிலே ஈரமுலர வைத்துக் கொண்டால் சிறந்த பலன் அளிக்கும் ரின். குடும்பத்திலுள்ள யாவரின் துணிகளிலும் மின்சுடரின் வெண்மை பளிச்சிடவே: ரின்!
சலவையோ யானையளவு!
சோப்பை விட அரை மடங்கு
அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 33 :: இதழ் 28

இரு பிரதமர்களின் ஒப்பந்தம்

பாரதப் பிரதமரும் ஸ்ரீலங்கா பிரதமரும் கூடிப் பேசிச் செய்துகொண்ட உடன்பாட்டை, இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்னையை ஏதோ ஒரு விதத்தில் தீர்த்து வைக்க வகை செய்கிறது என்று சொல்வதுதான் பொருந்தும்.

இலங்கையில் உள்ள சுமார் பத்து லட்சம் இந்திய வம்சாவளியினரின் தலைவிதியை 1964 வருஷத்தில் ஒருவாறு நிர்ணயித்த சாஸ்திரி — சிரிமாவோ ஒப்பந்தம், 8,25,000 இலங்கைவாழ் இந்திய மக்களின் பிரஜா உரிமைகளை வரையறை செய்தது. 5,25,000 இந்திய வம்சாவளியினருக்கு இந்தியப் பிரஜா உரிமை அளித்துப் பதினைந்து ஆண்டு காலத்தில் இந்தியா அழைத்துக் கொள்ள வேண்டும்; 3,00,000 இந்திய வம்சாவளியினருக்கு ஸ்ரீலங்கா அரசு பிரஜா உரிமை வழங்கி, அவர்களை அந்நாட்டிலேயே இருக்கச் செய்ய வேண்டும். மீதமுள்ள பிரஜா உரிமையற்ற 1,50,000 பேர்களைப் பற்றிப் பின்னால் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதுதான் சாஸ்திரி - சிரிமாவோவின் ஒப்பந்த ஏற்பாடு.

இதில் கண்டுள்ள ஆள் கணக்கெல்லாம் ஆராய்ச்சி செய்யப்பட்டுக் கிடைத்த எண்ணிக்கைதான். ஆனால் பிரஜா உரிமை வழங்குவதில் நிர்ப்பந்தங்கள் எதுவும் இருக்கக் கூடாது. அவரவர்கள் சுயேச்சையாக விண்ணப்பிக்கும் பிரஜா உரிமை மனுக்களை நியாயப்படி பரிசீலனை செய்து உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பது இரு நாடுகளும் ஒப்புக்கொண்ட அடிப்படை.

ஒப்புக்கொள்வது வேறு; செயல்படுத்துவது வேறு என்ற முறையில், சென்ற ஆறு ஆண்டுகளாக நடவடிக்கைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. தலைமுறை தலைமுறையாக இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் உழைத்தும், இலங்கைத் தீவையே தங்கள் தாயகமாகக் கொண்ட இந்திய வம்சாவளியினர் ஆறு லட்சம் பேர்கள் இலங்கைப் பிரஜா உரிமைக்குத் தக்க ஆதாரங்களுடன் மனுச் செய்து கொண்டனர். ஆனால் இதுவரையில் சுமார் 60,000 பேர்களுக்கு மட்டுமே இலங்கை அரசாங்கத்தினால் பிரஜா உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது மூன்று லட்சம் பேர்களை அனுமதிக்க ஒப்புக்கொண்டதில் ஐந்தில் ஒரு பகுதியினருக்குத்தான் இதுவரையில் பிரஜா உரிமை அளித்துள்ளது. இந்தியாவுக்கு வர விரும்பியவர்கள் நாலு லட்சம் மக்கள்தான். இதில் ஒரு லட்சத்து ஐயாயிரம் பேர்களுக்குத்தான் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒப்பந்தம் ஆமை வேகத்தில்தான் நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும். இந்தப் பின்னணியைக் கொண்டு பார்க்கும்போது, இந்தியாவுக்கு அனுப்பி வைக்க வேண்டிய 5,25,000 பேர்கொண்ட மக்கள் தொகையை எப்படியும் பூர்த்தி செய்துவிட வேண்டும் என்ற வேகத்தில் நியாயமாக மனுச் செய்து கொண்டுள்ள இலங்கைவாழ் இந்தியர்களின் மனுக்கள் ஆராயப்படாமலே நிராகரிக்கப்பட்டு விடும் என்ற பீதியும் தோன்றியுள்ளது. இந்த வகையில் ஸ்ரீலங்காவிலிருந்து கிடைக்கும் செய்திகளும் அச்சம் தருவனவாகவே உள்ளன. சுயேச்சை, நிர்ப்பந்தமின்மை என்ற அடிப்படை அவ்வளவாகக் கவனிக்கப்படுவதில்லை என்ற குறைபாட்டைச் சுட்டிக் காட்டத்தான் வேண்டியிருக்கிறது.

மேலும், இலங்கை எப்போதுமே ஆள் பலம் குறைந்த நாடு. தனது பொருளாதார வளர்ச்சிக்கு அங்கே குடியேறியுள்ள தமிழர்களின் உதவி மிகவும் அவசியம். அங்குள்ள தமிழர்களும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு முழு மனத்துடன் உழைத்து வருபவர்கள். தாயகத்துடன் தொடர்பு அற்றுப் போனவர்கள். அவர்களால் இலங்கைக்கு எவ்விதத்திலும் லாபமே. மாறாக, இந்தியாவோ ஜனத்தொகை மிகுதியாக உள்ள நாடு. இலங்கை வாழ் இந்தியர்கள் இங்கு வராமலிருந்தால், ஒன்றும் குறை ஏற்படாது. இந்த நிலையில், நியாயமாக இலங்கையிலேயே வசிக்க மனுச் செய்து கொண்டுள்ள ஆறு லட்சம் பேர்களை அங்கேயே நிலைக்கச் செய்யாமல், நிர்ப்பந்தமாக வெளி

யேற்ற முற்படுவதுதான் நியாயமற்ற நிலையாகும்.

இதுவரையில் தீர்க்கப்படாத ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் இலங்கைவாழ் இந்தியர்களை, நாட்டுக்குப் பாதியாகப் பங்கு போட்டுக் கொண்டு, 75,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்ளுவது என்றும் மீதமுள்ள 75,000 பேர்களை ஸ்ரீலங்கை பிரஜா உரிமை அளித்து ஏற்றுக் கொள்ளுவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மனிதாபிமானத்துடன் இப்பிரச்னையை அணுகாமல் வியாபார ரீதியில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது திருப்தியளிக்காமலிருந்தாலும் வரவேற்க வேண்டியதுதான். ஏனெனில், ஒரு பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டு விட்டதல்லவா?

இந்த முடிவில் தமிழ்நாட்டு அரசுக்கு மற்ற மாநிலங்களை விட அதிகமான கவலை உண்டு என்பதைச் சொல்லத் தேவை இல்லை. இலங்கையிலிருந்து இனி வரப்போகும் 75,000 பேர்களும்; ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ள 5,25,000 பேர்களில் வந்துவிட்ட 1,05,000 பேர்களைத் தவிர, மீதமுள்ள 4,20,000 பேர்களும் பெரும்பாலும் தமிழர்களே. ஆக சுமார் ஐந்து லட்சம் இலங்கை வாழ் இந்திய மக்களுக்குப் புகலிடம் அளித்துப் புனர்வாழ்வுக்கு வகைசெய்ய வேண்டும். இந்தியப் பிரஜை என்ற முறையில் இதற்கு முழுப் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, புனர்வாழ்வுக்கு ஆகும் செலவுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதைப் பற்றித் தமிழக அரசு மத்திய அரசை அணுகித் தேவையான உதவிகளைக் கோரிப் பெற உரிமை உண்டு. இதற்கு மக்களின் முழு ஆதரவும் கிடைக்கும். இந்த வகையில் தமிழக முதல்வர் தெரிவித்திருக்கும் கவலை நியாயமானதே என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும்.


அறுபத்தெட்டுக்கு அறுபத்தெட்டு

இம்மாதம் 13ந் தேதி நமது காஞ்சி மாமுனிவர், ஸ்ரீ பெரியவர்கள் காமகோடி பீடத்தில் ஆரோகணித்து அறுபத்தெட்டாவது ஆண்டு பிறக்கிறது. ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களிலிருந்து இப்பீடத்தில் ஞானச் செங்கோலோச்சிய ஆசாரியர்களில் அறுபத்தெட்டாமவர் ஸ்ரீ பெரியவர்கள். மற்றெக் காலத்தையும் விட கலியின் கோலாகலம் தலைவிரித்தாடும் இந்த நூற்றாண்டில் புராதனமான யதி தர்மத்துக்குச் சிறிதும் வழுவின்றி அறுபத்தேழு ஆண்டுகளாக சநாதன தர்ம ஸ்வரூபமாக அவர்கள் வாழ்ந்து வந்திருப்பது அற்புதத்திலும் அற்புதம். நவீனர்களையும் கருணையால் ஆளும் அதிசய சநாதனர் அவர்.



இன்று அவர்கள் பீடாதிபத்தியத்துக்கு உரிய வெளிப் பெருமைகள் ஏதுமின்றி, பீடத்தையும் துறந்தாற்போன்ற மகத்தான சந்நியாசத்துடன் திகழ்கிறார்கள். அடியார்களின் இதயத்தை யெல்லாம் பீடமாக்கிக்கொண்டு விட்ட அந்த அருளாளருக்கு வேறு பீடம் எதற்கு? பீடாதிபதிகளாக இருந்தபோது ஒரே செயல்மயமாக அருள் புரிந்து வந்தவர், இப்போது அநேகமாகச் செயலற்று, சொல்லற்று வெறும் அருளாகவே இருந்து வருகிறார்கள்.

அவர்கள் சொற்களை மிகவும் குறைத்து, பெரும்பாலும் மௌனமாகி விட்ட சென்ற சில ஆண்டுகளாக உங்களது 'கல்கி' பத்திரிகை அவர்களது திருக் குரலை வாரா வாரம் ஏந்தி வருவது அதன் பாக்கியம். நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஸ்ரீ பெரியவர்கள் பல இடங்களில் நிகழ்த்திய உபந்யாசங்கள், உரையாடல்கள், அடியார்களுக்கு அளித்த சந்தேக விளக்கங்கள், சஞ்சிகைகளுக்கு அருளிய கட்டுரைகள், மாநாடுகளுக்கு அனுப்பிய செய்திகள், ஸ்ரீமுகங்கள் ஆகியவற்றைத் தொகுத்து, ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்து இவை அனைத்திலும் விரவியுள்ள அவர்களது மொழிகளைத் திரட்டி ஓரிடத்தில் சேர்த்து, இதழ்தோறும் இந்த அருள்வாக்குகளை அளித்து வருகிறோம். பிரத்யட்சத்தில் பெரும்பாலும் மௌன குருவாகிவிட்டவர், இவ்விதமே இந்த ஏட்டில் பேசும் தெய்வமாக வெகு காலம் உலவி வர அவரது அருளையே வேண்டுகிறோம்.


இதொன்றும் புதிதல்ல. என் கொள்கைகள் எத்தனையோ முறை சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்றன!
உணவு தேவை!
ஒரிஸா உ.பியில் ஓட்டு தேவை!
குஜராத்
எனது அனுதாபங்கள்! ஆனால் எனக்கும் உன்னைப் போல் கடும்பசி

தமிழ் நாட்டிலே

தீரன்

அருமையான சுவரொட்டி

குடியரசு தினத்தை ஒட்டிச் சென்னை நகரம் எங்கும் ஒட்டப்பட்டிருந்த ஒரு சுவரொட்டி அனைவருடைய கவனத்தையும் கவர்ந்து ஒரு நிமிஷம் நின்று தயங்கிப் படித்து விட்டுப் போகும்படி இருந்தது.

இந்திய தேசப் படத்துக்குள்ளே பாரத மாதா நிற்பது போல் வரையப்பட்டு 'நான் ஓர் அநாதை' என்று தொடங்கிப் பாரத மாதாவே கூறுவதுபோல் சுவரொட்டி அச்சிடப்பட்டிருந்தது.

''டாக்டர்கள் போராடுகிறார்கள். இன்ஜினியர்கள் போராடுகிறார்கள். மாணவர்கள் போராடுகிறார்கள். ஆசிரியர்கள் போராடுகிறார்கள். ஐம்பதும் (ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்குகிறவரும்) போராடுகிறது. ஆயிரமும் (ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறவரும்) போராடுகிறது. இருப்பவன் தொடர்ந்து இருக்கப் போராடுகிறான். இல்லாதவன் பிடித்துக் கொள்ளப் போராடுகிறான்.

''தொழிலாளர் சகோதரர்களே!....... சகோதரிகளே!

உங்கள் உழைப்பால்தான் இந்த நாடு தலை நிமிர்ந்து நிற்க முடியும். வெறும் கோஷங்களால் அது நடைபெறாது. இதுவே எங்கள் குடியரசு தினச் செய்தி'' என்று துறைமுகத் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். எம். நாராயணன் அந்தச் சுவரொட்டியில் அச்சிட்டிருக்கிறார். நாட்டு நிலைமையை உணர்ந்த ஒவ்வொருவரையும் சிந்திக்க வைக்கும் விதத்தில் உருக்கமாக இருந்தது இந்தக் குடியரசு தினச் சேதி.

சர்வோதய தினம்

காந்தி ஜெயந்தி, குடியரசு தினம், சுதந்திர தினம், சர்வோதய தினம் ஆகிய நல்ல நாட்கள் நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படும் போது தேச விரோதிகளும் தீய சக்திகளும் திட்டமிட்டாற்போல் சில கொடிய காரியங்களைச் செய்கிறார்கள். இப்படி நல்ல நாட்களாகப் பார்த்துக் காந்தி சிலைகள் உடைக்கப்படுகின்றன. சேலம், ஆம்பூர் ஆகிய நகரங்களில் காந்தி சிலைகள் உடைக்கப்பட்டபின் இப்போது மதுரைக்கு அருகே உள்ள உசிலம்பட்டியில் காந்தி சிலை உடைக்கப்பட்டிருக்கிறது: தமிழ் நாடு அரசும் காந்தி சிலைகளை உடைக்கும் கயவர்களைக் கண்டு பிடிப்பதில் அதிக தீவிரம் காட்டவில்லை. சிலைகளை உடைப்பதைக் கண்டிக்கத் தக்கது என்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் தீவிரம் காட்டப்படும் என்றும் முதல்வர் சட்டசபையில் கூறியுள்ளார்.


சிலைகளை உடைக்கும் தீய காரியங்கள் இப்படி எங்கோ ஒரு மூலையில் நடந்தாலும், நாடு முழுதும் சர்வோதய தினம் சென்ற ஆண்டைவிடச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. கிண்டி காந்தி மண்டபத்திலும், சென்னை மவுண்ட்ரோட்டிலுள்ள காதி கிராமோத்யோக் பவனிலும், ஏராளமான கல்விக் கூடங்களிலும் சர்வோதய தினத்தை விமரிசையாக நடத்தியிருக்கிறார்கள். அண்ணலின் அருளுரைகள் நினைவு கூரப்பட்டிருக்கின்றன.

ம.பொ.சி.யின் வாதம் சரியில்லை


'உலகத் தமிழ் மகாநாட்டின்போது இலங்கையில் நடைபெற்ற சில அசம்பாவிதங்களுக்காக ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் ஸ்ரீலங்கா பிரதமர் சென்னை வந்திருந்த போது தமிழக முதல்வர் கருணாநிதி சென்னை விமான நிலையத்தில் அவரை வரவேற்கப் போகாமல் விட்டிருக்கலாம். வரவேற்றது தமக்குப் பிடிக்கவில்லை' என்பது போல் மேலவையில் திரு ம. பொ. சி. பேசியிருக்கிறார். அந்த வாதம் சரியில்லை. கருத்து மாறுபாடு வேறு. வெளிநாட்டு விருந்தினருக்கு அளிக்க வேண்டிய மரியாதை வேறு. ஸ்ரீலங்கா பிரதமர் நம்நாட்டின் விருந்தினராக வந்திருக்கிறார். அவரை நன்குமதித்து வரவேற்

ராஜாஜி சிந்தனை

பெரிய மண்டியில் தானியம் அளந்து விற்கப்படுவதைப் பார்த்திருக்கிறீர்களா? அளந்து போடுகிறவன் நிறுத்தாமல் அளந்து கொண்டே இருப்பான். அளந்து போடப் போட ராசியிலிருந்து தானியம் சரிந்து விழுந்து குவிந்து கொண்டேயிருக்கும். அந்த மாதிரியே சத்குருவின் உபதேசமும். ஆண்டவனுடைய பெரிய மண்டியில் தானியம் அளந்து போடுகிறான். ஞானமும் உபதேசமும் வந்து குவிந்து கொண்டேயிருக்கும். வழங்கப்படும் தானியம் ஆண்டவனுடையது. சின்ன பலசரக்குக் கடையில் நடைபெறும் வியாபாரம் வேறுவிதம். அங்கே நடைபெறும் வியாபாரத்தில் பண்டம் சீக்கிரம் தீர்ந்து போகும். நூல்களைப் படித்துச் செய்யும் உபதேசத்துக்கும் பக்தியினால் ஆண்டவனுடைய அருளைப் பெற்றுச் செய்யும் உபதேசத்துக்கும் இதுவே வித்தியாசம். அருள் பெற்றுச் செய்யும் உபதேசத்தில் பண்டத்துக்குப் பஞ்சமில்லை. நூலைப் படித்துச் செய்யும் உபதேசத்தில் சரக்கு சீக்கிரம் தீர்ந்து போகும்.


எனக்குத் தேவையான தேர்தல் நிதி
கறுப்புச்சந்தை
மராட்டிய மாநில முதன் மந்திரி
நாயக்









டென்மார்க்கில் உருவாகியுள்ள லேட்டஸ்ட் மாடல் மூக்குக் கண்ணாடிகள்.

நன்றி : டென்மார்க் ரெவ்யூ.











முகத்தின் அழகு மூக்குக் கண்ணாடியில் தெரியும்!



பதே முறை. நல்ல வேளையாக திரு கருணாநிதி ''அரசியல் அடிப்படையில் நமக்குள்ள கடமைகளாலும், பண்பினாலும் இலங்கைப் பிரதமரை நாம் வரவேற்க வேண்டியிருக்கிறது'' என்று நிதானமாக ம. பொ. சி.க்கு மறுமொழி கூறியிருக்கிறார். முதல்வரைப் போலவே ம. பொ. சி.யும் விருந்தினரை மதிக்கும் பண்புள்ளவராக இருந்தும் ஏன் அப்படிப் பேசினார் என்று தெரியவில்லை.

பள்ளி விழாவில் பிரசாரம்

சுதந்திர தின விழா, குடியரசு தின விழா போன்ற விழாக்களை நடத்தும்போது அவற்றுக்கு வருகிற தி.மு.க. அமைச்சர்களைத் திருப்திப்படுத்துவதற்காகப் படிக்க வரும் இளம் பிள்ளைகளை 'அண்ணா நல்ல அண்ணா', 'கலைஞர் நல்ல கலைஞர்', 'உதய சூரியன் உதித்துவிட்டான்' போன்ற பாடல்களைப் பாட வைப்பதும், அண்ணாதுரை போல் வேடமிட்ட ஃபேன்ஸி டிரஸ், கலைஞர் போல் வேடமிட்ட ஃபேன்ஸி டிரஸ் போட்டிகள் நடத்துவதும் உதயசூரியன் போன்று குழந்தைகளை அணிவகுக்கச் செய்து நிறுத்துவதும் அதிகமாகி வருகிறது. இளங் குழந்தைகளை இப்படிக் கட்சி மயமாக ஆக்குவதால் சில ஆசிரியைகள் அந்த விழாக்களுக்கு வருகிற தி.மு.க. அமைச்சர்களின் தயவைப் பெற்று விட முடியலாம். அதற்காகச் சிறு குழந்தைகளைக் கட்சித் தலைவர்கள் பற்றிப் பாட வைப்பதும் கட்சிச் சின்னம் போல் அணிவகுக்க வைப்பதும், அத்துமீறிய காரியங்கள் அல்லவா?

காமாக்ஷியின் சரிதை 4

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

பார்வதி கல்யாண வைபவத்தின்போது சகல லோகங்களும் ஆனந்தமாக இருந்தன. அப்போது மன்மதனுக்கு மட்டும் தேகமில்லாத குறை இருக்க வேண்டாம் என்று அம்பாளும் ஈசுவரனும் கிருபை கொண்டு அவனுக்கு எரிந்துபோன சரீரத்தை மறுபடியும் தந்தனர்.

தபஸ்வியாக இருந்த பரமேசுவரன் பார்வதியைத் திருக்கல்யாணம் செய்துகொண்டார். ஒருவிதத்தில் இது தன்னுடைய வெற்றிதான் என்று மன்மதன் சந்தோஷப்பட்டான். இதைத் தன் வெற்றியாக அகில லோகமும் மதிக்கச் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டான். பரமானுக்கிரக மூர்த்தியான அம்பாளைப் பிரார்த்தித்தாலே தன் ஆசை நிறைவேறும் என்று கண்டு கொண்டான்.

சர்வ வியாபினியாக இருக்கிற பரப்பிரம்ம சக்தியான அம்பாள், காஞ்சி மகா க்ஷேத்திரத்தில் விசேஷ சாந்நித்தியத்தோடு காமாக்ஷியாக எழுந்தருளியிருப்பதை அறிந்துகொண்டான். பூலோகத்தை ஒரு ஸ்திரீயாகப் பாவித்தால் அவளுக்குப் பூட்டிய ஒட்டியாணம் மாதிரி காஞ்சிபுரம் உலகத்தின் மையமாக இருக்கிறது. அதில் நாபி ஸ்தானத்தில் காமாக்ஷியின் வாசஸ்தானமான பிலாகாசம். பிலம் என்றால் குகை. நாபிக்கொடியிலிருந்து கர்ப்பத்திலிருக்கிற குழந்தை ஆகாரம் பெறுகிறமாதிரி, சகல ஜீவராசிகளும் இந்தப் பிலாகாசத்திலிருந்துதான் அம்பாளின் அநுக்கிரகத்தால் சகல சக்திகளையும் பெறுகிறார்கள். ஆகாசம் என்பதே ஆத்ம ஸ்வரூபம். எங்கும் பரவியிருக்கும் வெளியை மஹாகாசம் என்பார்கள். அந்த வெளியே நமக்குள்ளே ஆத்மாவாக, ஞான மயமாக இருக்கிறபோது, பேரம்பலம் சிற்றம்பலமாகிறது. மஹாகாசம் தஹராகாசமாகிறது. சிதம்பரம் என்பதும் அதுதான். 'சித்' என்றால் 'ஞானம்'; 'அம்பரம்'' என்றால் ஆகாசம். நம்மை நாமே அறிந்து கொள்ளும் ஞானம் உண்டாகும்போது, நம்முடைய சகல எண்ணங்களுக்கும் மூலமான வஸ்து, நம்முடைய சுவாசத்துக்கும் மூலமாக இருதய ஆகாசமாக இருப்பதை அநுபவிக்க முடியும். லோகத்தையே ஒரு புருஷ வடிவமாகக் கொண்டால் அந்த விராட் புருஷனின் இருதய ஸ்தானம்தான் சிதம்பர க்ஷேத்திரத்தில் ரகசியமாக உள்ள ஆகாசம். அதுவேதான் காஞ்சிபுரத்தில் பிலாகாசமாகவும் இருக்கிறது. 'காமகோஷ்டம்' என்று சம்ஸ்கிருதத்திலும் 'காமகோட்டம்' என்று தமிழிலும் சொல்லப்படுகிற காமாக்ஷி ஆலயத்தின் கர்ப்பகிருஹத்தில் பிலாகாசம் இருந்தாலும், அதன் சக்தி காஞ்சி மண்டலம் முழுவதிலுமே பரவியுள்ளது.

பிலாகாச ரூபிணியான அம்பிகை காமனின் கரும்பு வில்லையும், மலர் பாணங்களையும் தாங்கிக் காமாக்ஷியாக அமர்ந்திருக்கிறாள். ராஜராஜேசுவரியான அவளை வேண்டினாலே தன் காரியம் நடக்கும் என்று மன்மதன் காஞ்சிபுரத்துக்கு வந்து தபஸ் செய்தான். கருணாமூர்த்தியான அம்பாள் அவனுக்குப் பிரஸன்னமானாள். ''அம்மா! என்னைப் பஸ்மம் செய்த அதே பரமேசுவரன் பிற்பாடு உன்னிடம் பிரேமை கொண்டான். காமத்துக்கு அதிகாரியாக என்னை நீதான் நியமித்தாய். அதனால் எவர் பிரேமை கொண்டாலும் அது என் அதிகார எல்லையைச் சேர்ந்தது'' என்று jurisdiction பேசினான் மன்மதன். ''பரமேசுவரன் உன்னை விவாகம் செய்து கொண்டது என் வெற்றிதான். ஆனால் அவர் என்னைச் சாம்பலாகச் சுட்டெரித்தது தான் லோகப் பிரசித்தமாயிருக்கிறதே ஒழிய, நான் அவரை ஜயித்தது எங்குமே பிரகடனமாகவில்லை. எல்லோருக்கும் மாதாவாக இருக்கிற நீதானம்மா, இந்தக் குழந்தையிடமும் கருணை கொண்டு, என்னை ஜயசாலி என்று பிரகடனப்படுத்த வேண்டும்'' என்று காமாக்ஷியைப் பிரார்த்தித்தான் மன்மதன்.

கருணை நிறைந்த அம்பிகை அக்குழந்தைக்கு மனமிரங்கினாள்;

உடனே, கைலாசத்திலும் மற்றும் சகல க்ஷேத்திர சிவாலயங்களில் உள்ள அம்பாள் சந்நிதிகளிலும் இருக்கிற தன்னுடைய சக்தியை ஆகர்ஷித்து, இந்தப் பிலாகாசத்துக்குள் இழுத்துக் கொண்டு விட்டாள். கைலாசத்தில் பார்வதியின் சக்தியைக் காண முடியவில்லை. அப்படியே பூலோகத்தில் எல்லாச் சிவன் கோயில்களிலும் உள்ள அம்பாள் மூர்த்திகள் ஜீவகளை இழந்து விட்டன. கைலாசத்திலும், மற்ற க்ஷேத்திரங்களிலும் எழுந்தருளியிருக்கிற பரமேசுவரன் தம்முடைய பிரிய பத்தினியை இழந்து விட்டது போல் தவிக்க ஆரம்பித்து விட்டார். (அவருக்கு மன்மதனின் ஆசையும், அம்பாளின் லீலையும் தெரியாதா? அவன் ஆசைப்பட்டபடிதான் இருக்கட்டுமே என்று விட்டுக் கொடுத்து அவரும் விளையாடினார்!) க்ஷேத்திரந்தோறும் இப்படி சிவன் தவிப்பதையும் கைலாசத்திலும் அவர் பரிதவிப்பதையும் பார்த்த பிரம்மா காமாக்ஷியிடம் ஈசுவரனுக்காகப் பரிந்து தூது பேசினார்.

'' பரமேசுவரன் மன்மதாவஸ்தைக்கு ஆளானது இப்போது ஜகப் பிரசித்தியாகி விட்டது. மன்மதன் வேண்டியதும் இது தான். அதற்காகவே இப்படி என்னுடைய சகல கலைகளையும் இங்கேயே ஆகர்ஷித்துக் கொண்டேன்'' என்று அம்பாள் பிரம்மாவுக்குக் கூறி, மறுபடியும் ஜீவகளையைக் கைலாசத்துக்கும் மற்ற சகல க்ஷேத்திரங்களுக்கும் அனுப்பி வைத்தாள். அவற்றில் மறுபடியும் அம்பிகையின் சாந்நித்தியம் உண்டாயிற்று. பரமேசுவரனும் திருப்தி அடைந்தார்.

''காமாக்ஷி விலாஸ''த்தில் காணப்படும் இந்தப் புராண வரலாற்றுக்குச் சரித்திர ரீதியிலும் கல்வெட்டுக்களின் மூலம் நிரூபணம் இருக்கிறது.



சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி



ஒன்பதாம் அத்தியாயம்

ரதியின் புன்னகை

மாமல்லரின் ஓலையில் ஒரு பகுதியைச் சிவகாமி நினைத்து நினைத்து ஆனந்தித்துக் கொண்டே வீடு நோக்கி நடந்தாள். அப்படி அவளை மெய்மறக்கச் செய்தது ஓலையின் கடைசிப் பகுதியேயாகும். சக்கரவர்த்தியின் குமாரனாயிராமல் ஆயனரிடம் சிற்பக் கலை கற்கும் சீடனாயிருக்க விரும்புவதாக மாமல்லர் தெரிவித்திருந்தாரல்லவா! ஆகா! இந்த விஸ்தாரமான பரத கண்டத்தில் மூன்றில் ஒரு பாகத்தைத் தனி அரசு புரியும் சக்கரவர்த்தியின் குமாரர் தமக்குரிய அந்த மகத்தான சாம்ராஜ்யத்தை வேண்டாம் என்று வெறுத்துத் தள்ளச் சித்தமாயிருக்கிறார்! எதற்காக? அரண்மனை மான்யம் பெற்று ஜீவனம் செய்யும் ஆயனச் சிற்பியின் மகளுக்காக! அந்தப் பெண்ணிடம் தாம் கொண்ட காதல் நிறைவேறுவதற்கு இந்தச் சாம்ராஜ்யம் தடையாயிருக்கிறதென்பதற்காக! இம்மாதிரி அதிசயத்தைக் கதையிலோ காவியத்திலோ கேட்டதுண்டா?

''ரதி! உன் தோழி சிவகாமியைப் போல் பாக்கியசாலியான பெண் இந்த ஈரேழு பதினாலு லோகத்திலும் இல்லையடி!'' என்று கூறிச் சிவகாமி தன்னைத் தொடர்ந்து வந்த மானின் முகத்தை இரு கரங்களாலும் பிடித்து நிமிர்த்தினாள். ரதியோ தன் அழகிய கண்களை அகல விரித்து அவளை ஆவலுடன் நோக்கிற்று.

''இதோ பார், ரதி! நீயும் அதிர்ஷ்டசாலிதான்! எட்டு மாதங்களுக்கு முன்பு உன்னிடம் மாமல்லரைப் பற்றி நான் குறைவாகக் கூறியதை மறந்துவிடு; 'இன்று இவர் கமலி வீட்டுக்கு நான் போகக் கூடாது என்கிறார். நாளைக்கு

ரதியை உன்னுடன் அரண்மனைக்கு அழைத்து வரக் கூடாது என்பார்! இப்படிப்பட்ட பெரிய மனிதர்களின் உறவு நமக்கு ஒத்து வராதடி அம்மா!' என்று சொன்னேனல்லவா? அதே பல்லவ குமாரர்தான் இன்றைக்கும் 'இராஜ்யம் என்னத்துக்கு, சிவகாமி! எனக்கு நீயே போதும்!' என்கிறார். அவர் சொல்வது நியாயந்தானே? ரதி! எனக்கு அவரும், அவருக்கு நானும் இருந்தால் போதாதா? இராஜ்யம் என்னத்துக்கு? சண்டை, கொலை, சாவு எல்லாம் என்னத்துக்கு?''

இவ்விதம் கூறி ரதியின் இரண்டு தூக்கிய காதுகளுக்கும் நடுவில் சிவகாமி முத்தமிட்டுவிட்டு, மறுபடியும் சொல்லுவாள்:

''ரதி, உன்பாடு யோகந்தான்! மாமல்லரும் நானும் மனித சஞ்சாரமே இல்லாத நடுக் காட்டில் பர்ண சாலை கட்டிக் கொண்டு ஆனந்த வாழ்க்கை நடத்தப் போகிறோம். அப்போது இந்தச் சுகப்பிரம்ம ரிஷியை அடித்துத் துரத்திவிட்டு உன்னை மட்டுந்தான் எங்களுடன் வைத்துக் கொள்ளப் போகிறேன். உனக்கு வேலை நிரம்ப இருக்கும், ரதி! எனக்கும் மாமல்லருக்கும் இடையில் நீ அடிக்கடி தூது போக வேண்டியதாயிருக்கும்.''

ரதி கண்களினாலேயே ஒரு புன்னகை புரிந்து விட்டு, ''போதும் இந்த அசட்டுத்தனம்!'' என்பதுபோல் தலையை ஆட்டிவிட்டு, சிவகாமியின் கையிலிருந்து திமிறிக் கொண்டு புல் மேயச் சென்றது.

''அம்மா! சிவகாமி!'' என்ற குரலைக் கேட்டதும் சிவகாமி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவள் பார்த்த இடத்தில் செடி கொடிகளை விலக்கிக் கொண்டு ஆயனர் நிற்பதைக் கண்டாள். தான் ரதியுடன் பேசிக் கொண்டிருந்தது அவர் காதில் விழுந்ததோ என்ற எண்ணத்தினால் அவளுடைய முகத்தில் நாணமும் அச்சமும் கலந்து தோன்றின.

ஆனால், மலர்ந்த முகத்துடன் ஆயனர் கூறிய வார்த்தைகள் அவளுடைய பயத்தைப் போக்கின.

''குழந்தாய்! எனக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. நடுக் காட்டிலே யாரோடு பேசிக் கொண்டிருக்கிறாய் என்று பார்த்தேன். ரதியுடன் பேசிக் கொண்டிருக்கிறாயா? பாவம்! நீ என்ன செய்வாய்? உன்னோடு பேசுவதற்குக்கூட





இவ்விடத்தில் யாரும் இல்லை. பொழுது போவதே உனக்குக் கஷ்டமாய்த்தான் இருக்கும். காஞ்சியிலாவது உன் தோழி கமலி இருக்கிறாள்....''

இப்படிப் பேசிக் கொண்டே நெருங்கி வந்த ஆயனரைச் சிவகாமி கட்டித் தழுவிக் கொண்டு, ''அப்பா! உங்களுக்குத் தெரியுமா? கமலி... கமலி...'' என்று மென்று விழுங்கினாள்.

ஆயனர் பதற்றத்துடன், ''ஐயோ! கமலிக்கு என்ன அம்மா? ஏதாவது உடம்புக்கு வந்திருக்கிறதா?'' என்று கேட்டார்.

''ஆமாம், அப்பா! கமலிக்கு உடம்பிலேதான் வந்திருக்கிறதாம்!'' என்று கூறிவிட்டுச் சிவகாமி இடிஇடியென்று சிரித்தாள்.

அதைப் பார்த்த ஆயனர் விபரீதமாக ஒன்றுமிராது என்று தீர்மானித்துக் கொண்டு, ''பின்னே, என்ன சிவகாமி! ஒருவேளை இங்கே வருகிறதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறாளோ?'' என்றார்.

''இல்லை, அப்பா இல்லை'' என்று சொல்லிக் கொண்டே சிவகாமி ஆயனரின் காதின் அருகில் நெருங்கி, ''கமலி வயிற்றில் சின்னக் கண்ணன் வந்திருக்கிறானாம்!'' என்றாள்.

ஆயனர் சற்று நிதானித்து விஷயம் இன்னதென்று தெரிந்து கொண்டார். முன்னைவிட அருமையுடன் சிவகாமியை அணைத்துத் தழுவிக் கொண்டு, ''சந்தோஷம், அம்மா! சிவகாமியின் கல்யாணத்தின் போதே நான் ஆசீர்வாதம் பண்ணினேன்......'' என்றார்.

''அப்பா! உங்கள் செல்வக் குமாரிக்கு எப்போது கல்யாணம் ஆயிற்று?'' என்றாள் சிவகாமி.

தாம் வாய் தவறி, 'சிவகாமி' என்று சொல்லிவிட்டது ஆயனருக்குச் சட்டென்று புலப்பட்டது. அவர் ஓர் அசட்டுப் புன்னகை செய்துவிட்டு, ''என்ன அம்மா சொன்னேன்?



'சிவகாமியின் கல்யாணத்தின்போது' என்று சொல்லிவிட்டேனா? அதனால் என்ன? உனக்கும் ஒரு நாள் கல்யாணம் நடக்கத்தான் போகிறது. நான் சொல்ல வந்தது என்னவென்றால், கமலியின் கல்யாணத்தின்போது நான் அவளுக்கு ஆசீர்வாதம் செய்தேன்; 'சீக்கிரத்தில் உனக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும். அவன் என்னிடம் சிற்பக் கலை கற்றுக் கொள்ள வர வேண்டும்' என்று.....''

இவ்விதம் கூறிய ஆயனர் பேச்சை நிறுத்திவிட்டு மௌனத்தில் ஆழ்ந்தார். அவருடைய உள்ளமானது சிவகாமியின் விவாகத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. பரஞ்சோதிக்கு அவளை மணம் செய்விக்கலாம் என்று தாம் முன்னம் எண்ணியதும் நினைவு வந்தது. அவனோ இப்போது பெரிய போர் வீரனாகவும் கோட்டைத் தளபதியாகவும் ஆகியிருக்கிறான். கேவலம் ஒரு சிற்பியின் மகளை அவன் மணந்து கொள்ள இணங்குவானா?

''அப்பா! என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று சிவகாமி கேட்கவும், ''ஒன்றுமில்லை, அம்மா! பரஞ்சோதியுடன் நான் பேசிக் கொண்டிருந்தபோது நீ திடீரென்று எங்கே போய் விட்டாய்? அவனிடம் சக்கரவர்த்தி ஒரு முக்கியமான சமாசாரம் சொல்லி அனுப்பியிருக்கிறார். அதைப் பற்றி உன் அபிப்பிராயத்தைக் கேட்கலாமென்று பார்த்தால், உன்னைக் காணோம்; வா! வீட்டுக்குப் போய்ச் சாவகாசமாகப் பேசலாம். உன் அத்தை நாம் இரண்டு பேரும் சாப்பிடாமல் எங்கே தொலைந்து போய் விட்டோம் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருப்பாள்'' என்றார்.

இருவரும் ஒற்றையடிப் பாதையில் மௌனமாக நடந்தார்கள். ஆயனரின் உள்ளம் சிவகாமியின் வருங்காலத்தைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. சிவகாமியின் உள்ளமோ, தேன் மலரை மொய்க்கும் வண்டைப் போல் மகிழ மரப் பொந்தில் இருந்த மாமல்லரின் ஓலையைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

பத்தாம் அத்தியாயம்

ஆனந்த நடனம்

''அப்பா! நான் நடனம் ஆடி வெகு காலம் ஆகிவிட்டதே; இன்றைக்கு ஆடட்டுமா!'' என்று சிவகாமி கேட்டாள்.

இருவரும் வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு மரத்தடியில் கிடந்த கல்லின் மீது உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்து மரத்தடியிலே வர்ணம் அரைக்கும் கலுவங்களும், வர்ணம் காய்ச்சும் அடுப்புகளும், சட்டிப் பானைகளும் கிடந்தன.

ஆயனர் சிறிது அதிசயத்துடன் சிவகாமியை உற்று நோக்கினார்.

''இன்றைக்கு என்ன, குழந்தாய், உன் முகம் இவ்வளவு களையாயிருக்கிறது?'' என்று வினவினார்.

உடனே மறுமொழி சொல்ல முடியாமல் சிவகாமி சிறிது திகைத்துவிட்டு, ''பிறகு கமலியைப் பற்றிக் கேள்விப்பட்டதிலிருந்து எனக்கு உற்சாகமாயிருக்கிறது, அப்பா! காஞ்சிக்குப் போய்க் கமலியைப் பார்த்துவிட்டு வரலாமா?'' என்றாள். உடனே, தான் பிழை செய்துவிட்டதை உணர்ந்து நாவைப் பற்களினால் கடித்துக்கொண்டு, ''ஆமாம், அப்பா! சக்கரவர்த்தி ஏதோ நமக்குச் செய்தி அனுப்பியதாகச்



பயமுறுத்தும் அஜீரணமா?
உடன் நிறுத்த ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் அருந்துங்கள். மீண்டும் முன்போல் சாப்பிடத் தொடங்குங்கள்!

அஜீரணத்தை அசட்டை செய்தால் பசியை மட்டுமின்றி பொறுமையையும் இழந்து விடுகிறீர்கள். சிடுசிடுப்பும், எரிச்சலூட்டும் வலியும் ஏற்படுகின்றன.

ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் அருந்துங்கள். வெகுவிரைவில் அது அமிலங்களைச் சமனப்படுத்தி உங்கள் வயிற்றுக்குப் பாதுகாப்பளிக்கிறது. வலியைப் போக்கி எல்லாவித அஜீரணங்களி லிருந்தும் முழு நிவாரணம் அளிக்கிறது.

*வயிற்றுக் கடுப்புக்கு ஓபியம் கலந்த ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் கேட்டு வாங்குங்கள்.



C. J. ஹ்யூலட் அண்ட் சன் (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
சென்னை 600002, கல்கத்தா 700001

SAA/CJH/1192


போஷாக்கு அவசியம்

குழந்தை முதல் முதியோர் வரை குதூகல வாழ்க்கைக்கு

உங்கள் உணவில் பல ஊட்டச்சத்துக்கள் இல்லாமல் இருக்கலாம். ஆல்போ-சாங் அக்குறையைப் போக்கி, அச்சத்துக்களை உங்களுக்கு அளிக்கிறது. கால்ஷியம், பாஸ்பேட்டுகள், கனிச்சத்துக்கள், அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள், சக்தி மிக்க இந்திய ஔஷதங்கள் ஆகியவற்றினால் ஆன ஆல்போ-சாங் நல்ல ஆரோக்கியத்தைப் பெற சிறந்த ஒரு டானிக். வளரும் குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள், வயதானவர்கள் மற்றும் உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்குமே ஏற்றது ஆல்போ-சாங்.

ஆல்போ-சாங் நீங்கள் உண்ணும் சாதாரண உணவை முழுமையாக்கி, ஜீரணசக்தியைத் தூண்டி விடுகிறது. உணவுச் சத்துக்கள் உடலில் நன்கு கிரகிக்கப்படுவதற்கு உதவுகிறது. அத்துடன் உங்கள் நரம்புகள் சோர்ந்து விடாதபடி பாதுகாக்கிறது. ஆல்போ-சாங் பவுடர் வடிவிலும், மாத்திரை வடிவிலும் கிடைக்கிறது. மாத்திரைகள் சர்க்கரை சேர்க்கப்படாதவை, எனவே நீரிழிவு நோய் உள்ளவர்களும் சாப்பிடலாம்.





ஆல்போ-சாங்

உங்கள் குடும்பத்தினர் அனைவரையும் இயற்கையான ஆரோக்கியத்துடன் இருக்கச் செய்கிறது.

ஜே & ஜே. டீஷேன்
லேபொரேட்டரீஸ் பிரைவேட் லிமிடெட்.
ஹைதராபாத்

தலைவலியா? உடல்வலியா? ஃப்ளூவா?



FDS AS 1919 TM

ஸலோஃபென்

வலி நிவாரண மாத்திரை

அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு

தலைவலி, ஃப்ளூ, பல்வலி, உடல்வலி ஆகியவற்றிலிருந்து ஸலோஃபென் உடனடியாக நிவாரணம் அளிக்கிறது. அது நம்பகமானது. டாக்டர்கள் கையாளும் மருத்துவ முறைப்படி ஸலோஃபென் தயாரிக்கப்படுகிறது.



சொன்னீர்களே, அது என்ன?'' என்று கேட்டாள்.

''எதிரி சைனியம் வடபெண்ணை ஆற்றைக் கடந்து விட்டதாம். காஞ்சியை நெருங்கிக் கொண்டிருக்கிறதாம். காஞ்சியை முற்றுகை போட்டாலும் போடுமாம். ஆகையால், 'ஒன்று, நீங்கள் காஞ்சி நகருக்குப் போய்விடுங்கள்; அல்லது சோழ தேசத்துக்குப் போங்கள்' என்று சக்கரவர்த்தி சொல்லி அனுப்பினாராம். நீ என்ன சொல்லுகிறாய், அம்மா ?''

''நான் என்ன சொல்ல, அப்பா ! எனக்கு என்ன தெரியும்? தங்கள் இஷ்டம் எதுவோ, அதுதான் எனக்கு இஷ்டம்.......''

''என் இஷ்டம் இங்கேயே இருக்க வேண்டும் என்பதுதான். இந்தக் காட்டைவிட்டு வேறு எங்கே போனாலும் எனக்கு மன நிம்மதியிராது'' என்றார் ஆயனர்.

''எனக்கும் அப்படித்தான், அப்பா ! இங்கேயே நாம் இருந்துவிடலாமே ?'' என்றாள் சிவகாமி.

* * *

மாமல்லரின் ஓலையில், தாம் வந்து அவளைச் சந்திக்கும் வரையில் ஒன்றும் முடிவு செய்ய வேண்டாம் என்று எழுதியிருந்ததை நினைத்துக் கொண்டுதான் மேற்கண்டவிதம் சிவகாமி சொன்னாள்.

காஞ்சிக்குப் போய்க் கமலியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஒரு பக்கத்தில் அவளுக்கு அளவில்லாமல் இருந்தது. ஆனால், எட்டு மாதங்களுக்கு முன்பு திருநாவுக்கரசரைப் பார்ப்பதற்காகக் காஞ்சிக்குப் போய்த் திரும்பியதும், முதன் முதலாக மாமல்லர் தனக்கு எழுதிய ஓலையை நினைவுபடுத்திக் கொண்டாள். ''அரண்மனை நிலா மாடத்தில், முத்துப் பதித்த பட்டு விதானத்தின் கீழே, தங்கக் கட்டிலின் மேல் விரித்த முல்லை மலர்ப் படுக்கையிலே படுத்துறங்க வேண்டிய நீ, என்னுடைய ரதசாரதியின் வீட்டில் தரையிலே விரித்த கோரைப் பாயில் படுத்துறங்குகிறாய் என்பதை எண்ணி எண்ணி என் மனம் புண்ணாகிறது!'' என்று பல்லவ குமாரர் எழுதியிருந்தார். இதிலே, அவர் சிவகாமியிடம் கொண்டிருந்த காதலின் மேன்மையும் வெளியாயிற்று; கண்ணபிரான் வீட்டிலே வந்து சிவகாமி தங்குவதை அவர் அவ்வளவாக விரும்பவில்லை என்பதும் புலனாயிற்று.

இதைப் பற்றிச் சிவகாமியின் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடந்தது. கமலியிடம் அவளுக்கிருந்த நட்புணர்ச்சியும், பல்லவ குமாரரிடம் அவள் கொண்டிருந்த காதல் வெறியும் போராடின. முடிவிலே காதல்தான் வெற்றிபெற்றது.

''ஆஹா ! எத்தகைய பேதை நாம்! மகிதலம் போற்றும் மண்டலாதிபதியின் குமாரரிடம் காதல் கொள்ளத் துணிந்து விட்டு, அவருடைய கௌரவத்துக்குப் பங்கம் விளையக்கூடிய காரியத்தைச் செய்தோமே?'' என்று வருந்தி, இனிமேல், பல்லவ குமாரரின் விருப்பம் தெரியாமல் காஞ்சிக்கே போவதில்லையென்று தீர்மானித்திருந்தாள். ஆகையினாலேதான் மேற்கண்டவாறு சொன்னாள்.

அதற்கு மறுமொழியாக ஆயனர் கவலை தொனித்த குரலில் கூறினார் : ''என்ன இருந்தாலும் மகேந்திர பல்லவர் தீர்க்கமான அறிவு படைத்தவர். அவருடைய கட்டளைக்கு மாறாக நடந்தால் ஏதாவது விபரீதம் வருமோ,



என்னவோ ? யாரிடமாவது யோசனை கேட்கலாமென்றால், அதற்கும் ஒருவரும் இல்லை. நாகநந்தியடிகளாவது வரக் கூடாதோ? எட்டு மாதங்களுக்கு முன்பு போனவர் இன்னும் வரவில்லை. பிக்ஷுவுக்கு என்ன நேர்ந்து விட்டதோ, என்னவோ ?''

ஆயனரின் மனச் சோர்வைக் கவனித்த சிவகாமி அவரை உற்சாகப்படுத்தும் பொருட்டு, மறுபடியும், ''அப்பா ! நான் நடனம் ஆடி வெகு காலமாயிற்றே ! இன்றைக்கு ஆடுகிறேன்; பார்க்கிறீர்களா ?'' என்றாள்.

'சிவகாமியின் நாட்டியத்தை நானும் பார்க்கலாமா?' என்று ஒரு குரல் கேட்டது.


இரண்டு பேரும் ஏககாலத்தில் திரும்பிப் பார்த்தார்கள். சற்றுத் தூரத்தில் நாகநந்தி அடிகள் நின்று கொண்டிருந்தார்.

''புத்தம் சரணம் கச்சாமி''
''தர்மம் சரணம் கச்சாமி''
''சங்கம் சரணம் கச்சாமி''

என்று நாகநந்தி கோஷித்து முடித்ததும், ஆயனர், ''அடிகளே! வரவேணும் ! வரவேணும் ! நினைத்த இடத்தில்

நினைத்த போது வந்து அருள் செய்கிறவர் கடவுள்தான் என்று பெரியோர் சொல்லுவார்கள். தாங்களும் கடவுள் மாதிரி வந்திருக்கிறீர்கள். உங்களைப் பற்றி இப்போதுதான் பேசிக் கொண்டிருந்தோம்'' என்றார்.

''அப்படியா? இந்தக் காவி வஸ்திர தாரியைப் பற்றி நினைவு வைத்துக் கொண்டிருந்தீர்களா? சிவகாமியின் திருநாவினால்கூட நாகநந்தியின் பெயர் உச்சரிக்கப்பட்டதா? அவ்விதமானால் என்னுடைய பாக்கியந்தான். ஆயனரே! உங்கள் குமாரியின் புகழ் தேசமெல்லாம் பரவியிருக்கும் அதிசயத்தை நான் என்னவென்று சொல்வேன்? திருவதிகைக்கும் தில்லைக்கும் போனேன்; உறையூருக்குப் போனேன்; வஞ்சிக்குப் போனேன்; நாகைக்கும் போயிருந்தேன்; இன்னும் தெற்கே மதுரைப் பதிக்கும் கொற்கைத் துறைமுகத்துக்கும் சென்றிருந்தேன். எங்கே போனாலும், எனக்கு முன்னால் சிவகாமியின் புகழ் போயிருக்கக் கண்டேன். காஞ்சியிலிருந்து நான் வந்ததாகத் தெரிந்ததும் எல்லாரும் சிவகாமியின் பரதநாட்டியக் கலையைப் பற்றியே கேட்டார்கள். புத்த பிக்ஷுக்களும் ஜைன முனிவர்களும் கேட்டார்கள். சைவப் பெரியார்களும் வைஷ்ணவ பக்தர்களும் கேட்டார்கள். உறையூரில் சோழ மன்னர் கேட்டார்; மதுரையில் பாண்டிய மன்னர் கேட்டார்; சிதம்பரத்திலே சிற்பிகள் கேட்டார்கள்! நாகைப்பட்டினத்திலே சீன தேசத்திலிருந்து வந்திருக்கும் சித்திரக்காரர்கள் கேட்டார்கள். ஆயனரே! இப்பேர்ப்பட்ட கலைச் செல்வியைப் புதல்வியாகப் பெற நீர் எவ்வளவோ பாக்கியம் செய்திருக்க வேண்டும்...''



இவ்வாறு, புத்தபிக்ஷு சொல்மாரி பொழிந்து வருகையில் ஆயனரும் சிவகாமியும் இடையில் பேசச் சக்தியற்றவர்களாய்ப் பிரமித்து நின்றார்கள். கடைசியில் நாகநந்தி, ''ஓ, மகா சிற்பியே! சென்ற எட்டு மாதங்களுக்குள் சிவகாமியின் நடனத் திறமை இன்னும் எவ்வளவோ வளர்ந்திருக்க வேண்டுமே? தென்னாடெல்லாம் புகழும் நடனராணியின் நாட்டியத்தைப் பார்க்கும் பாக்கியம் இன்று எனக்குக் கிட்டுமா?'' என்றார்.

நாகநந்தியின் விஷயத்தில் சிவகாமியின் மனப்பாங்குகூட அவருடைய புகழுரைகளினால் ஓரளவு மாறிவிட்டது. எனவே ஆயனர், ''ஆடுகிறாயா, அம்மா?'' என்று கேட்டதும், உடனே ''ஆகட்டும், அப்பா!'' என்றாள் சிவகாமி.

* * *

மூவரும் வீட்டுக்குச் சென்றதும், சிவகாமி ஒரு நொடியில் நடன உடை தரித்துக் கொண்டு நாட்டியத்துக்கு ஆயத்தமாக வந்து நின்றாள். அவளுடைய முகத்திலும் மேனி முழுவதிலுமே ஒரு புதிய ஆனந்தக் கிளர்ச்சி காணப்பட்டது. மாமல்லரின் காதல் கனிந்த மொழிகளும், அவளுடைய கலைச் சிறப்பைக் குறித்து நாகநந்தி கூறிய புகழுரைகளும் அத்தகைய கிளர்ச்சியை உண்டுபண்ணியிருந்தன.

ஆயனர் போட்ட தாளத்துக்கிசையச் சிவகாமி நிருத்தம் ஆட ஆரம்பித்தாள். அதில் பாட்டு இல்லை, பொருள் இல்லை, உள்ளக் கருத்தை வெளியிடும் அபிநயம் ஒன்றும் இல்லை.

ஒரே ஆனந்த மயமான ஆட்டந்தான்.

சிவகாமியின் ஒவ்வோர் அங்கத்தின் அசைவிலும் அந்த ஆனந்தம் பொங்கி வழிந்தது.

ஆஹா! அந்த ஆனந்த நடனத்திலே, எத்தனை விதவிதமான நடைகள்? மத்தகஜத்தின் மகோன்னதமான நடை, பஞ்சகல்யாணிக் குதிரையின் சிருங்கார நடை, துள்ளி விளையாடும் மான் குட்டியின் நெஞ்சையள்ளும் நடை, வனம் வாழ் மயிலின் மனமோகன நடை, அன்னப் பட்சியின் அற்புத அழகு வாய்ந்த நடை - இவ்வளவு நடைகளையும் சிவகாமியின் ஆட்டத்திலே காணக் கூடியதா யிருந்தது.

ஆட்டம் ஆரம்பித்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் சிவகாமி நடனம் ஆடுவதாகவே தோன்றவில்லை. தன் செயல் என்பதையே இழந்து அவள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்பதாகவே தோன்றியது. ஆயனரும் தம்மை மறந்து, கால எல்லையையெல்லாம் கடந்த காலாதீதமான மனநிலைக்குப் போய்விட்டார். (தொடரும்)


Hosiery made of pure
GRASIM
STAPLE FIBRE
has a better appearance, fuller feel, equal stretch, excellent durability, and high dimensional stability
If you are in the manufacturing line, Grasim Staple Fibre could lead you to bigger Sales, bigger Profits. A slight modification in your knitting methods such as increasing the courses per inch will help you to manufacture firm and compact knitted garments from 100% Staple Fibre.
GR
THE GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD.
Birlagram, Nagda (M.P.)



கண்ணாமூச்சி

ஒரு நாடகம் ஒரு சினிமா டைரக்டரின் கண்ணோட்டத்தில் தயாரிக்கப்பட்டால் எப்படி இருக்கும் என்று பார்க்க ஆசைப்பட்டால் டைரக்டர் கே. பாலசந்தரின் ''கண்ணாமூச்சி'' நாடகம் பார்க்க வேண்டும்!

முக்கால் மணி நேரத்துக்குள் ஒரு சுவை மிகுந்த நகைச்சுவை நாடகம், விறுவிறுப்புடன் நடந்து முடிந்து விடுகிறது. இது டைரக்டர் கே. பாலசந்தரின் குறுகிய காலத் தயாரிப்பு — மூன்றே நாட்களில், பிரபல சினிமா நடிக, நடிகையர்களுடன் நாடகத்தை மேடையேற்றியிருக்கிறார்! பெரிய சாதனை.

ஒரு குடும்பம்; அதில் அப்பா, அம்மா, பிள்ளைகள், பெண் ஆகியவர்கள் இருக்கின்றனர். நிதி வசூலிக்க ஒரு பெண் வருகிறாள். குடும்பத் தலைவர் மிகவும் கஞ்சத்தனமுள்ளவர்; மின்சாரச் செலவைக் குறைக்க வீட்டில் விளக்கே ஏற்ற மாட்டார். அவர் பிள்ளைகளில் மூத்தவன் ஒரு டாக்டர்; இளையவன், ஒரு டீகாலேஜ் மாணவன். பெண் ஒரு 'டீகாலேஜ் கர்ல்'. (நாடகத்துக்குச் சுவையூட்ட இவ்வளவு பாத்திரங்கள் போதாவா?).

குடும்பத் தலைவர் (கஞ்சத்தனம் உள்ளவர்) இருட்டின பிறகும் விளக்கேற்றாமல் இருப்பது தான் நாடகத்தின் உயிர்நாடி;.

'இருட்டில் நடக்கும் நாடகமா? அதைப் பார்த்து ரசிப்பதா?' என்று நீங்கள் கேட்கலாம். அதைத்தான் மிகவும் சுவாரசியமாகச் செய்திருக்கிறார் டைரக்டர் பாலசந்தர். 'இனி நடக்கும் காட்சிகள் 'இருட்டில் நடப்பவை' என்று மூன்று தடவை ஒலிபெருக்கியின் மூலம் சொல்லிவிட்டுக் காட்சியைத் தொடங்கிவிடுகின்றனர் (நல்ல வெளிச்சத்தில்தான்!) ஆனால் நாடக பாத்திரங்கள் உடனே இருட்டில் தட்டித் தடுமாறி, முட்டி மோதும் பாவனையில்...ஒரே ரகளைதான் போங்களேன்!


நிதி வசூலிக்க வந்த இளம் பெண்ணுடன் குடும்பத் தலைவர் தடுமாறுதல், வீட்டில் நிலவும் கும்மிருட்டைப் பயன்படுத்திக்கொண்டு வெளியேற முயலும் பருவப் பெண், அந்த இருட்டைப் பயன்படுத்திக்கொண்டு அப்பாவிடம் பணத்தைத் தட்டிக் கொண்டு போகும் பையன், கஞ்சத்தனமுள்ள கணவனுக்குத் தெரியாமல் ஒரு பெண்ணுக்கு உதவப் பழைய துணிகளை மூட்டையாகக் கட்டி வைத்துக் கொண்டு தடுமாறித் தவிக்கும் அம்மா, இருட்டில் தடுமாறித் தவித்த இளம் காதலர்கள் — எல்லாரும் வெளிச்சம் வந்ததும், (அதாவது 'விளக்கு ஏற்றப்பட்டு விட்டது!') என்று அறிவிக்கப்பட்டதும் ஒரே வெட்கத்தினால் தவிக்கின்றனர். அதிலும் காதலர்கள் அடைந்த நாணம்... அப்பப்பா! சொல்லி முடியாது போங்களேன்!

இந்தச் சுவை மிகுந்த நகைச்சுவை நாடகத்தில் பங்கு கொண்டவர்கள் — சிவகுமார், கமலஹாஸன், ஜெயசித்ரா, ஸ்ரீ வித்யா, சுபா, ஜெயசுதா, சிவகாமி, பூர்ணம் விசுவநாதன், சசிகுமார், 'ஒரு விரல்' கிருஷ்ணராவ், கிருஷ்ணசாமி, வீரப்பன் ஆகியோர்.

புகழ் பெற்ற சினிமா நடிக, நடிகையர்கள் மேடையில் சக்கைப் போடு போட்டனர் என்று சொல்லவும் வேண்டுமா?

'' 'சொல்லத்தான் நினைக்கிறேன்' பாலசந்தரைப் பாராட்டுகிறோம்'' என்ற கீதா சித்ராவின் விழாவில்தான் இந்த நாடகம் 13—1—74 அன்று நடைபெற்றது. ''கண்ணாமூச்சி'' என்ற நாடகத்தையும், 'என் திரைப் படம் வெற்றி பெற்றதென்றால் அதில் க்ளாப் பாய் முதல் நடிக, நடிகையர், என்னுடன் ஒத்துழைத்த அனைவருக்கும் பங்குண்டு' என்று அடக்கத்துடன் மொழிந்த டைரக்டர் கே. பாலசந்தரையும் நாமும் பாராட்டுகிறோம்!

— காந்தன்



இங்கும் புதுமை! லிங்கம் ஏறக் குறைய முனை இல்லாத ஒரு கூம்பு போல் அடி பருத்து நுனி சிறுத்துச் செல்கிறது. இதில் மேலிருந்து கீழாகக் குறுக்குக் கோடுகள் ஓடுகின்றன. அர்ச்சகர் நிதானமாகக் கர்ப்பூர ஆரத்தி காட்டுகையில் மேலும் பல விசித்திரங்கள் காண்கிறோம். லிங்கத்தின் அடிப் பாகத்தில் ஒரு சிலந்தி செதுக்கப்பட்டிருக்கிறது. யானைத் தந்தங்கள் இரண்டு வேறு லிங்கத்தில் புடைத்தெழுகின்றன! கர்ப்பூர ஜோதியை மேலே தூக்குகையில் லிங்கத்தின் மேற் பாகத்தில் ஒரு கண் பொறித்திருப்பதைக் காண்கிறோம்.

ஆம், திண்ணப்பனாகிய வேடன், இறைவனுக்குத் தன் கண்களையே அகழ்ந்தெடுத்து அப்பி அகமகிழ்ந்து நெகிழ்ந்து கண்ணப்ப நாயனாரானாரே, அந்தக் காளத்தியில்தான் இத்தனை நூதனங்களையும் காண்கிறோம்.

கண்ணப்பர் மட்டுமின்றிச் சிலந்தியும் யானையும் பாம்பும்கூட இங்கு பரமேசுவரனை வழிபட்டு முக்தி பெற்றிருக்கின்றன. லிங்கத் திருமேனியில் சிலந்தியும், தந்தமும் காணப்படுவதோடு, அதில் மேலிருந்து கீழாகத் தெரிகிற வரிகள் ஐந்தலைப் பாம்பையே குறிப்பனவாகும்.

ஆயுள் அர்த்தமுற வாயுஸ்தலம்!

ரா. கணபதி

சிவன் கோயிலில் விபூதிப் பிரசாதம் கிடையாது என்றால் புதுமையாகத்தானே இருக்கிறது? அதுமட்டுமல்ல, வேறெந்த சிவாலயத்திலும் இல்லாத வண்ணம், இங்கு பெருமானை அபிஷேகித்த பச்சைக் கர்ப்பூர தீர்த்தத்தையே பிரசாதமாகத் தருகிறார்கள்.

நந்தியெம் பெருமான் குடிகொண்டிருக்கும் சிவாலயத்துக்குள் சிவப் பிரஸாதம் எதையும் உட்கொள்ளக் கூடாது என்பது பொது விதி. இங்கோ கருவறையிலேயே ஒன்றுக்கு மூன்றாக நந்திகள் இருந்தும் சந்நிதிக்குள் தீர்த்தத்தை உட்கொள்ளும் வழக்கம் இருக்கிறது! நந்திகளுள் ஒன்று தானாகவே தோன்றியது. சுயம்பு லிங்கங்கள் பலவுண்டு. ஆனால் சுயம்பு நந்தியை இங்குதான் காண்கிறோம். இவர்தான் விபூதிக்குப் பதில் தீர்த்தம் அளிக்கப்படுவதற்குக் காரண புருஷர்.

அபிஷேகிக்கப்படும் லிங்கத் திருமேனி இருக்கிறதே, அதிலும் எங்கும் காணாத புதுமைகளைக் காண்கிறோம். முதலாவது, லிங்கமே கண்களுக்குத் தெரிவதில்லை. ஒன்பது வரிகள் கொண்ட ஓர் உலோகச் சட்டம் ஆவுடையாருக்கு மேல் காணப்படுகிறது. அந்த ஒன்பது வரிசைகளில் நவக்கிரகங்கள் ஒவ்வொன்றும் உள்ளன. இது தவிர இக் கோயிலில் நவக்கிரக சந்நிதியே தனியாகக் கிடையாது.

அபிஷேக காலத்தில் இந்தச் சட்டத்தை அகற்றுகிறார்கள். அப்போதுதான் அதற்குப் பின் உள்ள லிங்க மூர்த்தம் நமக்குத் தெரிகிறது.

பொதுவாக, பரமன் பக்தருக்குத் தன்னுருத் தந்து, 'ஸாரூப்யம்' அருளுவார் என்பர். காளத்தி நாதரோ, 'நாகரிகம்' அறியா வேடனாலும், விலங்காலும், பூச்சியாலும், பாம்பாலும் தொழப்பெற்று அவற்றின் வடிவங்களையே தம்மில் கொண்டிருக்கிறார். அடியாரைப் பெருமைப்படுத்தும் அருள்பெரு மூர்த்தி!

'ஸ்ரீ'யை யெல்லாம் 'திரு'வாகவோ, 'அருள்மிகு'வாகவோ மாற்றுகிறவர்கள் கூட 'ஸ்ரீ காளஹஸ்தி' என்றுதான் இத் தலத்தைச் சொல்ல வேண்டும். ஏனெனில் இங்குள்ள 'ஸ்ரீ' என்பது திருமகளையோ, அருள் மிகுதியையோ குறிப்பது அல்ல. 'ஸ்ரீ' என்றால் சிலந்தி என்று ஓர் அர்த்தம். 'காளம்' என்றால் கருநாகம். 'ஹஸ்தி' என்றால் யானை. கைக்கு ஹஸ்தம் என்று பெயர். துதிக்கை படைத்த யானைக்கு ஹஸ்தி என்று பெயர். சிலந்தியும், பாம்பும், யானையும் இறைவனைப் பூஜித்த ஸ்தலம் இது. ஊரின் பெயரில் அவையே உள்ளன; உத்தமன் உருவிலும் அவைதான் உள்ளன!

இவை இறைவன் மூர்த்தத்திலேயே பதிந்திருந்தாலும், அந்த லிங்க மூர்த்தியைத் தொடக்கூட மனிதர் எவருக்கும் — அர்ச்சகருக்கும்கூட — உரிமை யில்லை. காளத்தியின் பல விசித்திரங்களில் இதுவும் ஒன்று. தீண்டாத் திருமேனியான ஸ்ரீ காளஹஸ்தீசுவர லிங்கத்தைப் பச்சைக் கர்ப்பூரத் தீர்த்தத்தால் நீராட்டிய பின் வஸ்திரம் கொண்டு துடைப்பது கூட இல்லை. தானே நீர் வடிந்து உலரட்டும் என்று விட்டு விடுகிறார்கள்.

பிறகு லிங்கத்தின் மீது படாமலே சர்வ ஜாக்கிரதையாக நவக்ரஹச் சட்டத்தை அதன் மீது சாத்தி விடுகிறார்கள்.

இதையெல்லாம் விட இன்னோர் அதிசயம்: இத்தனை நேரம் புகழ்ந்து பேசப்பெற்ற காளத்தி லிங்கர் இங்கு மூலவர் அல்ல! இங்கு வாயு லிங்கம் என்றே தனியாக ஒருவர் இதே கருவறையில் இருக்கிறார். அவரே இதனை வாயு ஸ்தலமாக்கியிருப்பவர்.

வாயுவாகவே, வெறுங் காற்றாகவே, கண்ணுக்குத் தெரியாமலே இருக்கிறது வாயு லிங்கம் இங்கே.

கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், ''இதோ இங்கேதான் வாயுலிங்கம்'' என்று காளத்தி லிங்கருக்கு வலப்புறத்தே காட்டுகிறார் அர்ச்சகர்.


அங்கே சரத்தில் கோத்த தீபம் ஒன்று தொங்குகிறது. அந்தத் தீபத்தின் திரிகளில் ஜொலிக்கும் தீக்கொழுந்துகள் அனவரதமும் துடிதுடிப்புடன் ஆடி அசைந்து கொண்டேயிருக்கின்றன. மிகவும் பக்கத்திலேயே வேறு பல தீபங்களும் உள்ளன. கருவறையின் உள்ளடக்கத்தில் அந்த மற்ற தீபச் சுடர்கள் ஆடாமல் அசையாமல் யோக நிலையில் இருக்க, அர்ச்சகர் காட்டும் இத்திரு விளக்குச் சோதி மட்டும் எக்காலமும் ஆடிக் கொண்டேயிருக்கிறது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அது இப்படி ஆடுவதை அடியார்கள் பார்த்துப் பரமனின் பெருமையை வியந்திருக்கிறார்கள். தீபத்தை ஆட்டி வைப்பவரே வாயு லிங்கர்.

இங்கே இறைவன் மேற்குப் பார்த்திருக்க அம்பிகை கிழக்கு நோக்கியிருப்பதும் ஓர் அபூர்வ விஷயம். 'பையன் கிழக்கைப் பார்த்தால் பெண் மேற்கைப் பார்க்கிறாள்' என்று மனப் பொருத்தமில்லாத ஜோடிகளைப் பற்றிச் சொல்வதுண்டே, அப்படியல்ல இது! காளத்தீசனையும் அவனது நாயகியான ஞானப் பூங்கோதையையும் போல் மனமொத்த தம்பதி எங்குமே கிடையாது. மனம் 'ஒத்த' என்றால் போதாது. மனம் அப்படியே 'ஒன்றி', பிறகு மனமேயில்லாத அத்வைத ஞானத்தில் அவனே அவளாக, அவளே அவனாக ஆன ஸ்தலம் இது. ஆதிகாலத்தில் யுக யுகாந்திரத்துக்கு முன் சாட்சாத் பரப்பிரம்ம சக்தியே உலகுக்கு ஞான போதனையின் பெருமையை உணர்த்தும்பொருட்டு இங்கு வந்து ஞானாசாரியனை அடைவதற்காகத் தவமிருந்தாள். பரமேசுவரன் குருவாக வந்து, அவளுக்கு உபதேசித்தான். சீடர் கிழக்குப் பார்த்திருக்கவே, ஆசான் எதிர்முகமாக அமர்ந்து உபதேசிப்பார் அல்லவா?

பூ மலர்வதுபோல் ஆத்மாவை மலர்விக்கும் ஞானஸ்வரூபமான அம்பிகை இங்கு ஞானப் பூங்கோதை அல்லது ஞான ப்ரஸூனாம்பிகை என்ற தித்திக்கும் திருநாமம் பெற்று, தேமதுரத் திரு உருவமாகத் திகழ்கிறாள். இரண்டே கைகள் — மாமதுரை மீனாக்ஷியைப் போல். ஒன்றிலே தாமரை மலர மற்ற கரம் ஒயிலாகத் தொங்குகிறது. பார்த்தால் பசி தீரும்; கோடி பாபமும் 'கோ'வென்று ஓடும்.

தம்மிடம் எண்ணிலடங்கா அற்புதங்களை மறைத்துப் புதைத்துக் கொண்டுள்ள ஸ்ரீ





- லிங்கத் திருமேனி
- ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி : உத்ஸவர்
- காளத்தி கோயிலும் பொன்முகலி ஆறும்

காஞ்சிப் பெரியவர்கள், பல ஸ்தலங்களின் மறைந்த பெருமைகளை வெளிக் கொண்டு வந்திருக்கிறார்கள். காளத்தியின் சிறப்புக்கள் சிலவற்றை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். காளஹஸ்தீசுவரர் ஆலயத்துக்கு வெளியே, ஏறக்குறைய மாமல்லபுரம் உருவான காலத்தில், அதே பாணியில் மலைப் பாறையில் செதுக்கப்பட்ட சிற்ப அதிசயங்களையும் அங்குள்ள ஐந்துமுக லிங்கத்தையும் ஸ்ரீ பெரியவர்கள் இன்று பக்த கோடிகள் கண்டு மகிழச் செய்திருக்கிறார்கள். ஞானப் பூங்கோதையிடம் மட்டில்லா பக்தி பூண்ட ஞானகுரு, கேனோபநிஷத்தில் இந்திரனுக்கு



ஞாபக சக்திக்குப் பிராணவாயு !

''மறந்து விட்டேன், வயது ஆகிறதல்லவா ?'' என்று சொல்வது வழக்கம். மூப்பு மேலிட மேலிட, நடப்புகள், பெயர்கள் நினைவு குறைவது இயற்கையே. இதற்கு மருந்தே இல்லை என்றுதான் கருதி வந்தார்கள். இரத்தத்திலிருந்து மூளைக்குச் சேரும் ஆக்ஸிஜன் குறைவதே நினைவாற்றல் குறைவதற்குக் காரணம் என்று இப்போது கருதுகிறார்கள்.

அமெரிக்க டாக்டர்கள் முதியவர்களை உயர் அழுத்தமுள்ள அறையில் வைத்து ஆக்ஸிஜன் உட்கொள்ளும்படி செய்வதன் வாயிலாக அவர்களது நினைவாற்றலை வளர்க்கலாம் என்று கண்டுபிடித்துள்ளனர். ஒருவர் உட்கொள்ளும் காற்றின் அழுத்தம் கூடக் கூட, இரத்தத்தில் அதிக ஆக்ஸிஜன் கிடைக்கிறது. அதனால் மூளைக்கும் விரைவில் அதிக ஆக்ஸிஜன் கிடைக்கிறது.

அண்மையில் இவ்வாறு எண்பது முதியவர்களுக்கு ஆக்ஸிஜனை அதிகரித்ததில், எழுபது பேர்களுக்கு நினைவாற்றல் திருந்தியது. ஒரு முறை திருந்திய நினைவாற்றல் அப்படியே வாரக்கணக்கில் மாதக் கணக்கில்கூடப் பழுதுபடாமல் இருந்தது.

ஆனால் நீராக் குடியர்களுக்கு இந்த ஆக்ஸிஜன் முறையினால் நினைவாற்றல் மேலும் மோசமாயிற்று !

-யு.எஸ்-ஐ-எஸ். விஞ்ஞானச் செய்தி

பிரம்ம வித்தையை அருளியவள் இந்த ஞானம்பிகையேயென்று தெளிந்திருக்கிறார்கள்.

அசுரரை வென்ற வெற்றிச் செருக்கில் 'சுய பலம் கொண்டே இதைச் சாதித்தோம்' என்று தேவர்கள் இறைவனை மறந்து இறுமாந்தனர். அப்போது பரம்பொருள் அவர்களால் இன்னதென்று அறியவொண்ணு யட்ச வடிவமாகத் தோன்றியது. அதனிடத்தில் தேவர்களின் சக்தி யாவும் பொய்த்துப் போயின. பிறகு அதே இடத்தில் அம்பாள் தோன்றி இந்திரனுக்கு ஞானோபதேசம் செய்து அவனது செருக்கை நலிவித்து அறிவைப் பொலிவித்தாள். இப்படி உபநிஷதம் கூறுகிறது. இவ்வூரிலேயே இன்னொரு ஸஹஸ்ர லிங்கக் கோயிலில் யட்சேசுவரர், இந்திர லிங்கம் என்று இரு லிங்கங்கள் உள்ளன. இவை மேற்படி சம்பவம் காளத்தியில்தான் நிகழ்ந்தது என்று அறுதியிட்டு உறுதியாக்குகின்றன என்று ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் கூறுகிறார்கள். 'அன்போடு அழுது வேண்டினால், நமக்கும் ஞானம்பிகை ஞானப்பால் தருவாள்' என்று கூறுகிறார்.

இந்த அம்பாளுக்கு அடியில் ஆதி பகவத்பாத சங்கரர் ஸ்தாபித்த கைலாஸ ப்ரஸ்தார ஸ்ரீசக்ரம் அவளது ஞான சக்தி பிரசன்னமாயிருக்க மேலுமொரு சாதனமாயுள்ளது.

இவ்வாலயத்தில் சங்கரர் பிரதிஷ்டை செய்த ஒரு ஸ்படிக லிங்கமும் உள்ளது. அவரது மடங்களில் உள்ளவற்றை விடப் பன்மடங்கு பெரிய பனிங்கு லிங்கம் இது.

சென்னையிலிருந்து சுமார் எண்பது மைல் தூரத்தில் உள்ள ஸ்ரீ காளஹஸ்தி நக்கீரரிலிருந்து தொடங்கி, தேவாரம் தந்த மூவரின் வழியாகச் சமீப காலத் தமிழடியார் வரையில் பலரும் பாடிப் பரவிய பரம புண்ணியத் தலம். கண்ணப்பரின் கண்ணைப் பெற்ற ஈசனையே,

'கண்ணுரக் காண்பார்க்கோர் காட்சியான் காண்
காளத்தியான் அவன் என் கண்ணுளானே'

எனப் பாடுகிறார் அப்பர் பெருந்தகை.

மூல ஸ்தானத்திலேயே கண்ணப்பர் உள்ளார். பிராகாரத்தில் பெரிய ஆகிருதியில் ஒரு கண்ணப்பர் சிலை உள்ளது. அதன் கம்பீரமும் கனிவும், வேடர் குல வீரமும் வேதாந்த ஞானமும், பார்த்தால்தான் புரியும் அதன் சிறப்பு!

ஆந்திர தேசத்தின் மிகப் பெரும் கோயில் என மதிக்கப்படும் இவ்வாலயம் மேலும் பல அற்புதங்களைக் கொண்டது. மூன்று புறத்திலும் துர்க்கை, கண்ணப்பர், குமாரஸ்வாமி இவர்கள் குடிகொண்டுள்ள மூன்று குன்றுகளுக்கு மத்தியில், உள்ளம் கவரும் ரமணீயச் சூழலில் அமைந்திருக்கிறது.

தற்போது இவ்வாலயத்துக்குத் திருப்பணி நடக்கிறது. பக்தி எழுச்சியும், கலை வல்லமையும் உருவாக்கிவிட்ட மகத்தான கோபுரங்கள், பிரம்மாண்டமான பிராகாரங்கள், அனந்தமான சந்நிதி விமானங்கள் ஆகியவற்றைப் பேருக்குச் செப்பனிடுவதென்றாலே லட்சக் கணக்கில் இழுத்துக் கொண்டு போகிறது. ஆனால் பக்த கோடிகள் இருக்க லக்ஷக் கணக்கான ரூபாய்க்குக் கவலைப்பட வேண்டியதில்லை. இதுவரையில் சுமார் இரண்டே முக்கால் லட்சம் ரூபாய்ச் செலவுக்கான திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இன்னமும் மூன்று லட்சத்துக்கதிகமான ஜீர்ணோத்தாரண வேலைகளை ஏற்று முடித்தாக வேண்டும். அதோடு பல்லாண்டுகளுக்கு முன் ஒரு சதிக் கூட்டம் வரிசையாகப் பல க்ஷேத்திரங்களில் தேரை எரித்தபோது இத்தலத்து ரதமும் சாம்பலாயிற்று. சகல ஜனங்களும் தோளோடு தோள் தொட்டு நின்றிழுக்கும் தேர்த் திருவிழா இங்கு நடந்தேயாக வேண்டுமென்பது காஞ்சி ஆசாரியர்களின் ஆணை. எனவே திருத்தேரும் ரூ. 5,00,000 செலவில் நிர்மாணிக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

இப்பணிகள் யாவும் பூர்த்தியாகட்டும் என்று காத்திராமல், அத்தியாவசியமான ஜீர்ணோத்தாரணம் செய்து, வருகிற ஏப்ரல் முதல் தேதி மகா கும்பாபிஷேகம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அன்றுதான் ஸ்ரீ ராம நவமி தினம். ராம நவமியாகிய வஸந்த நவராத்திரியின் நிறைவு நாளன்றுதான் ஞானம்பிகை ஆவிர்பவித்தாள். அந்த நன்னாளில் குடமுழுக்குப் பெரு விழா நடத்த காஞ்சி ஜகத்குரு ஆசி வழங்கியிருக்கிறார்கள்.

ஏப்ரல் முதல் தேதியை ஆங்கிலேய வழக்கத்தில் வேறெப்படியோ சொல்வார்கள். அதற்கு நேர் மாறாக அன்று ஞானம்பிகையின் விழா சிறப்புற நடந்து அது ஞான தினமாவதற்கு நாம் ஒவ்வொருவரும் பொன்னும் பொருளும் கொடுத்து உதவ வேண்டும்.

வாயுத்தல நாயகனை வாயார வாழ்த்துவோம். காளத்தியப்பருக்குக் கையாரக் கொடுத்துக் கைலையின்பம் எய்துவோம்.

நிதி அனுப்ப வேண்டிய முகவரி: காரிய தரிசி, மகா கும்பாபிஷேகம் கமிட்டி, ஸ்ரீ காளஹஸ்தீசுவரஸ்வாமி தேவஸ்தானம், ஸ்ரீ காளஹஸ்தி, சித்தூர் மாவட்டம் (ஆந்திரா)

சேவா வாரம்

வாடிக்கையாளரின் மோட்டார் சைக்கிள்களைப்பற்றிய 'ஜாதக'க் குறிப்பெடுத்து வைத்து, வண்டிகளின் குறைகளை நீக்கித் திருப்திப்படுத்த முன்வந்துள்ளது என்பீல்ட் ஸ்தாபனம். மோட்டார் சைக்கிளின்பாகங்களைத் தயாரித்தளிக்கும் தொழில் ஸ்தாபனத்தினரையும் வாடிக்கையாளரோடு தொடர்பு கொண்டு குறை நிறைகளைத் தெரிய வைத்தது. இந்தச் சேவா வாரத்தின்போது சென்னை நகரிலுள்ள என்பீல்ட் மோட்டார் சைக்கிள் வாடிக்கையாளர்களின் குறைகளை வண்டிகளில் நீக்கியதோடு, சேவைக்கான செலவில் 25 சதவிகிதம் தள்ளியும் கொடுத்தது.

"இதோ எங்கள் என்பீல்டு மோட்டார் சைக்கிள் ஓட்டும் பி. எம். சாமுவேல் முப்பத்தைந்து ரூபாய் செலவில் ஒரு நவீன சாதனத்தை வண்டியில் பொருத்திப் பெட்ரோல் மிச்சப்படுத்த வழி கண்டு பிடித்திருக்கிறார்" என்று என்பீல்டு விற்பனை மானேஜர் திரு பிரகாஷ் அறிமுகப்படுத்தினார். படத்தில் திரு பிரகாஷ், போலீஸ் கமிஷனர், பிரதம எக்ஸிக்யூடிவ் என். ராஜகோபாலன், சர்வீஸ் மானேஜர் ஏ. சீனிவாசன் ஆகியோரைக் காணலாம்.







ஓட்டமாவது ஓட்டம்!

தமிழகத்தில் உள்ள பதினைந்து தனியார் ஹையர் செகண்டரி பள்ளிகளைச் சேர்ந்த அறுநூறு ஓட்டக் கலைஞர்கள் சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் அண்மையில் விளையாட்டுக் கலைப் போட்டியில் கலந்து கொண்டார்கள்! பதினைந்து பள்ளிகளில் முதன்மை ஸ்தானம் (172 பாய்ண்ட்கள்) பெற்று திருச்சி மின் தொழிகலத்தைச் சேர்ந்த ஆர். எஸ். கிருஷ்ணன் ஹையர் செகண்டரி பள்ளிக்குத்தான்!

இப்படிப் பெரிய வெற்றியை ஆர். எஸ். கிருஷ்ணன் ஹையர் செகண்டரி ஸ்கூல் பெற்று விட்டாலும் தமிழகத்தின் தலைநகருக்கு சீனியர் மாணவ சாம்பியன் பட்டத்தை கிருஷ்ணசாமி ஸ்கூல் மாணவன் வெங்கடரமணனுக்கும், இளம் பெண்கள் சாம்பியன் பட்டத்தை ஜவஹர் பள்ளி மாணவி ரீடா ராய்க்கும் விட்டுவிட்டுத்தான் ரயிலேறி யிருக்கிறார்கள்.

"இந்த வருஷம் தமிழ்நாட்டில் உள்ள ஹையர் செகண்டரி பள்ளிகள் மட்டுமே இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டன. அடுத்த வருஷம் எங்கள் போட்டிகளில் அகில இந்தியாவிலுமுள்ள ஹையர் செகண்டரி பள்ளி விளையாட்டுக் கலைஞர்களும் பங்கேற்பார்கள்!" என்றார் தலைவர் திரு தாமஸ்.

ஒருமைப்பாட்டுக்கு விளையாட்டுக்கள் உறுதுணையல்லவா? (படத்தில் நீதிபதி நாராயணசாமி முதலியார் சாம்பியன் பரிசு வழங்குகிறார்.)

"புலித் திட்டம்"


நமது வன விலங்குகளைப் பாதுகாப்பதற்காக, தேசியப் பூங்காக்கள், வனவிலங்குக் காப்பிடங்கள் முதலியவற்றை அமைக்கவும், பாதுகாக்கவும் திட்டங்கள் உருவாகி வருகின்றன. வனவிலங்குகள், பறவைகள் முதலியவற்றை உயிருடனோ, பிணமாகவோ ஏற்றுமதி செய்வதற்குத் தடைகள் உள்ளன. சமீபத்தில் அமலாகியுள்ள 'புலித் திட்ட'த்தின்படி புலியைப் பாதுகாப்பதற்காக ஒன்பது தேசியப் பூங்காக்கள், வனவிலங்குக் காப்பிடங்களுக்கு விசேஷ உதவி அளிக்கப்படுகிறது.

தாவர ஓவியக் கண்காட்சி!

"நான் விரும்பும் தாவரங்கள்" என்னும் தலைப்பில் ஏ. டி. ரவீந்திரனின் தாவர ஓவியக் கண்காட்சியை மவுண்ட் ரோடு சரளா ஆர்ட் சென்டரில் அமெரிக்கத் தகவல் இலாகா டைரக்டர் எட்வர்ட் ஜே. கான்லான் ஆரம்பித்து வைத்தார்.




மக்கள் நம்பிக்கை
என்னும் இனிதான
சுமையை மகிழ்வுடன்
ஏற்று செயல்படுவதே
எங்கள் குறிக்கோள்.
60 ஆண்டு காலமாக
உழைத்து உழைத்து நாங்கள்
மக்களின் நம்பிக்கைக்குப்
பாத்திரமாகியிருக்கிறோம்.
என்வேதான் சிறிய
பார்சல்கள் முதல் பெரிய
பார்சல்கள் வரை நாங்கள்
பத்திரமாகக் கொண்டு
போய்ச் சேர்ப்போம் என்ற
நம்பிக்கை மக்களுக்கு
இருக்கிறது.
இந்த நம்பிக்கைக்கு
அடிப்படை இவைதான்:
• எங்கள் லாரிகள் அனைத்தும்
எங்களுக்குச் சொந்த
மானவையே. எனவே
காத்திருக்க வேண்டிய
அவசியமில்லை.
• அதிக அளவில் பார்சல்களை
ஏற்றிச் செல்ல நிறைய
டிரெய்லர்களும் எங்களிடம்
உண்டு. எனவே
காத்திருக்கத் தேவையில்லை.
• லாரிகளில் பழுதேற்பட்டால்
வழித் தடங்களில் அமைந்
துள்ள எங்கள் பட்டறைகள்
உடனடியாகச் சீர்
செய்கின்றன. எனவே
தாமதம் தவிர்க்கப்படுகிறது.
• ஓர் இடத்திலிருந்து
மற்றொரு இடத்திற்கு
நேரிடையான பார்சல்
சர்வீஸ் இருப்பதனால் நேரம்
மிச்சப்படுகிறது. பார்சல்கள்
இறக்கி ஏற்றப்படுவது
தவிர்க்கப்படுவதால்
சேதமும் விளைவதில்லை.
• தென்னகத்தின் பெரு
நகரங்களுக்கிடையே
மின்னல்வேக சர்வீஸ்களும்
நடத்துகிறோம். எனவே
உங்கள் பொன்னான நேரம்
மிச்சப்படுகிறது.
TVS
உங்கள்
நம்பிக்கைக்குரியது
டிவிஎஸ்
ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த
நிறுவனங்களில் ஒன்று)
மதுரை







விண்ணும் மண்ணும்

கி.ராஜேஂந்திரன்

9. கவலை தரும் நிலைமை

நியூயார்க் நகரின் ஹார்லெம் பகுதியில் தனஞ்செயனும் அனுபமாவும் காரை ஒரு பக்கமாக நிறுத்திவிட்டுக் காலார நடந்து கொண்டிருந்தார்கள். பொருளாதார ரீதியில் பெரும்பான்மையான அமெரிக்க நீக்ரோக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதை அந்த வட்டாரம் பறைசாற்றிக் கொண்டிருந்தது. இந்தியாவில் கீழ் மத்தியதர வகுப்பினர் வாழும் இல்லங்களைவிட இந்த ஹார்லெம் பகுதி உறைவிடங்கள் எவ்வளவோ சிறந்தனவாக இருந்தனவெனினும் அமெரிக்க நோக்கில் இது கண்ணை உறுத்துகிற விஷயம்தான் என்பது தனஞ்செயனுக்குப் புரிந்தது.

''இந்தப் பகுதிக்கு இரவு நேரத்தில் வருவது உசிதமில்லை என்பார்களே?'' என்று கேட்டான் அவன்.

''ஆமாம். குடித்துவிட்டுக் கலாட்டா செய்பவர்கள் இருப்பார்கள். சண்டை சச்சரவுகள் நிறைய நிகழும். அடிதடி, கத்திக் குத்து இவற்றுக்கும் பஞ்சமில்லை. எல்லாவற்றுக்குமே பொருளாதார அடிப்படையில் காரணம் காட்டலாம். வாழ்க்கைத்தரம் உயர்ந்தால் நாகரிக முன்னேற்றமும் தானாகவே ஏற்பட்டு விடுமல்லவா?''

''உன் அப்பாவின் வாதத்தில் உள்ள சத்திய ஒளியை இந்த இடத்தில்

நிற்கும்போது மிக நன்றாகத் தரிசிக்க முடிகிறது. நமக்கு மிகவும் அருகிலேயே உள்ள கோடிக்கணக்கான மக்களின் நல்வாழ்வு என்கிற லட்சியம் நம்மை வருந்தி அழைக்கிறது. அதை அலட்சியம் செய்துவிட்டுக் கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள, நமக்கு நேரடித் தொடர்பு இல்லாத எதையோ அடைவதையே லட்சியமாக ஏற்படுத்திக் கொண்டு அலைவது அபத்தமாகத்தான் படுகிறது.''

'' இதற்கு என்னால் பதில் சொல்ல முடியும்; ஆனால் மீண்டும் இந்தத் தர்க்கவாதத்தில் இறங்கத்தான் என்னையும் அழைத்துக் கொண்டு நீங்கள் இங்கு வந்தீர்கள் என்று நான் நம்பவில்லை.''

''உண்மைதான் அனுபமா? காரில் அந்தச் சின்னஞ்சிறிய டிரான்ஸ்மிட்டர் கருவியைப் பார்த்ததிலிருந்தே என் மனம் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. உன்னுடன் பேசக் கொடுத்துக் கொண்டே சிந்தித்தபடி யிருக்கிறேன்.''

''அதை யார், எந்த நோக்குடன் அங்கே வைத்திருப்பார்கள் ?''

''மைக்கேலாக இருக்கலாம். என் மீது பொறாமைப்பட்டு நீயும் நானும் என்ன பேசிக்கொண்டிருக்கிறோம் என்று அறிய அந்தக் கருவியை அவன் பயன்படுத்தலாம். அவ்வாறாயின் நாம் காதல் மொழி பேசி நடித்தது பெரிய சிக்கலாகவும் உருவெடுத்துவிடுமில்லையா?''

'' ஒருநாளும் அப்படி நேராது. டிரான்ஸ்மிட்டர் அங்கு இருப்பதை அறிந்ததும் அதை அங்கு வைத்த பொறாமை உள்ளத்தைக் கிண்டல் செய்வதற்காகவே நாம் அப்படியெல்லாம் பேசினோம் என்பதை மைக் புரிந்து கொள்வார். ஆனால் மைக் செய்யக்கூடிய காரியமாகத் தோன்றவில்லை இது, எனக்கு. அவருடைய சுபாவத்துக்கு ஏற்றதாக இல்லை.''

''அப்படியானால் நிலைமை மேலும் கவலைக்கிடமானதாகிறது. நான் அமெரிக்கா வந்திருப்பதற்கு உண்மைக் காரணம் வியாபாரம் அல்ல என்றும் வேறு அந்தரங்க நோக்கம் இருக்கிறது என்றும் யாரோ சந்தேகிக்கிறார்கள் !''

''அவர்கள் யாராயிருக்கும்?''

''இந்தியாவிடம் விரோத பாவத்தை வளர்த்துக் கொண்டிருக்கும் நாடுகளின் ஒற்றர்களாய் இருக்கலாம்; அல்லது எஃப். பி. ஐ. ஆக இருக்கலாம்.''

அமெரிக்க அரசின் பிரதான துப்பறியும் அமைப்பின் பெயரைத் தனஞ்செயன் குறிப்பிட்டதும் அனுபமா துணுக்குற்றாள்.

''ஆனால் அவர்களைத்தான் நாம் நன்றாக ஏமாற்றி விட்டோமே? ஆக, விசாரப்பட ஒன்றுமில்லையல்லவா ?'' என்றாள்.

''இனி நாம் தொடர்ந்து நடத்தப் போகும் நாடகத்துக்கு அனுசரணை



யாகத்தான் காரில் நம்முடைய சம்பாஷணையும் அமைந்திருந்தது. அதனால் அவர்கள் ஏமாந்துவிடுவதும் சாத்தியம்தான். என்றாலும் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். என்னுடைய திட்டத்துக்கு எதிர்ப்பு என்று தோன்றுவதாயிருந்தால் அது உன்னிடமிருந்து மட்டுமேதான் கிளம்பக் கூடும் என்று இதுவரை எண்ணியிருந்தேன். வேறு இடங்களிலிருந்தும் எதிர்ப்பு உருவாக

லாம் என்பதற்கு முதல் அத்தாட்சி கிடைத்திருக்கிறது. நான் நம்பியது போல் என்னுடைய வேலை அப்படி யொன்றும் சுலபமாக முடியக்கூடிய தில்லை என்பதற்கு இது ஓர் எச்ச ரிக்கை!''


''எஃப். பி. ஐ.யும் இந்தியாவின் விரோத நாடுகளும் உங்களைப் பின் தொடர்ந்து வேவு பார்க்க ஆட்களை அனுப்புமாறு அப்படி என்ன செய்யக் கூடாத காரியத்தில் நீங்கள் இறங்கி யிருக்கிறீர்கள்? நானும் எதிர்ப்புத் தெரி விக்க வேண்டிய அந்த விஷயம் என்ன?''

''நான் அப்படியா சொன்னேன்? ஒரு வேளை நீ ஒத்துழைக்கத் தயங்கலாம் என்று எண்ணியதாகத்தானே கூறி னேன்?''

''என்ன விஷயம் என்று தெரிந் தால் தானே உதவுவதா பிணங்கு வதா என்று நான் முடிவுக்கு வர லாம்?''

''அதை விளக்கத்தான் இந்த ஹார்லெம் பகுதிக்கு உன்னை அழைத்து வந்திருக்கிறேன். இங்கே சாலை ஓரமாக மக்களுடன் மக்க ளாக நடக்கும்போது நாம் அச்ச மின்றிப் பேசலாம். டிரான்ஸிஸ் டர், டேப் ரிகார்டர் பற்றிய கவலைகள் எல்லாம் தோட்டம் அறை, வீடு, கார் போன்ற இடங் களில்தான்.''

''இந்தக் காலத்தில் சாத்திய மில்லாதது என்று எதுவுமே கிடை யாது. யார் கண்டது? என் னுடைய காதில் உள்ள தோடுக்குள் ஒரு காமிரா பதுங்கி யிருக்கலாம். என் ஜாக்கெட் பித்தானுக்குள் ஓர் ஒலிபரப்புக் கருவி ஒளிந்து கொண்டிருக்கலாம்!''



''அதை இப்போதே சோதித்துப் பார்த்து விடுகிறேனே?'' என்று ஒரு விஷமப் புன்னகையுடன் அவளை நெருங்கினான் தனஞ்செயன்.

அனுபமா சிரித்தவாறே நெஞ்சைக் கரங்களால் மறைத்துக் கொண்டு அவ னிடமிருந்து தப்ப முயல்பவளைப் போல் ஓடினாள். அவள் அணிந்திருந்த மினி ஸ்கர்ட் ஓடுவதற்கு வசதியாக இருந் தாலும் ஹைஹீல்ஸ் அதற்கு இடைஞ்ச லாக இருந்தது. அதிக தூரம் சென்று விடவில்லை அவள். தனஞ்செயன் இந்த விளையாட்டை ரசித்தான். அவளுடைய அறிவின் முதிர்ச்சிக்கும் உள்ளத்தின் இளமைக்கும் சம்பந்தமேயில்லை என்று எண்ணினான். அதேபோல் அவள்

வயது கூடக் கூட எழிலும் எடுப்பும் மிகுதியாகி வந்திருப்பதையும் அவளால் கண்ணுக்கு மெய்யாகக் காண முடிந்தது.

10. அபாயத்தின் அளவு

"அனு! நான் கூறப் போகிற பல விஷயங்கள் உனக்கு ஏற்கனவே தெரிந்திருக்கலாம். ஆனாலும் பின்னால் நான் வெளியிடப் போகிற சில அந்தரங்கங்களின் முக்கியத்துவத்தைச் சரியானபடி உணர நீ ஏற்கனவே அறிந்துள்ள செய்திகளையும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்" என்று தொடங்கினான் தனஞ்செயன்.

அவன் முதன்முதலாகத் தன்னை நெருக்கமும் உரிமையும் இழையோட 'அனு' என்று அழைத்ததை அவள் கவனித்தாள். அதற்கு நன்றி கூறப் போய் அவன் சிந்தனைப் போக்கைக் கெடுக்க விரும்பாமல் தலையை மட்டும் ஆட்டினாள், தன் செவிகளை அவனுக்கு அர்ப்பணித்து விட்டதை அறிவுறுத்தும் பாவனையில்.

"பங்களா தேசத்தின் விடுதலைப் போரிலிருந்து நமது கதை தொடங்குகிறது" என்றான் தனஞ்செயன். "மாபெரும் வெற்றியைக் கொண்டாடும் பாரத நாட்டுப் பிரஜை நான் என்பதைத் தாற்காலிகமாக மறந்துவிட்டு ஒரு சராசரி மேற்குப் பாகிஸ்தானிய முஸ்லிமின் நிலையில் என்னை நானே இருத்திக் கொண்டு பார்க்கிறேன். என் நாடு துண்டாடப்பட்டுவிட்டதாக எண்ணுகிறேன். மேற்குப் பாகிஸ்தானுக்கு அடிமை செய்து அதன் நலனுக்காக உழைப்பதையே இலட்சியமாகக் கொள்ள வேண்டிய கிழக்கு வங்கம் பிரிந்துவிட்டது; விடுதலை பெற்றுவிட்டது! என்ன துணிச்சல்! சுதந்திர நாடு என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட வங்க தேசத்தை விட அதிகமாக இந்த அந்தஸ்தை அதற்குப் பெற்றுத் தந்த இந்தியாவை நான் அதிகமாய் வெறுக்கிறேன். ஆத்திரம் பொங்குகிறது எனக்கு. அது மட்டுமா? சொல்லிமுடியாத அவமானமும் என்னைச் சூழ்ந்து கொள்கிறது. உலகமே பாகிஸ்தான் அடைந்த படுதோல்வியைக் கண்டு சிரிப்பது போல் தோன்றுகிறது. இந்த அபகீர்த்தியைக் கொண்டு வந்து சேர்த்த எனது தலைவர்கள் தண்டிக்கப்பட்டு விட்டார்கள்; புதிய தலைமை பதவி ஏற்று விட்டது என்பதெல்லாம் உண்மைதான். என்றாலும் தேசத்துக்கு விளைந்த அவமானத்தை இதனால் துடைத்தெறிந்து விட்டதாக ஆகிவிடுமா? வங்க தேச விடுதலைக்கு முன்னரே இந்தியாவின் மீது பகை உணர்ச்சி என் உள்ளத்தில் அனலாகக் கனன்று கொண்டிருக்கிறது. இப்போதோ அது நெருப்பாகக் கொழுந்துவிட்டு எரிகிறது. நாட்டிலே இன்று தோன்றியுள்ள புதிய தலைமையின் நடவடிக்கைகளும் பேச்சும் அந்த நெருப்பிலே எண்ணெயை விடுவதாகத்தான் அமைந்திருக்கின்றன.

"புதிய தலைமை இவ்வாறு நடந்து கொள்ளத் தக்க காரணங்களும் உள்ளன. பாகிஸ்தானில் உள்நாட்டு நிலவரங்கள் ஏதும் சரியில்லை. மக்களுக்குத் திருப்தியில்லை. எல்லைப்புறங்களில் புதிய பழைய பிரிவினைக் கோஷங்கள் எழுகின்றன. இந்த நிலைமையில் மக்கள் தங்கள் குறைகளை மறந்து ஒன்றுபடவும் புதிய தலைமையிடம் அவர்களுக்கு உள்ள மதிப்பு மட்டுப்படாமல் காத்துக் கொள்ளவும் அவர்கள் முன்னால் ஒரு லட்சியக் கனவை வைக்க வேண்டியதாகிறது....." தனஞ்செயன் பேச்சை நிறுத்திவிட்டு, "போர் அடிக்கிறேனா?" என்று புன்முறுவலுடன் கேட்டான்.

"சொல்லுங்கள்! உங்கள் சிந்தனைப் போக்கு எனக்குப் புரிகிறது. காஷ்மீர் விவகாரத்துக்கு வருகிறீர்கள்!" என்றாள் அனுபமா.

"ஆமாம்! பங்களா தேச விடுதலையின் விளைவாக இழந்த கௌரவத்தைக் காஷ்மீரை இணைத்துக் கொள்வதன் மூலம் மீண்டும் பெறலாம் என்று பாகிஸ்தான் தலைமை நினைக்கிறது, பேசுகிறது. காஷ்மீரில் வெற்றி பெற முடியும் என்று அந்தத் தலைமை உண்மையில் நம்புகிறதோ இல்லையோ, மக்களை அவ்வாறு நம்ப வைத்துக் கொண்டிருக்கிறது. பதவியை ஸ்திரப்படுத்திக் கொள்கிற சுயநல நோக்கிலோ அல்லது அறியாமையினாலோ மக்களிடம் இந்தக் கருத்தைப் பரப்பி வருகிறது. காஷ்மீரை விவகாரத்துக்குரியதாக என்றைக்குமே பாகிஸ்தான் கருதி வந்திருப்பதானது இந்த மயக்கு வாதத்துக்கு அனுகூலமாகத் திகழ்கிறது."

"புட்டோவும் அவர் சகாக்களும் இப்படி ஏதேதோ மார் தட்டிக் கொண்டு போனால் நமக்கென்ன? குரைக்கிற நாய் கடிக்காது என்பார்களே?"

அவள் 'உங்களுக்கென்ன' என்று கேட்காது 'நமக்கென்ன' என்று வினவியதானது தனஞ்செயனுக்கு ரொம்பத் திருப்தி அளித்தது. அதை

அரண்மனை விஷயம்?

கூந்தல் அழகி லேடி ஜேன் வெல்லஸ்லி இப்பொழுது லண்டன் பத்திரிகைகளில் அடிக்கடி இடம் பெறுகிறாள். காரணம் இருபத்திரண்டு வயதான லேடி ஜேன் அடிக்கடி இளவரசர் சார்லஸின் அருகில் காணப்படுவதே. வெகு விரைவிலேயே மற்றோர் ராஜகுடும்பத் திருமணம் பிரிட்டனில் வந்துவிடும் என்று பலர் ஜோசியம் சொல்லத் தொடங்கி விட்டார்கள்! ஆனால் பக்கிங்ஹாம் அரண்மனை அறிக்கை அவர்களிடையே காதல் முகிழ்க்கவில்லை என்று உறுதி கூறுகிறது! எனினும் "அவ்விருவரும் இணைபிரியாத் தோழர்கள்!" என்ற அளவுக்கு ஒப்புக் கொள்கிறது!



ஜேன் என்ன சொல்கிறாள்? "எனக்கு இளவரசர் சார்லஸைத் தெரியும். என்னைப் போல் இன்னும் எத்தனையோ பல இளம் பெண்களுக்கு அவரைத் தெரியுமே!" என்கிறாள்.

இவ்வாறெல்லாம் மறுப்புக்கள் தோன்றிய போதிலும் சார்லஸ் இளவரசனின் கரம் பற்றப் போட்டி போடுபவர்களில் லேடி ஜேனுக்கே அதிகமான வெற்றி வாய்ப்பு இருக்கிறது என்பதையும் யாரும் மறுக்கவில்லை. லேடி ஜேன், வெல்லிங்டன் கோமகனின் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது இந்த வெற்றி வாய்ப்பை மேலும் அதிகரிக்கச் செய்கிறது.

- பி. எஸ். எம்.

மனத்தளவில் வைத்துக் கொண்டு பதில் அளித்தான்:

"அப்படிக் கருதி இதையெல்லாம் நாம் அலட்சியப்படுத்தி விடுவதற்கில்லை. அவர்களுடைய வாசாலகமான பேச்சுக்களும் கண்ணை மூடிக் கொண்டு கொடுத்த வாக்குறுதிகளுமே அவர்களைச் செயலிலும் இறங்க வேண்டிய நிர்ப்பந்தச் சூழலுக்கு இட்டுச் சென்று விடக் கூடும். எனவே, நாம் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம்."

"கொஞ்ச காலத்துக்கு முன்னால் ஸ்ரீநகரிலேயே பாகிஸ்தானுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்கள் பல நடந்ததாகப் படித்த ஞாபகம் இருக்கிறதே?"

"ஆமாம், நேரு நினைவுக் கல்லூரி என்று ஒரு பெண்கள் கலாசாலைக்குப் பெயர் வைப்பதை எதிர்த்து வன்முறையில் இறங்கினார்கள். பாகிஸ்தானுக்கு ஆதரவானதும் இந்தியாவுக்கு எதிரானதுமான கோஷங்களை எழுப்பினார்கள். உடைக்க முடிந்ததையெல்லாம் நொறுக்கினார்கள். பற்றி எரியக் கூடியனவற்றையெல்லாம் கொளுத்தினார்கள்."

"ஆக பாகிஸ்தானின் ஐந்தாம் படை காஷ்மீரில் தீவிரமாக இயங்குகிறது என்று சொல்லுங்கள்."

"அது மட்டுமா? புட்டோ பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதிக்கு வந்து சேர்ந்து போர்நிறுத்த எல்லைக்கு அப்பால் உள்ள காஷ்மீரிகளை ஹர்தாலில் இறங்குமாறு அறைகூவல் விடுகிறார். காஷ்மீர் பிரச்னை தீரவில்லை என்று கூட்டத்துக்குக் கூட்டம் முழக்குகிறார். கொரில்லாப் பயிற்சி அளிக்கிறோம், வாருங்கள் என்று பாக் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர்ப் பகுதி இளைஞர்களை வருந்தி அழைக்கிறார்."

"பாரதம் முன்ஜாக்கிரதையுடன் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுதான்; புரிகிறது. ஆனால் இதற்கும் நீங்கள் இவ்வளவு தூரம் என்னைத் தேடி வருவதற்கும் என்ன சம்பந்தம்?"

"சொல்கிறேன், அவசரப்படாதே... அதற்குமுன் இதற்குத் தொடர்பான இன்னும் சில அம்சங்களையும் கவனிப்போம்."

"பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்து வரும் ராணுவ உதவியைக் குறிப்பிடுகிறீர்களா?"

"உன் அழகைப் போலவே அறிவும் பிரகாசிக்கிறது. ஆனால் அது நான் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. விஞ்ஞான உலகு ஏற்கனவே உணர்ந்திருப்பதுதான்! உன் அறிவைப் போலவே அழகு பிரகாசிக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பதிலும் அர்த்தமில்லை. அது உன்னைப் பார்த்தாலே யாருக்கும் புரியும். ஆக உன்னைப் புகழ வார்த்தைகளே இல்லாமல் என்னைத் திணற அடித்துக் கொண்டிருக்கிறாய்!"

இந்தப் பாராட்டை ஒரு புன்னகையுடன் ஒதுக்கிவிட்டு அவன் தொடர்ந்தான்: "இந்தியா பாகிஸ்தானிடையே ஓர் ஆயுதக் குவிப்புப் போட்டியை ஏற்படுத்துவது தனது நோக்கமல்ல என்று அமெரிக்க அரசு பல முறை அறிவித்திருக்கிறதே?"

"அப்படித்தான் சொல்கிறது. சொல்லிக் கொண்டே ஆயுதங்களை வழங்கிக் கொண்டுமிருக்கிறது. ஒரே ஓர் உதாரணம் சொல்கிறேன். 1973ல் கடைசி ஒன்பது மாதங்களில் மட்டும் முப்பது மிலியன் டாலர்கள் பெறுமானமுள்ள அதாவது இருபத்துநாலு கோடி ரூபாய்க்கும் அதிகமாக மதிப்புள்ள போர்த் தளவாடங்களைப் பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்கிறது. இது உத்தேசமான கணிப்

புத்தான். இதற்கு அதிகமாயும் இருக்கலாம்.''

''பங்களா தேசப் போரில் சேதம் அடைந்துவிட்ட ஏராளமான போர்த் தளவாடங்களை ஈடு செய்வது போலத் தானே இந்த உதவி பாகிஸ்தானுக்கு வழங்கப்படுகிறது அதற்கு அதிகமாக இல்லையே ?''

''நீ சொல்வது 'கொலைகாரனிடமிருந்து பிடுங்கிக் கொண்ட கத்தியைத் தானே அவனிடமே திருப்பித் தருகிறேன். அதற்குப் பதிலாக ஒரு துப்பாக்கியையோ தோட்டாவையோ தந்துவிடவில்லையே?' என்று வாதம் புரிவது போலிருக்கிறது. பாத்திரம் அறிந்து தர வேண்டும். பாகிஸ்தானுக்கு அந்த அளவுக்குத் தருவதே தகாத செயல்தான். அந்த அளவோடு நிற்கும் என்பதற்கான உத்தரவாதமும் நமக்கு ஏதுமில்லை. பாகிஸ்தானும் அமெரிக்காவும் ராணுவ உடன்படிக்கையால் கட்டுண்டவை. வெளிப்படையாக அமெரிக்கா என்ன பேசினாலும் உடன்படிக்கையை மதிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அடித்துச் சொன்னால் அமெரிக்கா மறுப்பதற்கில்லை. இரகசியமாக ஆயுத உபகரணங்கள் போய்ச் சேரலாம். அல்லது மூன்றுவது ஏதோ ஒரு நாட்டுக்கு அனுப்புவது போல் போக்குக் காட்டிவிட்டு அங்கிருந்து யுத்த தளவாடங்கள் பாகிஸ்தானுக்கு வந்து சேரலாம். வழிகளா இல்லை? ராணுவத் தளவாடங்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க முதலாளிகள்தாம் லாபம் குறைவதைச் சகித்துக் கொண்டு சும்மா இருப்பார்களா ?''

''குருஷேவ் பாணியில் காட்டுத்தனமாகப் பேசுகிறீர்கள் !''

'' இந்த விஷயத்தில் குருஷேவ் கூறியது உண்மை. அது கசக்கத்தான் செய்யும்.''

''அந்த வாக்குவாதத்தை அப்புறம் நடத்துவோம். நீங்கள் கூற வந்த கருத்துக்குத் தொடர்பானதை முதலில் பேசுவோம். பாகிஸ்தானில் போர்த் தளவாடங்கள் குவிகின்றன. பகிரங்க அமெரிக்க உதவி, ரகசிய அமெரிக்க உதவி, மூன்றுவது நாடுகள் மூலம் கிடைக்கும் மறைமுக அமெரிக்க உதவி இவற்றை மட்டும் பாகிஸ்தான் நம்பி இராமல் பிரான்ஸ், சீனு போன்ற பிற நாடுகளுடனும் தொடர்பு கொண்டு பல்வேறு வகையான யுத்த தளவாடங்களை ஏராளமாய்ப் பெற்று வருகிறது. அத்துடன் உள்நாட்டிலும் போர்க் கருவி


ஃபோர்டின் கோட்டு !

ஹென்றி போர்டு எப்பொழுதுமே சுறு சுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர். அவருக்குத் தன் கோட்டு பழசாகிக் கிழிந்து போனதுகூட நினைவு வரவில்லை. அவர் காரியதரிசி, ''சார்! தங்கள் கோட்டு மிகவும் பழையதாகி விட்டது. புதிய கோட்டு போட்டுக் கொள்ளுங்கள்!'' என்றான்.

''புதிய கோட்டு எதற்கு? அதையே செப்பனிட்டுத் தந்துவிடு!'' என்றார் போர்டு சிரித்துக் கொண்டே.

''தாங்களோ பெரிய செல்வச் சீமான். இந்தக் கிழிசல் கோட்டை அணிந்திருப்பதை மற்றவர்கள் பார்த்தால் என்ன சொல்வார்கள்?'' என்றான்.

''என்ன சொல்வார்கள்? அமெரிக்காவில் எல்லோருக்கும் நான் போர்டு என்பது தெரியாதா?''



போர்டின் கேள்விக்கு விடையளிக்க முடியாமல் திணறினான் காரியதரிசி.

சில நாட்கள் கழித்து போர்டு இங்கிலாந்துக்குப் போகும்படியான ஒரு நிலை ஏற்பட்டது. அப்பொழுதும் அவர் அதே பழைய கோட்டை அணிந்து கொண்டார்.

''சார்! அமெரிக்காவில் உங்களை எல்லோரும் அறிவார்கள். அதனால் நீங்கள் வேறு கோட்டு மாற்றிக் கொள்ளவில்லை. ஆனால் இப்பொழுது நீங்கள் வெளிநாடு போகிறீர்களே! புதிய கோட்டு அணிந்து கொள்ளுங்களேன்!'' என்றான் செயலாளன்.

''புதுக் கோட்டு எதற்கு? என்னை அங்கே யாருக்குத் தெரியும்? இதே கோட்டுப் போதும்!'' என்றார் ஃபோர்ட்.

□ □ □ □ □ □ □ □ □

படுசுட்டி !

ஒரு நாள் ஸர் தாமஸ் லிப்டனிடம் ஒரு சிறுவன் வந்தான். தோற்றமே படு சுட்டி என்று காட்டியது. ஆனால் அவன் அணிந்திருந்த உடையோ அழுக்கேறிக் கிடந்தது. அவனைத் தம்மிடம் வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், லிப்டன் உடனே அவனுக்கு ஒரு புத்துடை வாங்கிக் கொடுத்தார். மறு நாளிலிருந்து தம்மிடம் வேலைக்கு வருமாறும் சொன்னார்.

பலவாறாக நன்றி தெரிவித்து விடைபெற்ற பையன் மறுநாள் வேலைக்கு வரவில்லை.

லிப்டனுக்கு ஒன்றும் புரியவில்லை. லிப்டன் நேரில் அவன் வீடு தேடிச் சென்றார். பையன் வீட்டில்



இல்லை; பையனுக்குப் பதிலாக அவன் அன்னை பதில் அளித்தாள்:

''என் குழந்தை அழுக்கு உடை காரணமாகப் பார்க்கவே சகிக்காமல் இருந்தான். எங்கு போனாலும் அவனுக்கு வேலை கொடுப்பார் இல்லை. தாங்கள் இரங்கி அவனுக்கு நல்லுடை வாங்கித் தந்தீர்களா? பெரிய மனிதன் உடையில் போன அவனுக்கு நல்ல வேலையாகக் கிடைத்து விட்டது. அதனால்தான் தங்களிடம் வரவில்லை!''

- ரா.வி.

ஆத்ம ஞான ஜோதி சபையின்

சத சண்டி ஹோமம்

இவ்வையம் கலிநீந்து இன்புற்று வாழ வேண்டும் என்ற பெருநோக்குடன் பம்பாய் ஆத்ம ஞான ஜோதி சபையார் வருகிற பிப்ரவரி மாதம் 26ந் தேதி முதல் மார்ச்சு மாதம் 7ந் தேதி வரை பெரிய அளவில் சத சண்டி யக்ஞம் நடத்துவதாகவும், அதையொட்டிக் கடைசி மூன்று நாட்கள் லட்சார்ச்சனை நடத்துவதாகவும் திட்டமிட்டிருக்கிறார்கள். காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஆசியுடன் பிரார்த்தனைக் கூடமும் தர்மசாலையும் மேற்கு தோம்பிவிலியில் கட்டுவதற்கான முயற்சியும் மேற்கொண்டிருக்கிறார்கள். நீத்தார் கடன் முதலிய தார்மீக காரியங்களும் நல்லபடியாக நடத்துவதற்கான ஏற்பாடும் இச்சபையின் மூலம் நிறைவேற இருக்கிறது.

இந்த நற்பணியில் பங்குகொள்ள விரும்புவோருக்கு முகவரி: P. R. Ramanathan, 4. Tambe Buildings, Ambedkar Road, Matunga (C.R.) Bombay 400019.

களின் உற்பத்தியை அதிகரித்து வருகிறது. அவ்வப்போது யுத்த முழக்கம் செய்வதிலும் குறைவில்லை. வடக்கே சீன அபாயமும் நமக்குத் தொடர்ந்து இருந்து வருகிறது. அது தான் ஆக்கிரமித்துள்ள இந்தியப் பகுதிகளை விட்டுக் கொடுப்பதாய் இல்லை. மேலும், ஊடுருவ ஒரு சந்தர்ப்பம் கிடைத்தாலும் விடாது. அதனிடம் அணுகுண்டு இருக்கிறது. அதைச் செலுத்தப் பெரிய ஏவுகணைகளும் உள்ளன. இவற்றைப் பற்றியெல்லாம் இந்தியா தெரிந்துகொள்ள வேண்டும். அவற்றின் அளவு, தன்மை, அழிக்கும் சக்தி ஆகியவை கணக்கிடப்பட வேண்டும். படை பலம் தெரிய வேண்டும்; படைகளின் நடமாட்டம் புரிய வேண்டும்!''

''அனு, அனு, நிறுத்து! இதையெல்லாம் உனக்கு விளக்கிக் கூறுமாறுதான் நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்! என் வேலையை நீ செய்து கொண்டுபோனால் எப்படி? டி. எம். ஐ.யில் சம்பளம் வாங்குகிறவன் நான்! நீயல்ல!''

இந்தியாவின் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த துப்பறியும் இலாக்காவின் சுருக்கமான பெயரை அவன் குறிப்பிட்டதும் அனுபமா வியப்படையவில்லை. இதற்குள்ளாக இதை அவளே ஊகித்து விட்டிருந்தாள்.

தனஞ்செயன் தொடர்ந்தான்: ''இந்தியாவைச் சூழ்ந்துள்ள ஆபத்தின் அளவைச் சுட்ட சில தகவல்களைக் கூறுகிறேன்: இந்திய ருஷ்ய நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்தான கையோடு கிழக்கு வங்கத்தின் விடுதலைப் போரும் வெற்றிபெற்ற பிறகு சீனாவும் பாகிஸ்தானும் குலாவுவது அதிகமாகிவிட்டது. இதையொட்டி மு ந் நூ று மிலியன் டாலர்கள் அதாவது இருநூற்று நாற்பது கோடி ரூபாய் பெறுமானமுள்ள யுத்த தளவாடங்களைச் சீனா பாகிஸ்தானுக்கு வழங்கியிருப்பதாகக் குறைந்த பட்ச மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர பாகிஸ்தானில் பெருமளவில் ஏவுகணைகளை உருவாக்கச் செஞ்சீனா முழு மனத்துடன் உதவி வருகிறது. பிரான்ஸ் தேசத்தின் பூரண ஒத்துழைப்புடன் மிராஜ் போர் விமானங்களையும், ஏவுகணைகளை அனுப்பக்கூடிய சிறு கப்பல்களையும் தயாரிப்பதில் பாகிஸ்தான் தீவிரமாய் ஈடுபட்டிருக்கிறது. அராபிய நாடுகள் சிலவற்றில் போர் விமானிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்குப் பிரதியாக ஒரு சந்தர்ப்பத்தில் தேவைப்படுமானால் அந்நாட்டுப் போர் விமானங்களைப் பாகிஸ்தான் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது....''

அவள் இடைமறித்துக் கேட்டாள்: ''எல்லாம் சரிதான். ஆனால் இவற்றுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? உங்களைப் போலவே நானும் பாதுகாப்புத் துறையின் துப்பறியும் பிரிவில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்கிறீர்களா? இன்னொரு மாடா ஹாரியாக விளங்க வேண்டும் நான் என்று எதிர்பார்க்கிறீர்களா?''

உலகப் பிரசித்தி பெற்ற பேரழகியும் ஈடு இணையற்ற ஒற்றர் தலைவியாகத் திகழ்ந்து சாகசங்கள் புரிந்தவளுமான மாடாஹாரியின் பெயரை அனுபமா கூறியதும் தனஞ்செயன் வாய்விட்டுச் சிரித்தான். ''இல்லை அனு, இல்லை! நீ விஞ்ஞானியாகவே இரு போதும். ஆனால் இந்தியாவுக்கு வந்து அப்பணி செய் என்று கேட்டுக் கொள்ளத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்'' என்றான். கூடவே தெரு விளக்குகளின் ஒளியில் அனுபமாவின் முக பாவ மாறுதல்களை உன்னிப்பாய்க் கவனித்தான், அவன் மேற்கொண்ட பணியின் வெற்றியோ தோல்வியோ அந்த ஒரு கணத்தில் நிர்ணயிக்கப்படவிருக்கிறது என்பதை உணர்ந்தவனாக. (தொடரும்)


□ ஜிம்கானா மைதானம். தேசிய சாம்பியன் சூஸன்தாஸ் முதல் செட் இழந்து, இரண்டாம் செட்டில் ஆடிக் கொண்டிருந்தபோது, இந்தியாவின் இரண்டாவது ஆட்டக்காரி நிருபமா மன்காடே ஜயித்து விடுவார் என்று அனைவரும் முடிவு செய்து விட்டனர். டைபிரேக்கரில் நிருபமா மன்காட் இரண்டாம் ஸெட்டையும் கவர அபாரமாக ஆடிக்கொண்டிருந்தார். திடீரென்று தேசிய சாம்பியன் சூஸன்தாஸுக்கு எப்படி உத்வேகம் பிறந்ததோ, இரண்டாம் ஸெட்டைத் தம் பக்கம் திருப்பிக் கொண்டது யாருமே எதிர்பாராத திருப்பம். மூன்றும் ஸெட்டையும் கடுமையான எதிர்ப்பினிடையில் தம் வசப்படுத்திக் கொண்டார் தேசிய டென்னிஸ் வீராங்கனை சூஸன்தாஸ்.

''சூஸன்! ரொம்பக் கடுமையான போட்டியில் கிடைத்து விட்டது உங்களுக்கு வெற்றி!'' என்று கை குலுக்கினார் பொப்பிலி குமாரராணி.

''ஆம்! நான் புனாவில் 1973 தேசிய சாம்பியன் போட்டியைத்தான் 'திரில்லிங்' மாட்ச் என்று கருதினேன். இதே நிருபமா மன்காடை 4–6, 6–2, 6–2ல் ஜயித்து என் கௌரவத்தை நிலைநிறுத்தினேன்! ஆனால் இன்றைய மாட்ச் எல்லாவற்றையும் மிஞ்சி விட்டது. என் நினைவை விட்டு என்றும் அகலாது!'' என்று கூறினார் சூஸன்தாஸ்.

''சூஸன் தாஸ் 'வாலி' செய்வதிலும் சர்விஸிலும் விற்பன்னர். நிருபமா மன்காட் திறமையான ஸ்டிரோக் ஆட்டக்காரி!'' என்று பொப்பிலி குமாரராணி சொல்கிறார் நம்மிடம்.

தேசிய சாம்பியன் சூஸன்தாஸ் அஸ்ஸாமில் திப்ருகரில் பிறந்தவர். இவரது தந்தை ஏ. எம். தாஸ் அப்பலேட் வருமான வரி கமிஷனர். குமாரி சூஸன்தாஸ் கல்கத்தா லொரட்டோ கல்லூரியில் பி. ஏ. – 'அரசியல்' பட்டதாரி. எல். எல். பி.யும் முடித்து இன்னும் சில நாட்களில் வக்கீல் தொழில் தொடங்கவிருக்கிறார்! இவர் பதினைந்து வயதில் டென்னிஸ் ஆடத் தொடங்கினார். இவரது தந்தையே முதலில் பயிற்சி அளித்தவர். பிறகு பிரபல 'கோச்' அக்தர் அலியிடம்



ஆட்டம் மெருகேறப் பயின்றார். இவருக்குப் புத்தகங்கள் படிப்பதென்றால் கொள்ளை ஆசை.

''சென்னைக்கு நீங்கள் ஆட வருவது இதுதான் முதல் தடவையா?''

''இல்லை. பல தடவை வந்திருக்கிறேன். 1971ல் எழும்பூர் ஸ்டேடியத்தில் ஆஸ்திரேலிய டென்னிஸ் ஆட்டக்காரி ராபின் தோபியிடம் மூன்று ஸெட்டுகளில் தோற்றுப் போனேன்!'' என்று தம் தோல்வியைப் பற்றியும் மறைக்காது சொல்கிறார் சூஸன்தாஸ். 'தோல்விதானே வெற்றிக்கு அடிக்கல்' என்பது இவரது டென்னிஸ் வாழ்க்கை கற்றுத் தந்த பாடம்!

□ ''டென்னிஸ் ஆட்டக்காரர் டென்னிஸ் ஆடுவதுதான் வழக்கம்! இந்தக் 'கௌரவ் மிஸ்ரா' ஆட்டம் தோல்வியை நெருங்குவதைக் கண்டு நாற்காலியை 'புட்பால்' அடிக்கிறாரே!'' என்று வியந்தார் ஒரு டென்னிஸ் ரஸிகர்.



நிருபமா மன்காடும் சூஸன்தாஸும்

''இது அவர் குணம் மட்டும் இல்லை. இது பரம்பரை வியாதி! அவரது அப்பாவுக்கும் இந்த மாதிரி 'டெம்பரமண்ட்' உண்டு!''

''அவர் காது கேட்க இரையாதீர்கள். நம்மை மைதானத்துக்குள்ளேயே 'புட்பால்' ஆடிவிடப் போகிறார்!''

□ ''ராயப்பா ஜயித்து விட்டார்!''

''என்னது? என்ன சொல்கிறீர்கள்? எந்தப் பத்திரிகையில் வந்திருக்கு?''

''ஜிம்கானா மைதானத்தில் ஜெய குமார் ராயப்பா பாட்ராவிடமிருந்து 6–3, 6–4 ஸ்கோரில் தமிழ்நாடு சாம்பியன் பட்டத்தைப் பறித்துக் கொண்டதைச் சொல்கிறேன்!''

□ இலங்கையிலிருந்து சிறுவன் பெர்னாண்டோ வந்து தன் ஆட்டத்திறனால் ரஸிகர்களின் மனத்தைக் 'கொள்ளை' கொண்டு போய் விட்டான்! இரட்டையர் சாம்பியன் போட்டியில் பிரதீப்பும் கிருஷ்ணனும் வெற்றிக் கொடி நாட்டினார்கள். சிறுவன் கே. சங்கர் ஜூனியர் சாம்பியன் ஆனான். எம். ஏ. எம். முத்தையா தங்கக் கோப்பை கிடைத்தது ஜே. முகர்ஜிக்கு. இவர் தமிழகப் போட்டிகளில் 12 பாயிண்டுகள் எடுத்துத் 'தங்க'க் கோப்பையுடன் கல்கத்தாவுக்குப் பறந்தார்! எதிர்பாராத திருப்பம் தமிழ்நாடு சாம்பியன் போட்டியின் சிறப்பு. **-பி.எஸ். மணி**


ஆசைகள் மடிவதில்லை 5
கதை: கௌசிகன்
சித்திரம்: சூர்யா..
முரளி...முரளி! உனக்கா இந்த நிலை? உன்னை, இப்படிக் கொலை செய்த கொடியவன் யார்? எதற்காக?
முரளி... நீ டைப் செய்துள்ள கடைசி வரி.... உயிர் பிரியும் தறுவாயில் எதையோ அறிவிக்க முயன்றிருக்கின்றன உன் விரல்கள். சு..ம..ர..மத.. சே..ர..ந...
எழுத்துக்களுக்குப் புள்ளி இல்லை. சில எழுத்துக்கள் விழவில்லை. முழுமையாக டைப் செய்யும் நிலையிலில்லை அவன்... இதென்ன பெண்கள் தலையில் கட்டிக் கொள்ளும் உல்லன் கயிறு.. இங்கு எப்படி வந்தது?
முரளி கடைசியாக டைப் செய்திருந்த எழுத்துக்களை ஒழுங்கு படுத்திய போது ஒரு பெயர் கிடைக்கிறது சதீஷுக்கு. ஒரு முறுவலுடன் தன் அறைக்கு விரைகிறான்.
டார்ச் விளக்கோடு இதுவும் இருக்கட்டும். கொத்துச் சாவியும் தேவைதான்.
ரஸ்தாவின் வளைவுகளில் கார் வழுக்கிக் கொண்டு போகிறது. அத்தனை வேகம், வெறி, சதீஷுக்கு.
உன்னைக் கொன்றவனைப் பழி வாங்கி உன் ஆன்மாவைச் சாந்தி யடையச் செய்வேன் முரளி...


அறையில் தான் இருப்பான், தூங்கிக் கொண்டு. ஓசை கேட்டு விழித்துக் கொண்டால்...! பரவாயில்லை.. என் நண்பன் அவன் அறையில் பிணமாகக் கிடக்கும் போது இவனுக்கு இங்கு தூக்கமா?
ஆளையே காணோமே... துப்பாக்கி முனையில் சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படாதோ?
இதுதான் ஆபீஸ் அறை போலிருக்கிறது. இவனைக் குற்றவாளியாகச் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்க இன்னும் ஏதாவது தடயம் கிடைக்கிறதா என்று டிராயரைச் சோதனை போடுவோம்...
இது... இந்த உயில்.. இவனிடம் எப்படி வந்தது? மல்லிகா குறிப்பிட்ட தருமராஜனின் உயிலல்லவா இது? மல்லிகா கூட சாட்சிக் கையெழுத்திட்டிருக்கிறாளே. ஆனால் இன்னும் பதிவாகவில்லை... ஏன்?
தருமராஜனின் இந்த உயில்தான் அவரது கடைசிக்காலத்தியது. என்றாலும் நேற்றைய பத்திரிகையில் வந்துள்ள — தர்மராஜனின் விதவை மனைவி பல லட்சங்களுக்கு அதிபதியாகிறாள் — என்ற இச்செய்தி எப்படி உண்மையாக இருக்க முடியும்?
உயிலை ஆராய்ந்து கொண்டிருந்த சதீஷின் முகத்துக்கு நேரே ஒரு கைத் துப்பாக்கி நீண்டது.
தொடரும்

இசை இருக்க, இரைச்சல் எதற்கு?



ஒன்றுக்கு இரண்டாகப் பணியாற்றும் காதுகள் பல்வேறு ஒலிகளைக் கேட்க மட்டும் அல்ல; மனித உடல் சாயாமல் நிமிர்ந்து நிற்கவும் உதவுகின்றன !

மனிதக் காதினால் கேட்க இயலும் ஒலிகளை விட மெல்லிய ஒலிகளை மிருகங்களால் கேட்க இயலும். தப்பி ஓடவும் வேட்டையாடவும் இது உதவுகிறது. உண்மையில் 'மோனம் நிறைந்த வெட்டவெளி', 'நிசப்தமான காடு' என்றெல்லாம் கவிஞர் வருணிக்கும் இடங்களில் நூற்றுக்கணக்கான ஒலிகள் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன! அவற்றுள் பலவும் மனிதக் காதுக்கு எட்டாதவை.

காது என்னும் அழகான அற்புத உறுப்பு தலையில் துருத்திக் கொண்டிருக்கும் சதைப் பகுதி மட்டுமல்ல. அது வெறும் வெளிக் காது. பெரிய கிளிஞ்சல் போன்ற அதன் அமைப்பு, ஒலிக் கதிர்களை வாங்கிக் குவித்து உள்ளே அனுப்ப வாய்ப்பாக இருக்கிறது. அதன் வடிவ அமைப்பில் பாதுகாப்புத் தத்துவமும் தெரிகிறது.

வெளிக் காது, 'ஒலிப்பறை' என்னும் சவ்வு வரை உள்ளே போகிறது. எல்லா ஒலிகளும் இந்தச் சவ்வைத் தாக்கி அதிர்ச்சி எழுப்புகின்றன. இந்தச் சவ்வைத் தாண்டிய பகுதி நடுக்காது. இங்கே ஒலிப்பறையை ஒட்டி, மூன்று சிறு எலும்புகள் ஒன்றுடன் ஒன்று நெருங்கி அமைந்துள்ளன. ஒலி காதில் பட்டதும், ஒலிப்பறையில் அதிர்வு தெரிந்து, அது மூன்று எலும்புகளின் வழியே பாய்ந்து, கடைசி எலும்பின் அதிர்வால் உள் காது என்னும் பகுதியில் உள்ள ஒரு சன்னல் போன்ற அறையுள் மோதுகிறது. இந்த மூன்று எலும்புகளுக்கும், அவற்றின் வடிவத்தைக் கொண்டு சுத்தி, பட்டடை, அங்கவடி என்று பெயர்.

உள் காது என்னும் உள்ளறையே ஒலி உணர்ச்சி நரம்புகள் கூடும் இடம். இங்கே மிக மெல்லிய ஒலி அலைகள்கூட, தெளிவாக நரம்பு வழியே மூளையை எட்டுகின்றன. 'காக்லியா' என்னும் இந்த உறுப்பு சங்கு போல் அடியில் பருத்தும் மேலே குறுகியும் காணும். இதனை ஒட்டிய மூன்று வளை குழாய்களில் திரவம் நிறைந்திருக்கும். இவற்றின் அதிர்வும் அசைவும் செவியுணர்வின் நுட்பமான இயக்கங்கள் ஆகும்.

உள் காதின் இந்த வளைவுக் குழாய்களின் (லேபரிந்த்) திரவ நிலை அசைவே தலை நேரே நிமிர்ந்து நிற்க உதவுகிறது. கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும் நேரே நடக்க உதவுகிறது. தட்டாமாலை சுற்றியதும் 'பாலன்ஸ்' தவறி விழுவது இந்தத் திரவநிலை குழம்புவதால்தான்; ஆனால் பழக்கத்தால் சிலர் இதை அடக்கி ஆளக் கற்கின்றனர். பாலே நடனக்காரர்களும் கரக ஆட்டக்காரர்களும் பம்பரமாகச் சுழன்றும் கீழே விழாமல் இருக்கிறார்கள். சுழலும்போது அவர்கள் கண் கொட்டாமல் இருப்பதும் நிதானம் இழக்காமல் இருக்க உதவுகிறதாம்.

கப்பல் விமானப் பயணங்களில் சிலருக்கு மயக்கம் வருவதும் தலை சுற்றுவதும்கூட இந்தத் திரவநிலை அசைவால்தான். எனவேதான் இதற்கான தடுப்பு மருந்துகள் மூளையின் இந்த உணர்ச்சிப் பகுதிகளைக் கட்டுப்படுத்தும் அளவில் தரப்படுகின்றன.

கேட்டல் என்னும் உணர்ச்சிக் கேந்திரம் மூளையில்தான் உள்ளது. ஏதேனும் விபத்தில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மூளையின் இந்தப் பகுதி பாதிக்கப்பட்டால் செவிப் புலன் செயலற்றுப் போவதுண்டு.

காதுக்கும் தொண்டை மூக்குக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. கொட்டாவி விடும்போதும் தொண்டையில் விழுங்கும்போதும் சில சமயம் காது அடைக்கும். தொண்டையில் டான்சில் புண்ணோ அடினாய்டு வளர்ச்சியோ இருந்தால் காதிலே சீழ் வடியும். இது என்ன ஏன் என்று தெரிந்து கொள்ளாமல் காதுக்கு மட்டும் மருந்து போட்டுக் கொண்டிருந்தால் ஒரு குணமும் தெரியாது. சிலருக்கு நாளடைவில் காது செவிடாகும் அளவு இந்தப் புண் கெட்டிருக்கும்.

சிறு குழந்தைகளின் தொண்டை நோய்களை அவ்வப்போது கவனிக்காததாலேயே பல நூறு குழந்தைகளின் காது மந்தமாகிவிடுகிறது. மதுரையில் இரண்டு லட்சம் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கும் காது பரிசீலனை செய்தபோது அவர்களில் பத்துப் பேர்களில் ஒருவர் காது மந்தமானவர்களாக இருப்பது தெரியவந்தது. இவர்களில் பலருக்கு இந்தக் குறை நேரக் காரணம் தொண்டையைக் கவனிக்காததும் பொதுவாகச் சத்துணவு கொள்ளாததும்தான். நல்ல ஊட்டம் இல்லையேல் நோயை எதிர்க்கும் வலுவின்றி உடல் உறுப்புக்கள் திறன் இழக்கின்றன.


காதிலே சீழ் வருவதும் மூக்கிலே சளி வருவதும் தொண்டையில் ஏதோ தொல்லை என்பதற்கே அடையாளங்கள். ஓரளவு காது தன்னைத் தானே சுத்தம் செய்து கொள்கிறது. அதன் விளைவே காதிலே சேரும் அழுக்கு. மிக மெல்லிய மெழுகு திரவம் சுரந்து காதைச் சுத்தப்படுத்துகிறது. ஆனால் இது எப்போதா

வது சிலருக்கு அதிகமாகச் சுரந்தால் அவர்கள் காதிலிருந்து அழுக்கை டாக்டர் எடுக்க வேண்டும். கூரான குச்சி, கம்பி ஆகியவை போட்டுக் காதைக் குடைவது தவறு. சற்றுக் கவனம் குறைந்தாலும் உள் சவ்வு கிறிக் கிழிந்துவிடலாம். ஆபத்து.

காதுக்குள் எண்ணெய் விடுவது தேவை யில்லை. எப்போதாவது எறும்போ பூச்சியோ உள்ளே போய்விட்டால் நல்ல நீரைக் காதிலே விட்டு ஒரு நிமிஷம் காத்திருந்து தலையைச் சாய்த்தால் போதும்; நீரும் அதில் அமிழ்ந்த பூச்சியும் வெளியே வந்து விழுந்துவிடும்.

காதிலே 'வண்டு எடுக்கிறேன்' என்று கிராமங்களில் சில நாடோடிப் போலி வைத் தியர்கள் காதைக் குடைவார்கள். வண்டா வது ஒன்றாவது ! முரட்டுத்தனமாக ஏதாவது செய்து காது சவ்வைக் கிழித்து விடுவார்கள்.

அபாயம் மிக்க பணியில் ஈடுபட்டவர்கள் உடலுக்கும் கண்ணுக்கும் காப்பாகக் கவசம் அணிவது போல், இரைச்சல் மிக்க எந்திரங்க ளிடையே வேலை செய்வோர் காதிலே பஞ்சு அடைத்துக் கொள்ளலாம். காது வேதனையிலிருந்து மீண்டு வாழ்த்தும்.



முதல் படம்:
காதின் உட்புற அமைப்பு.

பேசத் தெரியாத குழந் தைகள் எல்லாம் ஊமை களல்ல! காது கேட்காத தாலேயே பல குழந்தை களுக்குப் பேசத்தெரியாதிருக் கலாம். காது கேட்கக் கருவி பொருத்திப் பாடம் போதித் தால் விரைவில் குழந்தைகள் கற்றறியும்,பேசவும் செய்யும்.

★

ரசனை உணர்ச்சியின்றிப் பல மணி நேரம் திருமணத்தின் போதும் அரசியல் கூட்டங் களின் போதும் ஒலிபெருக்கிகளைப் பயங்கர மாக அலறவிடுவோர் சமூக விரோதிகள் என் கிறார்கள் காது வைத்தியர்கள். சாலையில் வண்டியை மேலே ஏற்றி ஓரிருவரைக் காயப் படுத்துபவரைவிட, தமது ஹாரனாலும் சைலன் சர் அற்ற மோட்டார் சைக்கிள் ஒலியாலும் பல நூறு பேரின் காதைத் தாக்குபவர்கள் பெரும் குற்றவாளிகள் எனலாம்.

காதின்மீது பலத்த தாக்குதல் நேர்ந் தாலும் செவிச் செல்வம் சீர்கெடுகிறது. இளமையில் காதின் மீது பள்ளி ஆசிரியர் கொடுத்த பலத்த அடியால் காது கேளாமல் போனவர்களும் உண்டு.

காது கேளாதவரைப் பரிகசிப்பது பேதைமை. காது மந்தமானவர் மொத்தத் திலே மந்தமானவர் என்று பொதுவாகக் கருதப்படுவதும் தவறு. அவர்களுக்குக் கவனம் கூர்மையாக இருக்கும். கண்ணே காதாகப் பணி புரியும். உதட்டசைவு கண்டே பிறர் பேச்சை உணர்வார்கள்.

சிலருக்கு ஒரு காது மந்தமாக இருக்க லாம். அதுவும் அடிக்கடி காதில் மெழுகு வேக மாகச் சேர்வதால் நேரலாம். அதைக் கவ னித்தால் குறை நீங்கும். இது தாற்காலிகக் குறை.

பிறவியிலேயே காது ஊனமாயிருப்பதும் உண்டு. தாயின் பிரசவகால நோய் ஏதேனும் காரணமாக இருக்கலாம். நெருங்கிய உற வினர் தமக்குள் மணப்பதால் சில குழந்தை களுக்குக் காணும் குறைகளுள் ஒன்று இது. பிறவியில் காது மந்தமானால் குழந்தைக்கு எளிதில் பேச்சு வராது. பல ஆண்டு கால ஆராய்ச்சியால் இப்போது பிறவி ஊமை என்று கருதப்பட்ட பல குழந்தைகள் ஊமை யல்ல, செவிடுதான் என்று தெரிந்துள்ளது. இவர்கள் பிறர் பேசக் கேட்க முடியாததால், பேசக் கற்கவில்லை. இவர்களுக்குப் பேச்சுப் பயிற்சி நிலையங்கள் உள்ளன. ஒரு குழந்தை யின் செவி சீராக இருக்கிறதா என்பதை ஒன்பது மாதத்திலேயே அறியலாம்.

காது ஊனங்களைக் கவனித்து மருத்துவம் பார்க்கும் திறமைகள் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் பெரிதும் அதிகரித் துள்ளன. காது உறுப்புகள் மிக நுண்ணியவை. இவற்றை இருபது மடங்கு பெரிதாகக் காட் டும் கண்ணாடிகளை வைத்து ரண சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. செவிப்பறை கிழிந்தோ, உருகியோ பழுதானால் புதிதாக அமைக்க லாம். இரத்தக் குழாய் ஒன்றை வெட்டிப் பிரித்து அதைக் கொண்டு புதிய பறை அமைப்பது ஒரு சிகிச்சை !

காது ஊனங்கள் விபரீதமாவதும் உண்டு. உள் காது வரை பழுதாகியும் சிகிச்சை எடுத் துக் கொள்ளாமல் இருந்தால், அதை அடுத்த

நரம்புகள் பாதிக்கப்பட்டு, மூளையே கெட்டு விடுவதும் உண்டு!

அதிர்ச்சியால் சிலர் தாற்காலிகச் செவிடர் ஆகின்றனர். இது சில நாட்களில் தானே சரியாகலாம். அல்லது மனோவியாதி நிபுணர் உதவி தேவைப்படும்.

உட்செவி எலும்புகளில் மூன்றாவது உள் எலும்பு பருத்துப் போய் அசைவு அடங்குவதால் காது மந்தமாவதும் உண்டு. இதை மட்டும் நீக்கி, செயற்கை உறுப்புப் பொருத்துவது ஒரு சிகிச்சை. இந்த ரண சிகிச்சை நடந்து கொண்டிருக்கும்போதே தன் காது சீர்ப்பட்டுவிட்டதை நோயாளி அறியமுடியும். நமது நாட்டுப் பெண்மணிகளுக்கு, முக்கியமாகக் கருவுற்றிருக்கும் போது 'ஆடோஸ்கிலிரோசிஸ்' என்னும் இந்தத் தொந்தரவு தெரிகிறது. உள் காதின் மூன்றாவது எலும்பு வளர்வது என்னும் குறை சில இனத்தவருக்கு மட்டும் — மங்கோலியர், நீக்ரோவர், மத்திய தரைக் கடல் மக்கள் என்போருக்கு — அதிகம் தெரிவதற்கு ஏதாவது தனிக் காரணம் இருக்கலாம் என்கிறார்கள். ஆராய்ச்சி நடக்கிறது.

காது மந்தமானவர்கள் சிலர் பயன்படுத்தும் கருவிகள் கேட்கும் ஒலியைப் பெருக்கும் சாதனங்களே. சிலருக்குப் பலத்த சத்தம் மட்டும் கேட்கும். மெல்லிய ஒலி கேளாது. இவர்களுக்கு எல்லா ஒலியையும் பெருக்கிக் காட்டும் சாதனம் எதற்கு? எனவே மெல்லிய ஒலியை மட்டும் பெரிதாக உணர்த்தும் புதிய சாதனங்களை இவர்கள் பொருத்திக் கொள்ளலாம். சட்டைப் பையில் ஒரு சிறு பெட்டியும் அதனுடன் இணைந்த இரு காதுக் குழாய்களும் கொண்ட பெரிய அமைப்பும் உண்டு. மூக்குக் கண்ணாடி சட்ட விளிம்பில் மறைவாகப் பொருத்திய அமைப்பும் உண்டு. சிறிய தீப்பெட்டி போல் வெளிக் காதின் புறத்தில் ஒளித்துக் கொள்ளும் அமைப்பும் உண்டு.

இன்பமிக்க இசை அறிவு பெருக்கும் பேச்சுக்கள் இயற்கையின் ஒலிகள். இவற்றைஅனுபவிக்க ஏற்ற செவிகளைக் கண்ட கண்டதையெல்லாம் கேட்கச் செய்து துன்புறுத்தலாகாது! அது காதுக்கும் நல்லதல்ல, மனத்துக்கும் ஆரோக்கியமல்ல !

கட்டுரை: தம்பி சீனிவாசன்

ஆலோசனை: டாக்டர் எஸ். காமேசுவரன்

வட்ட மேஜை

நாடெல்லாம் நவகாளியா ?

சீ ஜாதாவின் ''இளநீர்'' விருந்து பீறிடும் இரத்தத்தின் பயங்கரத்தில் நான் விக்கித்து நிற்கிறேன். மீண்டும் அப்பக்கங்களைத் திருப்ப அஞ்சுகிறேன். கால் நூற்றாண்டுக்கு முன் ஒரு நவகாளிதான் நடந்தது. இன்று நாடெல்லாம் நவகாளி. இப்படிச் செய்துவிட்ட புண்ணியவான்கள் நற்கதியடையட்டும்.

காலப் பெட்டகத்தில் வைக்க வேண்டிய கதை.

சென்னை—20 பொன்னித்துறைவன்
24—1—74

அவ்வாறு நடக்கவில்லை

கல்கி 27—1—74 இதழில் தமிழ் நாட்டிலே... பகுதியில் ''சட்டையைக் கிழித்த அதிகாரி'' என்பதாகப் பத்திரிகையில் படித்த செய்தியைத் திரு தீரன் எழுதியிருக்கிறார். இந்தப் பத்திரிகைச் செய்திக்கு நாங்கள் மறுப்பு விடுத்து அதுவும் பிரசுரமாகியிருப்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

9—1—74 அன்று வர்த்தக வரிகள் இலாகா உத்தியோகஸ்தர்கள் உரிய ''ஸர்ச் வாரண்டு'' களுடன் பார்க்டவுனில் உள்ள ஓர் எவர் ஸில்வர் வியாபாரியின் வீட்டைச் சோதனையிட்டனர். சோதனையின்போது மேற்படி வியாபாரி தமது சட்டை பாக்கெட்டில் சில குறிப்புக்களை வைத்துக் கொண்டிருப்பதை ஓர் அதிகாரி கண்டார். அந்தக் குறிப்புக்களைக் காட்டுமாறு கேட்டார். வியாபாரி மறுத்ததுடன் திடீரென்று குளியலறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டார். பத்து நிமிஷங்கள் கழித்து வெளியே வந்தபோது அதிகாரி மீண்டும் அக்குறிப்புக்களைத் தருமாறு கேட்டார். வியாபாரி கொடுக்க மறுத்ததுடன் அதிகாரியைத் தாக்கவும் செய்தார். பிறகு போலீஸ் உதவியுடன் அவர் பாக்கெட்டில் வைத்திருந்த குறிப்புக்கள் கைப்பற்றப்பட்டன. எலிஃபெண்ட் கேட் காவல் நிலையத்தில் புகார் செய்ததன்பேரில் வியாபாரி கைது செய்யப்பட்டார்.

மேற்படி வியாபாரி சோதனை செய்ய வந்த அதிகாரிகளால் தாக்கப்பட்டார் என்று உள்ள செய்தி தவறாகும்.

சென்னை இயக்குனர்,
25—1—74 செய்தி, பொதுநலத் தொடர்பு
அலுவலகம், தமிழக அரசு

தபால் கார்டு அவசியம்

தபால் கார்டை அதிகமாக ஏழை, எளிய மக்களே பயன்படுத்துகின்றனர். தபால் கார்டு முறையை ஒழிக்க அரசாங்கம் யோசிப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. தபால் கார்டினால் அஞ்சல் துறைக்கு அதிகம் செலவாகிறதாம். எனவே தபால் கார்டை எடுத்துவிடப் போகிறார்களாம். வாதத்துக்கு ஒப்புக்கொள்வோம். அரசாங்கத் துறை நிறுவனங்கள் பல நஷ்டத்தில்தான் நடைபெறுகின்றன. எனவே அரசாங்கத்துறை நிறுவனங்கள் அனைத்தையுமே ஒழித்துவிடலாமே?

கரூர்—1
21—1—74 எஸ். ஜெயராமன்

'பல்லவா' ஊழியர் பாலாஜி!

உடலில் ஊனம்; உள்ளத்தில் ஊக்கம்

பள்ளி இறுதியாண்டு பரீட்சையில் தேர்ந்து விட்டான் அந்த மாணவன். பள்ளியிலுள்ள மற்ற மாணவர்களைப் போலவே மைதானத்தில் ஓடி ஆடி விளையாடினான். எவ்வித மான குறையும் இல்லை.

ஒரு நாள்...

இரவு நேரம்.

பூனாவிலிருந்து கிர்க்கிக்குச் செல்ல வேண்டிய ரயிலில் ஏறுவதற்குப் பதிலாக, தவறுக, கோர்புரி மார்க்கம் செல்லும் ரயிலில் ஏறிவிட்டான்.

வழியனுப்ப வந்தவர்கள் வண்டி மாறுபட்டத்தை அறிந்து போட்ட அவசரக் கூச்சலில் பயந்து விட்டான்.

பிளாட்பாரத்தை விட்டு ரயில் புறப்பட்டு, வேகத்தை அதிகமாக்கிக் கொண்டு விட்டது என்பதைக் கூடப் பாராமல், குதித்து விட்டான்!

இருப்புப் பாதையில் விழுந்து, கருங்கல் ஜல்லிக் குவியலில் புரண்டான். நினைவு தப்பியது. விளைவு?

வலது கை பயனற்றுப் போனதால் துண்டிக்கப்பட்டது. அரசு மருத்துவ மனையில். வலது தொடை எலும்பு பிசகி வளைந்து விட்டது. பூனா மருத்துவ மனையைச் சேர்ந்த டாக்டர் மோட்வானி சிறந்த சிகிச்சை செய்தும் வலது காலை நேராக்க முடியவில்லை. வலப்புறம் சாய்ந்தேதான் இன்றும் நிற்கவும் நடக்கவும் முடிகிறது. பதினறு வயதில், இந்த நிலைக்கு ஆளானன் மாணவன் பாலாஜி.

பெற்றோர்கள் மனம் கலங்கினலும் பிள்ளை — மனங் கலங்கவில்லை. "கடவுள் என்னை இந்த மட்டிலாவது உயிர் பிழைக்க வைத்தாரே" எனத் தேற்றிக்கொண்டான்.

"பூனாவில் என் தந்தை பல வருஷங்கள் மத்திய அரசாங்கத்தில் பணிபுரிந்து வந்தார். எங்கள் குடும்பமும் அங்கே தான் இருந்தது. அங்கே Artificial Limb Centre உள்ளது. அங்கேதான் நான் செயற்கைக் கை வைத்துக் கொண்டேன்..."

"வீட்டில் இருந்தவாறே ஏதேனும் தபால் மூலம் கல்வி கற்றீர்களா?"

"எங்கள் குடும்பம் பின்னர் சென்னை வந்து விட்டது. நான் வீட்டில் இருந்தபடியே ஹிந்தி படித்து விஷாரத் பட்டம் பெற்று விட்டேன். சம்ஸ்கிருதமும் அவ்வாறே படித்து 'பரிச்சய' பாஸ் செய்தேன்."

"இப்போது உங்களால் மற்றவர்களைப் போல வெகு தூரம் நடக்க முடியுமா?"

"முடியும். ஆனல் மெதுவாகத்தான் செல்ல முடியும். பத்து வருஷங்களுக்கு முன்னல் வலப்புறம் சாய்ந்தே நடக்க முடிந்தாலும், சற்று வேகமாக நடந்தேன். இப்போது பெருமூச்சு உண்டாகிறது."

வேலை தேடித் தரும் நிலையத்துக்குத் தாமே சென்று, தம் பெயரைப் பதிவு செய்து விட்டு வந்தார் பாலாஜி.

அவருடைய விண்ணப்பத்தை உடனடியாக Special Employment Exchange for Physically handicapped பிரிவுக்கு அனுப்பினர்.

அரசாங்க அலுவலகங்களில் தாற்காலிக எழுத்தர் வேலையைச் சில ஆண்டுகள் பார்த்த பிறகு, தமிழ் நாடு அரசு போக்குவரத்தில் சேர்ந்தார். இன்று பல்லவன் போக்குவரத்து வடபழனி கிளையில் ஓர்க்ஸ் கிளார்க்ஆகப் பணியாற்றி வருகிறார்.

"இடது கரத்தினல் லெட்ஜரைப் புரட்டி, இடது கரத்தினலேயே பேனப் பிடித்து எழுதுகிறார். ஒரு கையாலேயே அலுவலக வேலைகளைக் கவனிக்கிறார். கடிதக் குறிப்புகள், பில்கள், கடிதங்களை லாகவமாகக் குண்டூசியால் இணைக்கின்றார். இடக்கரத்தாலேயே" என்று பாலாஜியின் சக ஊழியர் ஒருவர் பெருமிதத்துடன் சொன்னர்.

வீட்டில் தமக்கு வேண்டிய சில்லறை வேலைகளையும் தாமே கவனித்துக் கொள்கிறார். இடது கரத்தாலேயே ரேசரில் பிளேடு பொருத்தி முக க்ஷவரம் செய்து கொள்வாராம்!

"ஆமாம், உங்களால் பஸ்ஸில் அலுவலகம் போய் வர முடிகிறதா — சௌகரியமாக?"

"நான் பல்லவன் போக்குவரத்து ஊழியன் என்பதை பஸ் கண்டக்டர்கள், டிரைவர்கள் அறிவார்கள். பஸ்ஸில் என்ன கூட்டம் இருப்பினும் என்னைக் கை கொடுத்துக் கண்டக்டர் ஏற்றி, தம் ஆசனத்தில் உட்கார வைத்து விடுகிறார். என் நிலையை மக்களும் உணர்ந்து அநுதாபத்துடன் நடந்து கொள்கிறார்கள்."



முப்பத்தெட்டு வயதாகியும் மணமாகாதவராக இருக்கிறார். "என் உடல் நிலையை, ஊனத்தைக் குறைவாக மதியாமல் திருமணம் செய்து கொள்ள முன்வந்தால் ஏற்க விரும்புகிறேன். வாழ்க்கைத் துணை வயதான காலத்துக்கு மிக மிகத் தேவைதானே?" எனவும் பாலாஜி தெரிவித்தார்.

புத்தகங்கள் பத்திரிகைகள் படிப்பதுதான் இவருக்குப் பிடித்த பெரிய பொழுது போக்கு.

பேட்டி: **ஏ. சுவாமிநாதன்**



தண்டனை உண்டு!

சரவன்

"யார்? நம் வாத்தியார் ஐயாவா?'' என்ற பழக்கமான குரல் கேட்டு, ஆசிரியர் நடராஜன் திரும்பிப் பார்த்தார்.

''ஓ! பழனிச்சாமியாப்பா? என்ன சேதி?'' என்று கேட்டவாறு நின்றார் நடராஜன்.

''வந்து...வந்து... ஐயாகிட்டே எப்படிச் சொல்வது என்று புரியாமல் தவிக்கிறேன்... இருந்தாலும்...!''

''உம்! எதுவானாலும் சொல், பழனிச் சாமி!''

''ஐயா! உங்கள் பிள்ளை கந்தசாமியைப் போலீசில் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள், ஐயா!''

''அப்படியா பழனிச்சாமி? காரணம்?'' என்று துடிப்புடன் கேட்டார் நடராஜன்.

''கோபால் ஐயர் ஓட்டல் கல்லாவிலிருந்து ஐம்பது ரூபாய் திருடிவிட்டானாம். கையும் களவுமாய்ப் பிடிபட்ட அவனைப் போலீசில் ஒப்படைத்து விட்டார் ஐயர்.''

இந்தச் சேதியைக் கேட்டவுடன் நடராஜனுக்கு ஒன்சாண் உடம்பும் குறுகிவிட்டதில் அதிசயமில்லை. பரம மானியான அவருக்கு இப்படி ஒரு சோதனையா?

மேற்கொண்டு அங்கு நிற்க மனம் சம்மதிக்கவில்லை. நேராய் வீட்டுக்கு வந்தார். அவர் முகத்திலே உற்சாகம் இல்லை. நடையிலே மிடுக்கு இல்லை. குரலில் தெளிவு இல்லை.'

''ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்? பையன் கந்தசாமியை இன்னும் காணோமே! தீப்பெட்டி வாங்கி வரும்படி அனுப்பினேன். அப்போதே போனானே!'' என்று கவலையுடன் கேட்ட மனைவி சாரதாம்பாளைப் பரிதாபத்துடன் நோக்கினார் நடராஜன்.

''ஏன்? உன் காதுக்கு இன்னும் சேதி எட்டவில்லையா சாரதாம்பா?'' என்று மெலிந்து நலிந்த குரலில் கேட்ட கணவனைப் பரபரப்புடன் நோக்கிய சாரதாம்பாள், ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''அவனைப் போலீசில் பிடித்துக் கொண்டு போய்விட்டார்களாம்!'' என்று தலையிலே மொட் மொட்டென்று அறைந்து கொண்டு நாற்காலியிலே சாய்ந்தார் நடராஜன்.

''ஐயோ! அப்படியா? கந்தனைப் போலீசிலா பிடித்துக் கொண்டு போய்விட்டாங்க? நிசமாவா? என்னங்க? சீக்கிரம் போய் எப்படியாவது அவனை அழைத்துக் கொண்டு வந்து விட வேண்டாமா? அதோ நம்ம பழனிச்சாமி வருகிறான். வாப்பா பழனிச்சாமி! சேதியைக் கேட்டியாப்பா!'' என்று 'கோ' என்று கதறி அழத் தொடங்கி விட்டாள் சாரதாம்பாள். எந்தத் தாயுள்ளம்தான் தன் மகனைப் போலீசில் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று அறிந்த மாத்திரத்திலே வேதனைப் பட்டுத் துடிக்காமல் இருக்கும்?

''அம்மா! நீங்கள் கவலைப்படாதீங்க! நம்ம ஐயாவுக்கு இப்படி ஒரு கஷ்டம் வந்து விட்டதே என்று நான் எத்தனை துடித்தேன் தெரியுமா? இவருடைய குணத்துக்கு இப்படி பையன் வந்து பிறந்து விட்டானே!'' என்று கூறினான் பழனிச்சாமி. அவன் குரலிலேயும் வேதனை இருந்தது.

பழனிச்சாமி, ''ஐயா! சற்று என்னுடன் வெளியே வருகிறீர்களா?'' என்று கெஞ்சிக் கேட்டான்.

''எதற்குப் பழனிச்சாமி?''

''கந்தசாமியை மீட்டு வர வேண்டாமா?''

''அவனை எப்படி மீட்க முடியும் பழனிச் சாமி? கையும் களவுமாய்ப் பிடிபட்டவனை யாராவது விடுவார்களா?''

''ஐயோ! இதையெல்லாம் விமர்சனம் செய்யச் சமயம் இதுதானா? குழந்தை அங்கே எப்படித் துடிக்கிறானோ! ஏ தேவி! ஏன் என்னைச் சோதிக்கிறாய்? பழனிச்சாமி, நீ சீக்கிரம் இவரை அழைத்துக் கொண்டு போய் என் கந்தனை மீட்டுக் கொண்டு வா! இந்தத் தடவை மட்டும் அவனை மீட்டுக் கொண்டு வந்து விடுங்கள். இனி அவனை நான் திருத்தி நல்ல பையனாக இருக்கச் செய்கிறேன்!'' என்றாள் சாரதாம்பாள்.

''இப்படித்தான் நீ ஒவ்வொரு தடவையும் கூறினாய். என்ன நேர்ந்தது? திருந்தினானா? எல்லோரும் என் குணத்துக்காகவும் தாட்சண்யத்துக்காகவும் அவனை இதுவரையில் விட்டார்கள், மன்னித்து. 'பாவம்! நம் வாத்தியார் ஐயாவின் மகன்; போகட்டும்! விட்டு விடுங்கள்!' என்று நாலு பேர் உதவிக்கு வந்தார்கள். இனி என்னால் முடியாது. பழனிச்சாமி! நீ உன் வீட்டுக்குப் போ! என் மீது உனக்கு இருக்கும் குரு பக்தியும் விசுவாசமும் எனக்குப் புரியாமல் இல்லை. ஆனால்....'' என்று கண்டிப்புடன் கூறிய நடராஜனை இருவரும் இரு உணர்ச்சிகளுடன் நோக்கினார்கள். மனைவி கடுமையுடன் பார்த்தான். பழனிச்சாமி அநுதாபத்துடனும் வியப்புடனும் பார்த்தான்.

''பழனிச்சாமி! இப்போது நேராக எங்கே போகப் போகிறாய்?'' என்று கேட்டார் நடராஜன், நடந்து கொண்டே.

''போலீஸ் ஸ்டேஷனுக்கு ஐயா! இப்போது வந்திருக்கும் இன்ஸ்பெக்டர் நல்ல மாதிரி!'' என்று கூறினான் பழனிச்சாமி.

''சரி! பழனிச்சாமி, நீ ஒன்றும் அங்கு பேச வேண்டாம். நான் பேசிக் கொள்கிறேன், தெரிகிறதா?''

''சரி, ஐயா!''

இருவரும் போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்கள். இன்ஸ்பெக்டர் அறைக்குள் முதலில் பழனிச்சாமி நுழைய, அடுத்து நடராஜன் சென்றார். நடராஜனைக் கண்ட இன்ஸ்பெக்டர் வியப்புடன் எழுந்து கை குவித்து வணக்கம் கூறி வரவேற்றார். நடராஜனும் வியப்பு மேலிட்டால் கரம் குவித்துப் பதில் வணக்கம் தெரிவித்தார். தமக்கு ஏன் இன்ஸ்பெக்டர் இப்படி மரியாதை செலுத்துகிறார்!

அவரை அமரச் செய்தார் இன்ஸ்பெக்டர்.

''சார், என்னை யார் என்று தெரிகிறதா உங்களுக்கு?'' என்று கேட்டார்.

குழப்பத்துடன் நடராஜன், ''புரியவில்லையே!'' என்றார்.

''சார்! அரக்கோணத்தில் நான் உங்களிடம் ஐந்தாம் வகுப்பு வரை படித்தேனே! என் பெயர் ராஜசேகரன் சார்!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''ஆ! ராஜசேகரனா நீ? புரிந்து விட்டது. ரொம்ப சந்தோஷம் அப்பா! உன்னை இங்கு சந்தித்ததில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி!'' என்று சந்தோஷத்தை வலிய வரவழைத்துக் கொண்டு கூறினார் நடராஜன்.

''சார்! நீங்கள் இங்கு வந்த காரணம் என்னவோ?''

''ராஜசேகரா ! சொன்னால் வெட்கக் கேடு!...'' என்று இழுத்தார் நடராஜன் அவமானத்துடன்.

''சார்! லாக் அப்பில் இருக்கும் கந்தசாமி என்ற பையனின் தகப்பனார் இவர்'' என்று விஷயத்தைக் கூறினார் பழனிச்சாமி.


''சார்! கந்தசாமி உங்கள் மகனா? ஐயோ! என்ன சோதனை இது?'' என்று அதிர்ச்சியடைந்து போய்க் கேட்டார் இன்ஸ்பெக்டர் ராஜசேகரன்.

''சார்! என்ன இருந்தாலும் அவன் உங்கள் பழைய ஆசிரியருடைய மகன். அவனை எப்படியாவது...!'' என்று கையைப் பிசைந்த வண்ணம் கூறினான் பழனிச்சாமி.

''பழனிச்சாமி! நீ சும்மா இரு! நான் பேசிக் கொள்கிறேன். ராஜசேகரன்! எனக்கு நீ ஓர் உதவி செய்ய வேண்டும்! நான் தேடி வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் நீயாக இருப்பதில் எனக்குப் பெரிய சந்தோஷம். கட்டாயம் செய்தாக வேண்டும். நான் உன்னுடைய ஆசிரியர் அல்லவா?'' என்று கூறினார் நடராஜன்.

அவருடைய இரு கைகளையும் பற்றிக் கொண்டார் இன்ஸ்பெக்டர். ''சார்! என் ஆசிரியர் கூறியதை நான் கட்டாயம் கேட்டே ஆகவேண்டும்; உண்மை! ஆனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் என்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம். என் கடமையை நான் விருப்பு வெறுப்பின்றி நிறைவேற்றியாக வேண்டாமா? அந்தக் காலத்திலே நீங்கள் மனுநீதிச் சோழன் கதையைச் சொல்லிக் கொடுத்ததை நான் மறக்க முடியுமா? குற்றவாளி யாராயினும் உரிய தண்டனையை அடைந்தே ஆகவேண்டும். தயவுசெய்து என் கடமையை நிறைவேற்ற எனக்கு உதவி செய்யுங்கள் சார்!''

''ராஜசேகரன்! எழுந்திரு. நான் வந்த காரணத்தை நீ தவறாகப் புரிந்துகொண்டு விட்டாய். என் மகனை விடுவித்துக்கொண்டு செல்ல உன் உதவியை நாடி வரவில்லை.



இங்கே உன்னைக் கண்டதும் கந்தசாமி உன் பழைய ஆசிரியரின் மகன் என்ற காரணத்தினால் எங்கே அவனை விடுவித்து விடுவாயோ என்று பயந்து விட்டேன், இதோ பார் ராஜசேகர்! சட்டப்படி என்ன தண்டனையோ அதை அவன் அநுபவிக்கட்டும். என் மாணவன் ஒருவன் தன் கடமையை விருப்பு வெறுப்பில்லாமல் செய்கிறான் என்று எண்ணும்போது, என் மகனுடைய செயலால் ஏற்பட்ட அவமானத்தையும் மீறி எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியே உண்டாகிறது. நான் வருகிறேன்!'' என்று கூறி வெளியே நடந்தார் ஆசிரியர் நடராஜன்.

''சார்! உங்கள் மகனை நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''தேவையில்லை!'' என்று பதில் வந்தது.

குருதேவரின் பதில்

''நீங்கள் மகாகாவியம் எதுவும் எழுதாமலே எப்படி மகாகவி ஆகிவிட்டீர்கள்?'' என்று ஒருவர் ரவீந்திரநாத டாகூரிடம் கேட்டார்.

அதற்கு அவர் கவிதையிலேயே பதில் சொன்னார். அந்தக் கவிதையின் கருத்து இது:

''நான் மகா காவியம் எழுத விரும்பினேன். ஆனால் நான் அந்தச் சிலம்பைக் கலைமகளின் பாதங்களில் சமர்ப்பிக்க முயன்றபோது, அவள் அருளால் அது சுக்குநூறாகி, ஆயிரக்கணக்கான கவிதைமணிகளாகச் சிதறியது !''

ஆதாரம்: 'ஜீவன் ஸாஹித்ய'
ஏ. எஸ்.



ஜீல் கே உஸ் பார்

"இன்று என்ன சமையல்?"

"அனந்து — அனந்த லட்சுமி!"

"சொல்வது விளங்கவில்லை!"

"அதாவது கீரை மசியல். கீரைத்தண்டுக் குழம்பு."

ஒரே மாதிரியான உணவைத் தினம் தினம் சாப்பிட்டுப் பழகியவர்கள் இப்படி அலுத்துக் கொள்வார்கள். அறுசுவை உணவே ஆனாலும் தினமும் ஒரே மாதிரி உணவை அருந்துவதென்றால், அது திகட்டிவிடும்; ஆனால், இந்தப் படத் தயாரிப்பாளர்களுக்கு மட்டும், ஒரே மாதிரிப் படம் எடுப்பது அலுக்கவேயில்லை.

'ஏரிக்கு அக்கரையில்' என்ற தலைப்பில் உருவாகியிருக்கும் கதை முதல் நாள் மிகுந்த இட்டிலி மறுநாள் உப்புமாவான கதைதான். அரச குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் சமீர். அவன் ஒரு சைத்ரிகன். நீலு என்னும் குருட்டுப் பெண்ணை ஏரிக்கரையில் சந்திக்கிறான். காதல் கொள்ளுகிறான். அவன் அன்னையோ தனது திவானின் மகள் ஜுக்னுவை அவனுக்கு மணம் முடித்து வைக்க முயல்கிறாள். பிரதாப் என்பவன் சமீரின் சொத்துக்குப் பாகஸ்தனாக வந்து பயமுறுத்துகிறான். அவனுக்கு ஒரு கள்ளக் காதலி மாயா. அவளுக்குக் கணவன் பால்ராஜ். கதையைப் பின்னிக் கொண்டு போக அடுக்கடுக்கான நிகழ்ச்சிகள்! அடி தடி சண்டைகள்! ஆட்ட பாட்டங்கள்! குல்ஷன் நந்தாவின் சம்பவச் சுரங்கம் வற்றவே வற்றாது போலிருக்கிறது!

நடிகர்கள் மாறினாலும் நடிப்பு மாறவில்லை. சமீராக வருகிற தர்மேந்திரா இனி புதிதாக ஆளாகக் கூடாது என்று எண்ணியிருந்த வலைத் திகிலுறச் செய்யப் படக் கதை தோழியைக் காவு வாங்குகிறது!

இந்த அதிர்ச்சியில் கருச் சிதைய வேண்டாமோ?... மனத் தத்துவக் கதை ஆதலால், அவளைக் குழந்தையும் தாயுமாகப் பிழைக்க வைக்கிறது. 'தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால், பிள்ளையை...' என்ற பழமொழி

காமினி

இறைவனின் அன்பையும் அருளையும் குறிக்க மணிவாசகர் இம்மண்ணுலகில் கிடைக்கக்கூடிய உன்னதமான அன்பாகிய தாயின் அன்போடு ஒப்பிட்டுக் கூறுகிறார் பின் வருமாறு: பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து..." என்று.

ஆனால் இக்கதையில் வரும் அன்னையோ தான் பெற்ற மகவுக்குப் பாலூட்டக் கூசுகிறாள், தன் அழகைப் பேணும் தன்னல நோக்கில். அந்தப் பாலுக்குப் போக்கிடம்? படத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். 'ஏ' படம் ஆயிற்றே!

தாதி குளிப்பாட்ட அந்தக் குழந்தையை வாங்கிக்கொள்வதில் தாய் காட்டும் அருவருப்பு....! பார்த்தால் எந்தத் தாயுமே பிள்ளைப் பேறுக்கு ஏங்க மாட்டாள்!

இப்படிப்பட்ட தாயின் பராமரிப்பில் வளர்ந்த கன்னி கல்லூரிப் படிப்பின்பொழுது, ஒரு பிரசவ வேதனையைக் காண்கிறாள்; அத் தாய் இறந்துபடுவதையும் பார்க்கிறாள்!

பலன்...? தனக்குப் பிள்ளைப் பேறே கூடாது என்ற முடிவுக்கு வருகிறாள்!

ஊருக்குத் திரும்பியவள், தன் தோழி கருவுற்றிருப்பதைக் கேட்டுக் கலங்குகிறாள். அந்தத் தோழியோ பிறவிப் பயனைப் பெற்று விட்டதாகப் பேறுகாலத்தை எதிர் நோக்குகிறாள்! இதற்கிடையில் இவளும் இல்லக் கிழத்தியாகிப் பிரசவத்துக்கு அஞ்சுகிறாள்! ஆயினும் இயற்கை நியதி அவளையும் விட்டு வைக்கவில்லை! ஏற்கனவே இந்தக் கதிக்கு



நடிக்கக் கற்க வேண்டியதில்லை. கற்ற நடிப்பையே கையாண்டு கதையை நடத்திச் செல்கிறார். மும்தாஜ் நல்ல நடிகை; பிறர் பார்த்துப் பின்பற்ற வேண்டும் என்று வைத்துக் கொள்ளாமல், குருடியாக மௌஸமி சட்டர்ஜியைப் பின்பற்றி விடுகிறார்! ஜுக்னுவாக வரும் யோகிதா பாலியும் சமீரை மயக்க வேறு ஒரு படத்தைக் காப்பி யடிக்கிறார்! அவரது தந்தையாக வரும் இஃப்தெகாரினால் தமக்குப் பழக்கமாகி விட்ட போலீஸ் நடிப்பை மறக்க முடியவில்லை; டாக்டராகவந்து சத்ருக்னசின்ஹாவும் பழகி விட்டவர்தான். இருந்தாலும் தம் மிடுக்கான நடிப்பால் தம்மை ரசிகர்களின் நினைவில் இருத்திவிட முயல்கிறார்! பிரேம் சோப்ரா — ரஞ்ஜித் இத்தகைய பாத்திரங்களில் வழுக்கு மரம் ஏறி வெற்றி கண்டவர்கள்! எனவே, பழைய சம்பவங்களுக்குப் புத்துயிரூட்டி மகிழ்விக்கிறார்கள்.

நடிகர்களுக்கு அலுக்கவில்லை!

கதாசிரியருக்கு அலுக்கவில்லை!

படத் தயாரிப்பாளர்களுக்கு அலுக்கவில்லை. ஏன்?—ரசிகர்கள் பார்க்கிறார்கள் என்பதனால்! ரசிகர்களுக்கும் அலுக்கவில்லையோ!

யைப் பொய்யாக்கி, அன்னையின் அரவணைப்பிலே பிள்ளையைப் பாராட்ட வைத்துச் சுபமாகவும் முடிகிறது!

இப்படியாகப் படக் கதை பிரசவ வேதனைப் பட்டாலும், பிஞ்சு உள்ளத்தில் பசுமரத்தாணியாகப் பதியும் நினைவுகளைச் சித்திரிக்கும் இடத்திலே பாராட்டுக்குரிய உத்தி பளிச்சிடுகிறது. ஆனால் கடற்கரையையும் காரையும் திரும்பத் திரும்பக் காட்டிப் பார்ப்பவர்களையும் பிரசவ வேதனைப்பட வைத்து விடுகிறார்கள்.

பெண்களைப் பற்றிப் படரும் இக்கதையில் அப்பாத்திரமேற்று நடித்துள்ளநடிகைகள் அனைவருமே நடிகர்களைக் காட்டிலும் சோடையின்றி நடித்திருக்கிறார்கள். குறிப்பாகச் சோபனா, ராணி சந்திரா குதிர்வட்டம் பப்பு மூவரும் மனத்தில் நிற்கிறார்கள்.

ஆயினும் படம் முழுவதும் பார்த்து எழுபவர்களுக்குப் பத்துப் பிள்ளைகளைப் பெற்ற பிரயாசை தோன்றும்; அந்த வேதனையில் பிரசவ வைராக்கியமே எழும். ஆனால் அந்த வைராக்கியம் என்றைக்காவது . நிலைத்திருந்ததுண்டா? மீண்டும் படம் பார்க்கப் போகாமல் இருந்து விடுவார்களா?

— ரா. வீ.



மான்யஸ்ரீவிசுவாமித்ரன்

தன்னைக் கவர்ந்த ஆடவனையே மணம் செய்து கொள்ளும் பாக்கியம் நேர்ந்தது குஸுமம் (ஷீலா) என்ற பெண்ணுக்கு. கல்யாணத்துக்கு முன் அவளை வரிக்கப் போகும் கணவன் மார்த்தாண்டம் தம்பி (மது) தான் ஒரு சில லட்சியங்களும் வாழ்முறையில் ஒருசில கட்டுத் திட்டங்களுமுடையவன் என்று அவளிடம் கூறுகிறான். அவற்றை ஏற்றுத் தன் வாழ்க்கை லட்சியத்துக்குத் துணையிருக்க முடியுமா என்றும் கேட்கிறான். இந்நிலையில் எந்தப் பெண்தான் முடியாது என்று பதில் சொல்லிவிடுவாள். குஸுமம் மிக மகிழ்ச்சியோடு அவனுக்கு வாழ்க்கைத் துணையாக லட்சிய மனைவியாக வாழ ஒருப்பட்டாள். ஆனால் அப்படி அவள் ஒப்புக்கொண்டபோது இப்படி ஓர் இடி தன் தலைமேல் விழும்என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

மார்த்தாண்டம் தம்பி ஒரு விநோத லட்சியவாதி. செல்வமும் செல்வாக்கும் மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் தான். நல்ல படிப்பும் பண்பாடும் வாய்ந்தவன்தான். ஆயினும் அவன் ஒருவிதக் கற்பனை உலகில் வாழ்ந்து வந்தான். மனிதன் ஆசாபாச உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி வாழ்ந்தால் பேரின்ப உலகை எட்டிவிடலாம் என்பது அவன் கொள்கை. ஆகவே உணர்ச்சிகளை, ஆசைகளைக் கட்டுப்படுத்தி வாழவேண்டும் என்று தன் மனைவி குஸுமத்துக்கு முதலிரவு அன்று உபதேசிக்கிறான். இருவரும் வெவ்வேறு படுக்கைகளில் படுத்துத் தூங்க முயல்கிறார்கள்! இதைவிட ஒரு பெண்ணுக்கு ஒரு பேரிடி வேறு என்ன இருக்க முடியும்? நேரக் கட்டுப்பாடுகள் சட்ட திட்டங்கள் எப்படி என்கிறீர்கள்? மனைவியிடம் பேசுவதற்குக் கூடக் குறிப்பிட்ட நேரம் உண்டு.

இப்படி அவன் ஒவ்வொரு காரியத்துக்கும் காலநியதியைக் கடைப்பிடிக்க உதவும் காரியதரிசி பாலசந்திரன் (பகாதூர்) சமையற்காரன் சங்கரன் (பாலகி) ஆகியோர் பல நகைச்சுவைக் காட்சிகளை அளிக்கிறார்கள். ஆனால் குஸுமம் தான் ஒரு படித்த அழகிய ஆண் மகனையல்ல, ஓர் யந்திரத்தை மணந்திருப்பதாக உணர்கிறாள்!

இந்த யந்திரத்தை மனிதனாக்கும் முயற்சியே திரைக் கதை. விலா வெடிக்கச் சிரிக்க வைக்கும் பல காட்சிகள் வருகின்றன. குஸுமத்தின் தங்கையாக வரும் பத்மம் (ஜெயபாரதி) மாமன், தாயார் எல்லாரும் சேர்ந்து அரும்பாடுபட்டு மார்த்தாண்டத்தைச் சாதாரண மனிதனாக்குகிறார்கள். மார்த்தாண்டம் மனம் மாற முக்கிய காரணம் அவன் தம்பி ரமேஷ் அளிக்கும் அதிர்ச்சியே ஆகும்! தன் லட்சியத்தைத் தம்பி பம்பாயில் ஆசிரமம் அமைத்துப் பரப்பி வருகிறான் என்று எண்ணிக் கொண்டிருக்க அவன் ஹிப்பிகளுடன் சேர்ந்து காமக் களியாட்டங்களில் மூழ்கியிருக்கிறான் என்ற ரகசியம் வெளிப்படுகிறது.

கதாசிரியர் ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சாரதாமணி தேவி, மகாத்மா காந்தி போன்றவர்களைப் பெற்றுத் தந்த நாடு இது என்பதை மறந்து விட்டாரோ! ஆனால் எல்லாருமே காந்தியாகவும் ராமகிருஷ்ணராகவும் ஆகிவிட முடியுமா என்ன? மிக உன்னத லட்சியங்களை மேற்கொள்பவர்கள் அதற்குரிய தகுதி, அறிவு, வைராக்கியம் ஆகியவை நமக்கு இருக்கிறதா என்பதை நன்றாக யோசித்துப் பின்னரே செயலில் இறங்க வேண்டும் என்று உணர்ந்து வாழ இக்கதையின் நோக்கமாயிருக்கலாம். - எஸ். வி. எஸ்.

பிணைப்பு



அயர்லாந்துக் கதை

கன்றுக்குட்டி செத்தே பிறந்தது. கர்ப்பத்திலிருந்து வரும்போது வால் தான் முந்தி வந்தது. அதன் சிவந்த பாரியான உடம்பு பசும் புல்தரையில் விழும் போதே அது செத்துக் கிடந்தது. அருகில் நின்று கொண்டிருந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் மோனமாகத் தலையை அசைத்தனர். பசுவின் சொந்தக்காரியான குடியானவன் மனைவியோ விதியை நொந்து கொண்டு அழுதாள். ஈன்ற உபாதை தாங்காமல் பசு கதறிற்று. பிறகு அது தன் பூதாகாரமான உடலுடன் சுற்றிச் சுற்றி வந்து குளம்புகளினால் பூமியைத் துவம்சம் செய்தது. தலையைத் தாழ்த்திக் கன்றுக் குட்டியின் மீது வைத்துக் கொண்டே மறுபடியும் நன்றாக மோப்பம் பிடித்தது. பிறகு அந்த உயிரற்ற உடலைத் தன் சொர சொரப்பான நாவினால் ஆசை தீர நக்கித் தீர்த்தது. அந்த மாது, பசுவின் நெற்றியைப் பரிவுடன் சொரிந்து கொடுத்தாள். அவள் கண்களில் நீர் மல்கியது. தாயின் துயரம் தாய்க்குத்தானே தெரியும்?

மீண்டும் துக்கம் மேலிடப் பசு கன்றுக்குட்டியை விட்டுச் சற்றே விலகி நின்று தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு பெருமூச்செறிந்தது. இருள் கவ்விய ஒரு கோயிலிலிருக்கும் சன்னலூடே வரும் ஒளிக்கதிர்கள் போல் அதன் மூச்சு திராணியற்று வந்தது. அவர்கள் அதை மேய்ச்சல் நிலத்தின் ஒரு மூலைக்கு விரட்டியடித்தார்கள். களைப்படைந்த அந்தப் பசு தலையைக் குட்டிச்சுவரின் மீது வைத்துக் கொண்டு மன உளைச்சலுடன் வாலை வீசி, வீசி விலாப்புறங்களில் அடித்துக் கொண்டது.

அவர்கள் கன்றுக் குட்டியின் கால்களைப் பிடித்து மேய்ச்சல் நிலத்தில் கரகரவென்று இழுத்துக் கொண்டே குட்டிச் சுவரை அடைந்து, அதைக் கடந்து இன்னொரு மேய்ச்சல் நிலத்துக்குச் சென்று அப்பாலுள்ள குட்டிச் சுவரையும் அதே போல் தாண்டி, செங்குத்தான பாறையின் ஓரத்தை நோக்கிச் சரிந்து புல்வெளியை அடைந்தனர். கீழே கொந்தளிக்கும் கடலில் கன்றுக்குட்டி தள்ளப்பட்டது. அடியில் துருத்திக் கொண்டிருக்கும் பாறைகளினூடே அது கனிபோல் ஒட்டிக் கொண்டது. அவர்கள் சுவர்களின் இடையே இருந்த ஒரு சில வெடிப்புக்களைச் சாந்திட்டு அடைத்துவிட்டுப் பசுவிடம் திரும்ப வந்தனர். அந்தப் பெண் அதற்குச் சூடாக ஒரு வாளி தீனி கொடுத்துப் பார்த்தாள். ஆனால் அது தின்ன மறுத்தது. அவர்கள் வலுக்கட்டாயப்படுத்தி மூங்கில் குழாய் மூலம் தீனியை

லியம் ஓ'ஃப்ளாஹர்டி



அதன் தொண்டைக்குள் செலுத்த முயன்றார்கள். பசு பாதி தீனியை விழுங்கியது. பாக்கியை அப்படியே கொட்டி விட்டது.

பிறகு அவர்கள் வீட்டுக்குச் சென்றார்கள். கன்றுக் குட்டியை இழந்த அந்த ஸ்திரீயின் தாபம் இன்னும் தணியவில்லை. அவள் விதியை நொந்து கொண்டாள். குடியானவன், பசு நஞ்சு போடும் வரை அதன் அருகிலேயே இருந்தான். நஞ்சு போட்டவுடன் அதைக் கற்குவியலுக்கு அடியில் புதைத்து விட்டான். அவன் தன் குதிகாலால் பூமியைக் கிளறிவிட்டு ஒரு பிடி செம்மண் எடுத்துப் பசுவின் அருகில் சிலை போலக் கோலம் போட்டான். பிறகு அவனும் வீட்டுக்குப் போனான்.

பசு நெடுநேரம் வலிக்கு இதமாக சுவரின் மீது சாய்ந்து கொண்டிருந்தது. திடீரென்று சற்றே விலகித் தலையை அசைத்துக் கதறியது. முன்னேறிச் சிறிது தூரம் பெருநடையாக நடந்தது. தன்னைச் சுற்றி ஏதும் காணாமல் தவித்தபடி நின்றது. பிறகு கத்திக் கொண்டே குட்டிச்சுவரை ஒட்டி இங்கும் அங்கும் அதன் மீது தலையைத் தேய்த்தவண்ணம் வட்டமிட்டது. அது எதையும் காணவில்லை. எதுவும் அதன் குரலுக்கு எதிர்க்குரல் கொடுக்கவில்லை. தன் இழப்பின் கொடுமையை உணர உணர அதன் ஆவேசம் அதிகரித்தது. அதன் கண்கள் கோவைப்பழமாகச் சிவந்தன. பாதி தூரம் ஓடியும் பாதி தூரம் நடந்தும் புல் பத்தையில் புரண்டும் பூமியை மோப்பம் பிடித்தது அது.

பிரசவ வேதனையால் பசு படுத்திருந்த இடம் அது. முதலில் இங்கும் அங்கும் அல்லாடிக் கொண்டிருந்ததால் குளம்புகள் பட்டு நெடுக குழி குழியாகச் சுவடுகள் தெரிந்தன. கன்று விழுந்த இடத்தை அது மோந்து பார்த்தது. புல் மேல் காயாத கறைகள் காட்சி அளித்தன. அது தன்னைச் சுற்றிக் கடுஞ் சினத்துடன் பார்த்து விட்டு நாசியைப் பூமியில் வைத்து மோப்பம் பிடித்துக் கொண்டே கன்றுக் குட்டியைக் கரகரவென்று இழுத்துச் சென்ற மார்க்கமாகக் குட்டிச் சுவர் ஒன்றை அடைந்தது. அங்கேயே நின்று நீண்ட நேரம் மோப்பம் இழுத்தது. அந்தச் செல் தடம் எங்குதான் போய் முடிகிறது என்று அதன் குருவி மூளைக்கு எட்டவில்லை. அது தன் பலத்தையெல்லாம் வைத்து அடைப்புச் சுவரைத் தாக்கிற்று. கற்கள் அதன் உடலின் முன் பகுதியைக் குத்தி ஊறு விளைவித்தன. ஆனால் வெறி பிடித்த பசு இன்னும் பலமாகக் குட்டிச் சுவரை இடித்துக் கீழே தள்ளியது. இடைவெளி வழியே மோதி அடித்துக் கொண்டு சென்றதில் அதன் இடது தொடை பால் மடிக்கு அருகில் கீறல் விழுந்தது. அது வலியையும் பொருட்படுத்தாமல் வழியை மோப்பம் பிடித்த வண்ணம் முன்னேறிச் செல்ல முயன்றது.

இப்போது இன்னும் வேகமாகச்சென்றது. இடையிடையே தலையைத் தூக்கிக் கனைத்தது. அதன் நீண்ட விசனக் குரல் எங்கோ மூலையைச் சுற்றி வீசுகிற பேய்ப் புயல் போல, பயங்கரமான உச்ச கட்டத்தை எட்டியது. இரண்டாவது குட்டிச் சுவரின் முன் அது மறுபடியும் நின்றது. மறுபடியும் முட்டி மறுபடியும் சுவரோடு சேர்ந்து விழுந்தது. உடைப்பு வழியே செல்லும்போது அதன் உடம்பு இடுக்கில் சிக்கிக் கொண்டது. திமிறியதால் இரு விலாப்புறங்களிலும் சிராய்த்து இரத்தம் கசிய இடது விலாப்புறத்திலிருக்கும் கீற்று போன்ற வெண்ணிறக் கோடு உருவழிந்தது.

ஒரே பாய்ச்சலில் அது புல் சரிவின் உயர ஏறிச் செங்குத்தான பாறை ஒன்றின் முகப்பை அடைந்தது. கீழே கடல் அலைகள் பாறைகளில் மோதுவதைக் கண்டும் கடற் பறவைகள் வெறுப்பூட்டும் வகையில் துயருடன் கொக்கரிப்பதைக் கேட்டும் பதற்றமடைந்து ஒரு பக்கமாகத் துள்ளிக் குதித்தது. வியப்பினால் உப்பாங்காற்றை 'ஜில்'லென்று குடித்துப் பிறகு கால்கள் நடுங்க அடிமேல் அடி வைத்து முன்னேறியது. பாறைச் சரிவில் அரைக்கச்சை போலச் சரளைக் கற்களால் சூழப்பட்ட உச்சியை அடைந்தவுடன் அது பின்னேறிப் பாய்ந்து கதறிக் கொண்டே காட்டுத்தனமாகச் சுற்றிச் சுற்றி வந்தது. திரும்பவும் மேலே ஏறி, சரளைக் கல் மீது உஷாராகக் காலை வைத்துக் கொண்டு கீழே பார்த்தது. அதன் கன்றுக்குட்டி இழுத்துச் செல்லப்பட்ட வழி அதோடு முடிந்துவிட்டதால் மேலே அடி வைப்பதற்கு இயலாத கட்டத்தில் நின்றது பசு. ஒன்றும் விளங்காத நிலையில் மூச்சை நன்றாக உள்ளுக்கு இழுத்து மோப்பம் பார்த்தது. கடலின் உப்பாங் காற்றைத் தவிர அதன் நாசித் துவாரங்களுக்கு வேறு ஒன்றும் புலப்படவில்லை. அது எழுப்பிய வேதனைக் குரலின் வேகத்தில் அதன் பக்கவாட்டுகள் இரண்டும் அதிர்ந்தெழுந்தன. பிறகு அது கழுத்தை நீட்டி வளைத்துக் கீழே பார்த்தது. அடியில் பாறைகளின் மீது கன்றுக்குட்டியின் சடலம் சிக்கிக் கிடப்பது கண்களில் பட்டது.

உடனே ஆனந்த பரவசத்தால் குரல் கொடுத்தது. கீழே இறங்கும் பாதையை நாடிப் பின்னேறிச் சென்றது.


அது தயங்கித் தயங்கி முன் குளம்புகளினால் சரளைக் கல்லைப் பிறாண்டிக் கொண்டே கீழே இறங்கப் பார்த்தது. ஆனால் கால்களை ஊன்றி வைக்க ஒன்றும் இல்லையே! இன்னும் நூறடிக்குள்தான் கீழே பாறைகளின் மீது கன்றுக்குட்டியின் கண்ணறாவியான உடல் இருக்கிறது. மாடு பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்தது. ஊஹூம்....

சேயைப் பார்த்த தாய் சற்றே பொறி கலங்கி நின்றது. 'மா...' என்று கத்தி அழைத்தது. எதிருணர்ச்சிக் குறிப்பு ஏதும் காணோம். பாறைகளின் மீது கன்றைச் சுற்றி ஒரு பிரம்மாண்டமான அலை வருவது அதற்குத் தெரிந்தது. ''ஐயோ! தண்ணீர்!'' என்று கலங்குவது போன்று இன்னொரு ஒலி கொடுத்தது. அலைமேல் அலையாகச் சுழித்துக்கொண்டு கன்றின் மீது மோதியது. பசு சொல்லொணாத் துயரத்துடன் கதறியது. ''கொந்தி எறிந்து விடுவேன்!'' என்று கூறுவது போல் அலைகளைப் பார்த்துக் கொம்பை அசைத்தது.

உயர எழும்பி வந்த ஓர் அலை முகடு கன்றை அடித்துக் கொண்டு கடலில் விழுந்தது.

உரத்து ஹுங்காரமிட்ட பசுவும் தலைகுப்புறக் கீழே பாய்ந்தது.

தமிழாக்கம் : **ப. சுந்தரேசன்**





DC.G.49 TH

கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள் !

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய் துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.

அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையேதனி—கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே...

உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

பூரண பல்
பராமரிப்பிற்கு
கால்கேட் டூத் பிரஷ்
உபயோகியுங்கள்.
ஒவ்வொருவரின் தேவைக்கேற்றவாறு
அமைய—15 ரகங்கள்.



நட்புறவுக்கு ஒரு கார்டியன்

"இங்கிலாந்திலிருந்து 'கார்டியன்' பத்திரிகைக்காரங்க சென்னைக்கு வந்திருக்காங்க..!" என்று இழுத்தார் 'ஹிந்து' பத்திரிகை நிருபர் 'துக்ளக்' ஆசிரியர் 'சோ'விடம்.

"அப்படியா? சந்தோஷம். ஜல்லிக்கட்டுக்கு அழைச்சுக்கிட்டுப் போய்க் காட்டுங்க. நம்மடவங்க வீரத்தைப் பார்க்கட்டும்" என்றார் 'சோ'.

"அவங்க பத்திரிகைக்காரங்களாகிய நம்மோட கிரிக்கெட் மாட்ச் ஆட வந்திருக்காங்க! நீங்களும் வந்து ஆடணும்!"

"நம்ம கூடவா வந்து கிரிக்கெட் ஆடணும்! ஜாலியா ஊரைச் சுத்திப் பார்ப்பாங்களா... சரி, வரேன்" என்றார் 'சோ'.

'ஹிந்து' பத்திரிகை 'ரேஸ்' நிருபர் கிருஷ்ணன் தலைமையில் 'சோ'வோடு சேர்ந்து 'நவ' நிருபர்கள் எம். ஸி. ஸி. மைதானத்தில் 'கார்டியன்' பத்திரிகைக் கோஷ்டிக்கு எதிராகக் கோதாவில் இறங்கினார்கள்.

என்ன ஆச்சரியம்! 'சோ' பாய்ந்து சென்று ஒரு 'காச்'சைப் பிடித்து 'வார்ஜ்'ஜை 'அவுட்'டாக்கிய பெருமையைப் பெற்றார்!

"பிரமாதம்!" என்று 'லஞ்ச்' வேளையில் ஒரு ரசிகர் 'சோ'வின் அபார 'காச்'சைப் பற்றிப் பாராட்டியபோது, "ஸார்! எனக்குக் கடவுள் நம்பிக்கை அதிகம்! 'அடடா! இத்தனை பெரிய பேப்பர்க்காரங்க வந்திருக்காங்க. நாம 'காச்'சைக் கோட்டை விட்டால் அவமானமாப் போயிடும். கடவுளே! சோதிச்சுடாதே என்று வேண்டிக்கிட்டேன். ஆண்டவன் புண்ணியத்தில் பந்து என் கையிலே வந்து கரெக்டா விழுந்தது! கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது எவ்வளவு உண்மை!" என்று கூறி மகிழ்ந்தார் 'சோ'.

கார்டியன் கோஷ்டியை 133 ரன்களுக்குள் வெளியேற்ற ஏழு விக்கெட்கள் எடுத்தவர்கள் காப்டன் கிருஷ்ணனும் முரளியும்.

"கார்டியன்" பத்திரிகையின் ஆட்டக்காரர்களுக்குக் காப்டன் தமிழக லயோலாக் கல்லூரி பழைய மாணவர் முராரி. இவர் கனடாவில் மெக்கில் சர்வகலாசாலையில் பி.ஏ. பட்டம் பெற்று, 'ஜர்னலிஸம்' விசேஷப் படிப்பில் தேறியவர். 'கார்டியன்' பத்திரிகைக்கு எழுதி வருபவர். கார்டியன் பத்திரிகையாளரின் சென்னைப் படையெடுப்புக்கு மூல காரணம் இந்த முராரிதான்! இங்கிலாந்தில் டெலிவிஷன் நிகழ்ச்சிகள் மூலமும் புத்தகங்கள் எழுதியுமே வாழ முடியும் என்பதை நிரூபிக்கும் முராரி பிரம்மச்சாரி! இந்தப் பிரம்மச்சாரியின் 'மாரியேஜ்' என்னும் புத்தகத்துக்கு இங்கிலாந்தில் ஏகக் கிராக்கியாம்!

தம் மகனுக்கு விரைவில் மணம் முடித்துப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படும் இவரது தந்தை கர்னல் முராரி, அந்தநாளைய சென்னை ராஜ்ய கிரிக்கெட் ஆட்டக்காரர்!


கார்டியனின் விளையாட்டு விமர்சகர் பிட்ஸ் பாட்ரிக் அடித்த 31 ரன்களைக் கண்டு கண் பட்டுவிட்டது போலும்! அவர் பந்தைப் பிடிக்க ஓடியதில் மற்றொரு கார்டியன் ஆட்டக்காரரோடு மோதிக் கொண்டு விட்டார்! அப்புறம் அவருடைய ஆட்டக் கை 'பாண்டேஜ்' கட்டில் தூங்கியது.

இப்படி ஆட்டத்தில் 'ஆட்டம்' காட்டி கார்டியன் கோஷ்டி சென்னைப் பத்திரிகை கோஷ்டிக்கு வெற்றியைத் தேடித் தந்தது!

மறுநாள் எம்.ஸி.ஸி. கோஷ்டியோடு ஆடியபோது தங்கள் தோல்வியை வெற்றியாக்க முயன்றார்கள் கார்டியன் ஆட்டக்காரர்கள்! ஆனால் ஆட்டத்தை 'டிரா'வாக்குவதே பெரிய சாதனையாகி விட்டது அவர்களுக்கு! சென்னை சர்வ கலாசாலை கோஷ்டியிடமும் அவர்களுக்குத் தோல்வி கிட்டியது. ஆனாலும் பொல்லாதவர்கள் இந்தக் 'கார்டியன்' பத்திரிகைக்காரர்கள்! டிராவையும் தோல்வியையும் நட்புறவினால் வெற்றி கொண்டு நட்பின் கார்டியனாக விடைபெற்றனர்!


- குண்டுமணி

'கார்டியன்' பத்திரிகைக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களும், சென்னை கோஷ்டியினரும்: படம்: 'ஹிந்து'



இவளிடம் கிடைக்காத இன்பம்

பீஷ்மன்



விரலிடுக்கில் பிடித்திருந்த சிகரெட் தீர்ந்து போய் நுனியில் கனிந்து கொண்டிருந்த நெருப்பு விரலைச் சுட்டுவிட்டது. அதைக் கீழே எறிந்து பூட்ஸ் காலால் தேய்த்து அணைத்தான்.

தெரஸா இன்னும் கண்ணை மூடிக்கொண்டு தான் உட்கார்ந்திருந்தாள். ஏதோ முணு முணுப்பில், மெல்லிய காற்றில் அசையும் மலரிதழ்களைப் போல் அவள் உதடுகள் நடுங்கு வதை, உட்கார்ந்திருக்கும்போதே உயர மாகத் தெரியும் அவளது நெடிய வடிவை, ரசித்தவாறே சிகரெட் பெட்டியிலிருந்து மற்றொரு சிகரெட்டை உருவியெடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

'இவளுக்கு இன்று என்ன வந்தது...?'

அவன் உள்ளே வந்து உட்கார்ந்து அரை மணிக்கு மேலாகி விட்டது. அறைக் கதவைத் திறந்து கொண்டு அவன் உள்ளே நுழையும் போதும் தெரஸா இதே நிலையில்தான் ஏசுவின் படத்தின் முன் மண்டியிட்டு அமர்ந்திருந்தாள். கதவின் கிறீச்சொலியில் கண் திறந்து ஒரு புன்னகையால் அவனை வரவேற்றுவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டவள்தான்! இன்னும் அவளது தியானம் கலைந்தபாடில்லை.

அடுத்த அறையில் கதவு நிலைக்கு அப்பால் அவன் உட்கார்ந்திருந்த தோற்றம், சட்டம் போட்டு மாட்டப்பட்ட ஒரு சித்திரம் போல் அவனுக்குத் தோன்றியது.

பொறுமை இழக்கும் நிலைதான் என்றாலும் வேறு வழியின்றி, சிகரெட்டின் துணையுடன் சலிப்படைந்த மனத்துடன் அவன் அங்கே உட்கார்ந்திருந்தான். எழுந்து நடந்தால் அடியோசை அவளுக்கு இடைஞ்சலாக இருக்குமோ என்று நினைத்து, உட்கார்ந்தே இருப்பதால் விளையும் சிரமத்தையும் எரிச்சலையும் அவன் சகித்துக் கொண்டிருந்தான்.

'இவளிடம் ஏற்படும் இந்தக் கரிசனம் தனக்குக் கௌரியிடம் ஏன் தோன்றுவதில்லை?' என்று அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

ஏன்...? — கேள்விக்கு விடை இல்லை.

'என்னவோ காரணம்' என்ற சமாதானம் எழுகையிலேயே கௌரியின் வடிவையும் தெரஸாவின் வடிவையும் அவன் மனம் ஒப்பிட்டுப் பார்த்தது.

இவளைவிட அவள் உயரம் குறைவு. நிறம் கம்மி. என்றாலும்... கௌரியின் சிலை போன்ற வனப்புக்கு முன் தெரஸா நிற்க முடியுமா?

அவளுடைய வனப்பு அவனுக்குப் பிடித்துத் தான் இருந்தது. அப்படிச் சொல்வது கூடச் சரியில்லை. அவளுடைய வடிவம் ஒவ்வொரு கணமும் அவனுக்குப் போதையூட்டிக்கொண்டிருந்தது. ஆயினும், அவளுடைய நடவடிக்கைகள்...?

கௌரியைப் பெண் பார்க்கப் போன போது, தன்முன் வணங்கிவிட்டு உயரமாய் எழுந்து நின்ற ஒயில் வடிவைப் பார்த்துவிட்டு "ஓ..." என்று வாய் விட்டே சொல்லிப் பிரமித்துப் போனவன் அவன். அந்த "ஓ"விலேயே அவன் "ஓகே" என்று சொல்லி விட்டதை மற்றவர்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள்.

அவன் வேலை பார்க்கும் நிறுவனத்தில் அவனது பிரிவில் பணி புரிபவர்களில் பெரும்பாலோர் பெண்கள்தான். அவனுடைய சரளமான சுபாவத்தில் லயித்துப்போய் எல்லோருமே அவனுடன் ஓரளவு நெருங்கியே பழகுவார்கள். அவர்களில் ஒருத்திக்குக் கூட, ஏன், அவன் பார்த்தவரைக்குமே இப்படி ஒரு சிலை வடிவம் யாருக்குமே இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை.

எனவே தான் மனமுவந்து, மிகவும் ஆசைப்பட்டு அவன் கௌரியைக் கைப்பிடித்தான்.

மண மேடையில் அவர்களது உருவப் பொருத்தத்தைப் புகழாத வாய் இல்லை.

அவனுடைய நண்பர்கள் எல்லோருமே, "ரகு, யூ ஆர் ஆல்வேஸ் லக்கி..." என்று

கூறிக் கண் சிமிட்டினார்கள். அவனும் தன் னருகே புதுப் புடவையின் மொரமொரப்பில் பூங்கொத்தாய்ச் சிரித்து நிற்கும் கௌரியைப் பார்த்துப் பார்த்துப் புளகித்துத்தான் போனான்.

ஆயின்... முதல் இரவின்போதே அந்தப் புளகத்தில் ஒரு சிறு விரிசல் விழுந்துவிட்டது. அவள் அதை எதிர்பார்க்கவில்லை.

நாணம் பூசிய புதிய எழிலுடன் தன் னெதிரே நிற்கும் கௌரியை, 'தன்னுடைய சொத்தாகி விட்டவளல்லவா இவள்' என்ற நினைப்புடன் ரசித்துக் கொண்டே ஒரு சிக ரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண் டான் அவன்.

''கௌரீ...''

அப்போதுதான் அவன் புகைப்பதை அவள் கவனித்தாள். உரிமையுடன் அவன் கையைப் பற்றிக் கொண்டே... ''இது என் னத்துக்கு இப்போ...?'' என்று கேட்டாள் அவள்.

''எது....?''

அவன் புகைப்பதைச் சுட்டிக் காட்டி னாள் அவள்.

அவன் அவளைச் சுவாதீனமாகத் தன்னருகே இழுத்து உட்கார வைத்துக் கொண்டான். ''இது மட்டுமில்லே கௌரி. எல்லாமே... இப்போதான் வேணும்...'' என்று கூறிச் சிரித்தான் ரகு. அவளுக்கு அவன் கூறியது புரியவில்லை.

''இந்த நாற்றமே எனக்குச் சங்கடமா இருக்கு... எனக்காகவாவது இதைக் கொஞ் சம் கொஞ்சமா நிறுத்திடக் கூடாதா...?''

அவன் சிரித்தான். அவன் வாயிலிருந்து கிளம்பிய புகை அவளைச் சீண்டியது. முகத் தருகே பரவும் புகையை அவள் புறங்கையால் வெறுப்புடன் விரட்டினாள்.

''கொஞ்ச நாட்கள் பழக்கத்திலே உனக்கும் இது பிடித்துப் போயிடும் கௌரீ...!''

அவள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.



''இதோ பாரு! இவ்வளவு அழகா இருக்கே!கொஞ்சம்கூடமாடர்னு இல்லையே!''

''என்னைப் பிடிக்கலையா...?'' என்று குழந்தையைப் போலக் கேட்டாள் அவள்.

''ஓ...! ரொம்ப ரொம்ப...'' — அவள் கை அவனை வளைத்துக் கொண்டது.

''அப்போ எனக்காகவாவது... உம்...?''

அவன் பதில் பேசாமல் சிகரெட்டை உறிஞ்சி இழுத்துப் புகையை ஊதிக்கொண்டிருந்தான்.

''பேச மாட்டீங்களா...?''

''கௌரீ....!''

''ஊ...ம்...?''

''அனாவசியமா என்னைத் தொந்தரவு பண்ணினால் எனக்குப் பிடிக்காது! என் சுதந்திரத்தில் தெய்வம் குறுக்கே வந்தால்கூட எனக்குப் பிடிக்காது.''

அவன் முகத்தில் திடீரெனப் பரவிவிட்ட தீவிரத்தையும் குரலின் கடுமையையும் உணர்ந்த கௌரி நடுங்கிவிட்டாள்.

''நான் ஏதாவது தப்புப் பண்ணினால், என்னை மன்னிச்சுடுங்கோ!''

அவள் குரல் அழுகையாய்க் கரைகையில் அவன் சொல்லிக் கொண்டிருந்தான்: ''இந்த மாதிரி அசட்டுத்தனங்களும் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது!''

அவனுக்குப் பிடித்த மாதிரி எப்படி நடந்து கொள்வது என்ற திகைப்பில் அவள் அயர்ந்து போனாள்.

'கொஞ்சம்கூட இங்கிதம் தெரியவில்லையே இதற்கு!' என்று அவன் எரிச்சலுற்றான்.


அழகுச் சிலையாய்த் தெரிந்த அந்தக் கௌரியிடம் அவனுக்கு, தான் எதிர்பார்த்த ஏதோ ஒன்று கிடைக்கவில்லை என்று அவன் மனம் சலித்துப் போயிற்று.

கருத்து சரியாகச் சேராத நிலையில் எழுப்பப்பட்ட கானமாகத்தான் அவர்கள் உறவு பிறந்தது. அப்புறம் நாட்கள் செல்லச் செல்ல... அவனது பழக்க வழக்கங்களும் மனோபாவமும் அவளுக்கு முற்றிலும் புரிகையில் தங்களுக்கிடையே உள்ள இடைவெளியைக் கண்டு அவள் கலக்கமுற்றாள்.

அவனது ரசனைக்கு ஏற்றபடி தன்னை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று தான் அவள் விரும்பினாள். ஆயினும் அது அவளுக்கு இயலாத ஒன்றாக இருந்தது.

கல்யாணம் ஆவதற்கு முன்பிருந்தே அவளுக்கு ஒரு பழக்கம். அதிகாலையில் எழுந்து குளித்து விடுவாள். பூசை மாடத்தில் குத்து விளக்கை ஏற்றி வைத்து அதன் முன் அமர்ந்து 'சௌந்தர்ய லஹரி'யில் சில பாடல்களை ராகத்துடன் பாடி எழுந்த பின்தான் மற்றக் கடமைகள் அவளுக்கு. புக்ககத்துக்கு வந்த பின்னரும் அவள் இந்தப் பழக்கத்தைக் கைவிடவில்லை.

அவனுக்குப் பொழுது விடிவதற்கே ஏழு மணி ஆகிவிடும். எழுந்ததும் கட்டிலில் பொருத்தப் பட்டிருக்கும் பொத்தானை அழுத்துவான். பஸ்ஸரின் ஒலி கேட்டதுமே காப்பி டிரேயுடன் அவள் தயாராக வந்து நிற்பாள்.



அர்த்தமில்லாத யோசனையுடன் அவளை வெறித்தவாறே காப்பியைக் குடித்து விட்டுக் காலி டம்ளரை டிரேயில் வைப்பான். தயாராகக் கிடக்கும் 'ஹிந்து'வைப் பார்த்துக் கொண்டு படுக்கையில் மறுபடியும் சாய்ந்து கொண்டு விடுவான். அவனுக்கு ஏதும் தேவைப்படுமா என்பதை அறியும்பொருட்டு ஒரு கணம் அங்கே நிற்பாள் அவள். அவன் முகம் திரும்பாதது கண்டு உள்ளே போய் விடுவாள்.

ஒரு நாள் வழக்கத்துக்கு மாறாகச் சீக்கிரமாகவே அவன் எழுந்து விட்டான்.

பூசை மாடத்தின் முன் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்த அவள் செவியில் பஸ்ஸரின் ஒலி கேட்க வில்லை. கேட்டிருந்தால் கூட அவள் அப்போது எழுந்திருப்பாளா என்பது சந்தேகம்தான்.

பூசையில் இருக்கும் 'அம்மா'வைத் தொந்தரவு செய்ய வேண்டாமே என்ற நினைப்பில் சமையற்காரப் பையன் தானே காப்பியை எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

''கௌரி வீட்டிலே இல்லே..?'' என்று தான் கேட்டான் அவன்.

''இருக்காங்க. பூஜை பண்ணிக்கிட்டு இருக்காங்க!''

''ஓ...!'' என்று சொல்லிக் கொண்டே ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான். ''வைச்சுட்டுப் போ!'' என்று ஓர் உத்தரவு போட்டுவிட்டு, நிதானமாகப் புகைக்கத் தொடங்கினான்.

பூசை முடிந்ததும் அவன் உறக்கம் கலைந்து விட்டதா என்று பார்க்க அவனிருந்த அறைப் பக்கம் அவள் சென்றாள்.

அறையில் கட்டிலில் தலையணையில் சாய்ந்தவாறு புகைத்துக் கொண்டிருந்தான் அவன். டீப்பாயின் மீது டிரேயில் காப்பி ஆறிக் கொண்டிருந்தது. 'ஹிந்து' பத்திரிகை பிரிக்கப்படாமல் கிடந்தது.

''காப்பி குடிக்கலே...?'' குரல் கேட்டு நிதானமாக அவன் முகத்தைத் திருப்பினான்.

''இல்லே.''

''ஏன்...?''

''நீ கொண்டு வந்தாயா என்ன?''

''நான் பூஜையில் இருக்கும்போது ராஜு கொண்டு வந்திருக்கிறான்.''

அவன் முகத்தை முகட்டு வளைப்பக்கம் திருப்பிக் கொண்டு சிகரெட்டை உறிஞ்சி உறிஞ்சிப் புகைத்துக் கொண்டிருந்தான்.

''நான் போய் வேறே எடுத்துக் கொண்டு வரேன்...!'' என்று சொல்லிக்கொண்டே, அவள் டிரேயைக் கையில் எடுத்துக்கொண்டாள்.

''வேண்டாம். காப்பி இப்போ தேவையில்லே'' என்று சொல்லிக் கொண்டே அவன் சட்டென்று எழுந்து வெளியே சென்றுவிட்டான்.

'இது என்ன கோபம்?' என்று அவள் நினைத்தாள்.

காரணமில்லாமலேயே அவனுக்கு எரிச்சலும் கோபமும் அதிகரிக்கவே, தன்னைக் கட்டுப்படுத்தத் தெரியாமல் எழுந்து போய் விட்டான் அவன்.

அன்று முழுக்க அவன் அவளுடன் பேசவே யில்லை.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவள் காலைப் பூஜையின் போது மனத்துக்குள்ளாகவே சுலோகங்களைச் சொல்லத் தொடங்கினாள். பஸ்ஸர் ஒலித்தால் காதில் விழுமல்லவா? அவளது இந்த மாற்றத்தை அவன் உணரும் வாய்ப்பே இல்லை.

இப்பொழுதெல்லாம் அவள் அவனுடைய பழக்கங்களைப் பற்றி ஏதும் சொல்வதே இல்லை. ஆயினும் இரவு நேரங்களில் அவன் குடிக்கின்றபோது அவளால் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. கெஞ்சுகின்ற குரலில், ''இது வேண்டாமே...!'' என்று சொல்லி அவன் கையைப் பிடிப்பாள் அவள்.

''ஏய்...!'' என்று அவன் உறுமுவான்.

அவள் நடுநடுங்கிப் போவாள்.

அப்புறம் அவனது கொஞ்சல்களும் போதைக் குளறல்களும்... அவள் மனத்துக்குள் வெறுப்பைத்தான் வளர்த்தன.

நல்ல நிதானத்துடன் இருக்கின்ற வேளைகளில் அவன் பேச்சில் நிலவும் பரிவுகூட அவள் இதயத்தைத் தொடவில்லை.

''நான் ஓர் உல்லாசி கௌரி. லைப் இஸ் ஃபார் என்ஜாய்மெண்ட். புரியலே...?''

அவள் ஒரு பொய்ச் சிரிப்புச் சிரிப்பாள்.

சில சந்தர்ப்பங்களில் அவனது உல்லாச வெறி எல்லை மீறிப் போய்விடும். அவள் தவித்துப் போவாள்.

அவன் சிகரெட் பிடிப்பதையே விரும்பாத அவளுக்கு அவன் தினமும் குடிப்பதையும் சகித்துக் கொள்வது மிகவும் சங்கடமாகத்தான் இருந்தது. அத்துடன் நில்லாமல் அவளையே அவன் குடிக்கும்படி வற்புறுத்திய போது அவள் பொறி கலங்கித்தான் போனாள்.

''கௌரி... கொஞ்சம் டேஸ்ட் பண்ணிப் பாரு! அப்புறம் நீ விடமாட்டே. ப்ளீஸ்... இவ்வளவுதான்...!'' என்று கையில் பிடித்திருக்கும் கண்ணாடி டம்ளரில் அவனுக்குப் பிடித்தமான 'ஃபாரின்' சரக்கைச் சிறிது ஊற்றி அவளிடம் நீட்டுவான்.

''இதோ பாருங்க. நீங்க குடிக்கிறதை நான் எவ்வளவு கஷ்டப்பட்டுச் சகித்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? என்னைப் பார்த்து இப்படிக் கேட்கிறீங்களே, இது உங்களுக்கே நல்லா இருக்கா?''

''கன்ட்ரி... கன்ட்ரி'' என்று அவன் பல்லை நறநறவென்று கடிப்பான். அந்தக் கணத்தில் அவன் எவ்வளவோ ரசிக்கும் கௌரி என்ற அழகிய பெண் அவன் கண்களுக்குத் தெரிய மாட்டாள். வாழ்க்கையை ரசிக்கத் தெரியாத, அவனுக்கு எந்த விதத்திலும் இணையாக முடியாத ஓர் அசட்டு ஜடம் தன்னெதிரே நிற்பதாகத்தான் அவனுக்குத் தோன்றும்.

''போ. முன்னே நிற்காதே!'' என்று பேயாய் அலறுவான்.

விட்டால் போதும் என்ற நிலையில் அவளும் அங்கிருந்து போய்விடுவாள். ஹாலில் சோபாவில் போய் முட்டைக் கட்டிக் கொண்டு 'தனக்கு ஏன் இப்படி ஒரு நிலை?' என்று அவள் மறுகிக்கொண்டிருப்பாள்.

அரை மணி நேரம் கூட ஆகியிருக்காது. அவளைத் தொட்டு உலுக்கிக் கொண்டு அவன் நிற்பான்.

''டார்லிங்...''

அவள் புன்னகையை வரவழைத்துக் கொண்டு எழுந்து நிற்பாள்.

''வருத்தப்படறயா? நோ நோ... என்ன நடந்திடுச்சு இப்போ?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேயே!'' என்று சொல்லிக் கொண்டே அவள் இயந்திரம் போல் அவனைத் தொடர்வாள்.

கௌரி இப்படி இயந்திரமாக மாறி அவனுடன் பழகுகையில், அவன் — தனது போதை நிலையில்கூட — அவளது ஒட்டாத தன்மையைப் புரிந்து கொண்டு சலிப்புற்றான். அவன் எதிர்பார்த்தவை அவளிடம் அவனுக்குக் கிட்டாமல் போன எரிச்சலில் அவன் சலனமுற்ற நாட்களில்தான் தெரஸா அவனுக்குப் பழக்கமானாள்.

அவன் வேலை பார்க்கும் நிறுவனத்தில் பணி புரியும் எத்தனையோ பெண்களில் ஒருத்தியாக இருந்த தெரஸா அவனுக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்ட பிறகுதான் அவனுக்கு அவளைப் பற்றித் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

யாருடைய வீட்டுக்குமே சாதாரணமாக அவன் போவதில்லை. ஆயினும் குழைந்து குழைந்து தெரஸா, தனது பிறந்த நாளன்று அவன் கட்டாயம் தன் வீட்டுக்கு வரவேண்டுமென்று அழைத்தபோது அவனால் அந்த அழைப்பைத் தட்ட முடியவில்லை.

சிலுசிலுவென்று தூறல் போட்டுக் கொண்டிருந்த வேளையில் காரை எடுத்துக் கொண்டு அவள் வீட்டுக்குப் போனான் அவன். அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு வீட்டு வாசலில் அவள் காத்து நின்றதும், அவனைக் கண்டதும் கைகுவித்து வணக்கம் தெரிவித்துக் கொண்டே, ''ஓ! இது கனவில்லையே!'' என்று மகிழ்ச்சி பொங்க அவள் கூறியதும் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தன.

அவளும் அவளுடைய வயதான தாயாரும் தான் அந்தச் சின்ன வீட்டில் குடியிருந்தார்கள். பிடித்தமான தின்பண்டம் கிடைக்கப் பெற்ற குழந்தையைப் போல, அவள் தான் அன்று எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருந்தாள். ''ஹௌ ஹேப்பி ஐ ஆம் டு பி வித்யூ'' என்று அடிக்கடி அவள் அன்று கூறியது அவன் செவியில் என்றும் ஒலித்துக் கொண்டிருந்தது. அவள் மகிழ்ச்சியைக் கெடுக்க விரும்பாததாலும், அவளுடன் இருப்பதில் அவனுக்குக் கிடைத்த இனிமையை அவன் ரசித்ததாலும் அன்று அவளுடன் ஒரு படத்துக்குப் போயிருந்தான் அவன். அவள்தான் எவ்வளவு 'ப்ரீ'யாகப் பழகினாள்!

படம் விட்டுத் திரும்பும்போது அவன் அவளுடைய வாழ்க்கையைப் பற்றி விசாரித்தான்.

''இந்த இனிமையான நேரத்தில் அந்தத் துயரமான நினைப்பெல்லாம் எதற்கு பாஸ்?'' என்றாள் அவள்.

ஆயினும் அந்த நினைப்புகள் அவளைச் சூழ்ந்து கொண்டன என்பதை அவள் திடீரென்று மௌனமாகிவிட்டதிலிருந்து அவன் புரிந்து கொண்டான். வீடு வந்து சேரும் வரை அதன்பின் அவள் ஏதும் பேசவில்லை.

''உன்னுடைய 'மூடை' நான் கெடுத்து விட்டேன் இல்லையா.....?''

''பரவாயில்லை. என்னிடம் இதற்கெல்லாம் மருந்து இருக்கிறது.''

''என்ன மருந்து....?''

''வீட்டுக்கு வாருங்கள், தெரியும்!''

அவள் வீட்டில், அந்த மருந்தை அவன் பார்த்தபோது அவனுக்கு ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது.

எதைக் கண்டால் கௌரிக்கு அடிவயிற்றைப் பற்றிக் கொண்டு வருகிறதோ, அந்தப் போதைப் புனிதத்தைத்தான் அவள் மருந்து என்று குறிப்பிட்டிருந்தாள்.

''எனக்கு....?'' என்று சின்னக் குழந்தையைப் போல அவளைப் பார்த்துக் கேட்டான்.

''வித் ப்ளஷர்!'' என்று கூறிக் கொண்டே அவனுக்கு அதைக் கிளாஸில் ஊற்றிக் கொடுத்தாள் அவள். தனக்கும் எடுத்துக் கொள்ள அவள் மறக்கவில்லை.

'இவள்தான் எனக்குச் சரியான 'பார்ட்னர்' என்று அப்போது நினைத்துக் கொண்டான் அவன்.

ஆயின், தெரஸாவுக்கு ஏற்கனவே திருமணம் ஆகி, விமானப் படையில் பணி புரிந்து கொண்டிருந்த அவள் கணவன் ஒரு விபத்தில் இறந்து போய்விட்டான் என்பதை அவன் அறிய நேரிட்டபோது இப்படி நினைத்ததுகூட அவனுக்குச் சங்கடமாக இருந்தது. இருந்த போதிலும் தன் வாழ்வின் அவலங்களையெல்லாம் மறந்துவிட்டு வாழத் துடிக்கும் பிடிவாதத்துடன் அவள் அவனுடன் பழகுகின்ற போது கிடைக்கும் அனுபவத்தையும் அவனால் இழந்துவிட முடியவில்லை. கௌரியிடம் எதிர்பார்த்துக் கிடைக்காதவற்றை, தெரஸாவின் தொடர்பின் மூலம் அவன் ஈடு செய்து கொண்டிருந்தான்.

அடுத்த சிகரெட்டும் தீர்ந்துவிட்டது.

தெரஸா எழுந்திருக்கவில்லை.

அவன் எவ்வளவோ ஆசையுடன் வந்திருந்தான் இன்று. காலையிலிருந்தே அவன் மனம் சரியாக இல்லை. காலையிலிருந்தா? இல்லை. முந்திய தினம் சாயங்காலம் கல்கத்தாவில் உள்ள அவர்களது தலைமை அலுவலகத்திலிருந்து வந்த கடிதத்தைப் பார்த்ததிலிருந்தே அவன் மனம் சரியாக இல்லை. அவன் செய்துவிட்ட சின்னத் தவறொன்றைப் பெரிதாக்கி எழுதியிருந்தார்கள் அந்தக் கடிதத்தில். காரை எடுத்துக் கொண்டு கடற்கரைச் சாலையில் நீள நெடுகச் சுற்றிவிட்டு இரவு வீட்டுக்குத் திரும்பியவன், அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அவனுக்குக் கைகொடுக்கும் மருந்தின் தயவினால் நிம்மதியாகத் தூங்கிவிட்டான்.

காலையில் கண் விழிக்கும்போதே மனச் சங்கடமும் சேர்ந்து கண் விழித்துக் கொண்டது. பழக்கத்தின் காரணமாகக் கை காப்பிக்காகப் பஸ்ஸர் பொத்தானை அழுத்தியபோதிலும், அவன் கண்கள் தலைமாட்டிலிருந்த பாட்டிலைத்தான் தேடின.

அவன் பாட்டிலை எடுத்துக் கிளாஸில் அந்தச் சிவப்பு நிறத் திரவத்தை ஊற்றிக் கொள்வதற்கும் காப்பியுடன் கௌரி வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

அவனுக்குத் தெய்வங்களிடமோ தேவதைகளிடமோ நம்பிக்கை இல்லை. ஆயினும் தேவதைகளைப் பற்றிய வர்ணனைகள் நிறையக் கேட்டிருக்கிறான்.

சரக் கூந்தல் பின்புறம் புரள, மஞ்சள் பூசிக் குளித்த முகத்தில் பளீரெனக் குங்குமப் பொட்டுடன் வந்து நிற்கும் கௌரியைப் பார்க்கையில் அவன் கேள்விப்பட்டிருந்த தேவதைகளில் ஒருத்திதான் தன் எதிர் வந்து நிற்கிறாளோ என்று அவனுக்குத் தோன்றியது. தூக்கத்தின் விளைவாய்ப் போதை தணிந்திருந்த போதிலும் அதன் முழுத் தன்மையும் பாதிப்பும் அடங்கிவிடாத மன நிலையில் அவளைப் பார்த்தவுடன் அவனுக்கு என்ன தோன்றியதோ.....!

''கௌரி.....இப்படி வா....!'' என்றான்.

பாட்டிலும் கையுமாக அவனைப் பார்த்தவுடனேயே கௌரியின் முகத்தில் வெறுப்புச் சுழியிட்டுவிட்டது.

''அதைக் கீழே வைச்சுட்டுக் காப்பியை எடுத்துக்குங்கோ.......!''

''கௌரீ......!''

''ஊம்.......''

அவள் காப்பி டிரேயை டீப்பாயின் மீது வைத்தாள்.

அவன் பாட்டிலைப் பக்கத்தில் வைத்துவிட்டு எழுந்து வந்து அவள் கையைப் பற்றிக்கொண்டான்.

நெருப்பைத் தொட்டுவிட்டதைப் போன்ற பதற்றத்துடன் அவள் கையை உதறிய வேகத்தில் அவனே அரண்டு போய்விட்டான்.

'' இன்னிக்கு எங்கப்பாவுக்கு சிராத்தம். எவ்வளவு மடியா இருந்தேன். பல் கூடத் தேய்க்காமல் .... சே.....!''

அருவருப்பில் அவள் கூசிப் போய்த் திரும்புகையில், ''கௌரீ...!'' என்று வீடே அதிரும்படி அவன் இரைந்தான்.

''இல்லே. நான் போகணும். என்னை விட்டுடுங்கோ......!'' அவள் குரல் அழுகையாய்க் கரைந்தது.

''இந்த ஒரு நாள், ஊரிலே அண்ணா எல்லாம் பண்ணி முடிக்கப் பன்னிரண்டு மணியாகும். அதுவரைக்கும் நான் மடியா இருக்கணும். என்னை விட்டுடுங்கோ......!''

'' அழாதே..... போ.... போயிடு....!''


அவன் மறுபடியும் இரைந்தான். பரிதாபமாக அவனைப் பார்த்துக் கொண்டே அவள் உள்ளே போய்விட்டாள்.

அவசர அவசரமாக கிளாஸில் நிரப்பியிருந்ததை உறிஞ்சிவிட்டு, அறையில் குறுக்கும் நெடுக்கும் கூண்டுப் புலியாய் அலைந்து கொண்டிருந்தவன், ஏதோ தீர்மானத்துக்கு வந்தவனாய், முகம் கழுவி, உடை மாற்றிக் கொண்டு, காரை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான். வழியில் ஒரு ஹோட்டலில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு, தெரஸாவின் வீட்டை நோக்கிக் காரைச் செலுத்தினான்.

அன்று ஞாயிற்றுக்கிழமைதான். அலுவலகம் போக வேண்டாம். தெரஸாவுடன் எங்கேயாவது 'மார்னிங் ஷோ'வுக்குப் போய் வரலாம். ஆயினும், அவனுடைய துரதிர்ஷ்டம் இப்படியா தொடர வேண்டும்?

பொறுமை இழந்து போய் அவன் நின்ற போது, தனது தியானம் கலைந்து தெரஸாவும் எழுந்து நிற்பதைப் பார்த்தான்.

''குட்மார்னிங் பாஸ்!'' என்று நகைத்துக் கொண்டே வந்தாள் அவள்.



நாமும்

நம் செல்வமும்

வருமானம் நமது காலணி போன்று இருத்தல் வேண்டும். சிறிய காலணியானது காலை உபத்திரவப் படுத்தவும், கடிக்கவும் செய்யும். பெரியதாயிருந்தால் நம்மைத் தடுமாறி விழச் செய்யும்.

மிகக் குறைந்த தேவைகளை உடைய குறைந்த வருமானமுள்ள ஒருவன், நிறைந்த செல்வமிருந்தும் அதைவிட அதிகத் தேவைகளை நோக்கியிருக்கும் செல்வந்தனைவிடச் செழிப்பான வாழ்க்கை அமைந்தவனாவான்.

லார்டு செஸ்டர் ஃபீல்டு
தகவல்: மைதிலி

''ஸாரி பாஸ். உங்களை ரொம்ப நேரம் வெயிட் பண்ண வச்சிட்டேன். அம்மாகூட ஊரிலே இல்லே. தம்பிக்கு உடம்பு சரியில்லேன்னு மதுரையிலிருந்து கடிதம் வந்தது. நேத்துத்தான் புறப்பட்டுப் போனாங்க....! அவங்க இருந்தாலும் பேசிக்கிட்டு இருந்திருப்பாங்க. ரொம்ப நேரமாயிடுச்சில்லே? வெரி ஸாரி.''

ஒரு மோடாவை இழுத்துப் போட்டுக் கொண்டு அவன் எதிரே உட்கார்ந்தாள் அவள்.

''பரவாயில்லே. எனக்கு மனசே சரியில்லே. சீக்கிரம் கிளம்பு. ஏதாவது படத்துக்குப் போய்வரலாம்'' என்று சொல்லிக்கொண்டே கைக் கடிகாரத்தைப் பார்த்தான் அவன்.

மணி ஒன்பதரை ஆகியிருந்தது.

''எழுந்திரு, தெரஸா !''

தெரஸா அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். ''ஸாரி பாஸ். இன்றைக்கு நான் வரலே.''

''என்ன தெரஸா இது.....?''

''அவர் இறந்து போன செய்தி, மூணு வருஷங்களுக்கு முன்னாலே இதே தேதியில் தான் எனக்குக் கிடைச்சது. இந்த நாளைத் தான் நான் அவரோடு 'டெத்டே'யா மதிக்கிறேன். எவ்வளவு முயற்சி பண்ணினாலும் இன்னைக்கு அவர் நினைவை என்னாலே மறக்க முடியாது. ப்ளீஸ் லீவ் மி எலோன் டுடே.''

எங்கோ பார்த்துக் கொண்டு தெரஸா தீர்மானமாகப் பேசியவை அவன் மீது மோதுகையில்......


காலையில் பரிதாபமாக அவனிடம் கெஞ்சிக் கொண்டு நின்ற கௌரியின் உருவம் அவன் மனத்தில் நிழலாடிற்று.

''பரவாயில்லே, தெரஸா....!''


சிரமத்துடன் மிகவும் சாவதானமாக இதைக் கூறிவிட்டுத் தலையைக் குனிந்தவாறே அவன் வெளியேறினான்.

தெரஸா அவனைத் தடுக்கவில்லை. எழுந்து வாசற்படியருகில் வந்து நின்று கொண்டு அவன் போவதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனுடைய கார் அவனைச் சுமந்து கொண்டு, மிகவும் மெதுவாக அவன் வீட்டை—நல்வாழ்வை — நோக்கித் திரும்பிப் போய்க் கொண்டிருந்தது.



ஒவ்வொரு
Complan
Glaxo
Complan
ECONOMY PACK
Glaxo
Complan
BANANA FLAVOUR



நாளும் உங்கள் உடலுக்குத் தேவை
23 அத்தியாவசியமான ஊட்டச்
சத்துக்கள்.
இதர உணவுப் பானங்கள் இவற்றிலே
எத்தனை தருகிறது என்று பாருங்கள்!
காம்ப்ளான்
23 ஊட்டச்
சத்துக்களையும் தருகிறது.
குறிப்பைப் படியுங்கள்.
புரதம்
திசுக்களையும் செல்களையும்
உருவாக்க, பாதுகாக்க
லிப்பிடுகள்
பொங்கிப் பெருகும்
சக்திக்கே.
கார்போஹைடிரேட்
சக்தி மிகுந்த உடல்
வலிமைக்கே.
கால்ஷியம்
ஆரோக்கியமான பற்கள்,
எலும்புகளுக்கு
பாஸ்பரஸ்
உடல் சுரப்பிகள், பற்கள்,
எலும்புகளுக்கு
சோடியம்
இரத்தம் நன்முறையில்
செயலாற்ற.
குளோரைடு (Cl வடிவில்)
தசை இயக்கத்திற்கு.
பிடிப்புக்களைத் தவிர்க்கும்.
பொட்டாஷியம்
மனத் தளர்ச்சி, தசை அயர்ச்சிக்
கெதிராகப் போராட.
இரும்புச் சத்து
ஆரோக்கியமான இரத்தத்திற்கே
அயோடின்
தைராய்டு சுரப்பி
நாமாக இயங்க.
வைட்டமின் ஏ
ஆரோக்கியமான கண்களுக்கு.
வைட்டமின் பி[1]
வளர்ச்சி, உறுதியான நரம்
புகள்; 'பெரி-பெரி' நோய்
பீடிக்காதிருக்க.
ரிபோஃப்ளேவின்
ஆரோக்கியமான வாய்,
நாக்கு, உதடுகள்,
கண்களுக்கு.
நிக்கோடினமைடு
ஒளிவீசும் ஆரோக்கியமான
சருமத்திற்கே.
கால்ஷியம் பென்டோதேனேட்
நரம்புகளையும் தசைகளையும்
வலுப்படுத்த
கோலின்
கல்லீரல் ஆரோக்கியமாக இயங்க.
பைரிடாக்ஸின் (B6)
தசைகளை இளைப்பாற்ற
வைட்டமின் பி[12]
இரத்த சோகை பீடிக்காதிருக்க.
ஃபாலிக் அமிலம்
புதிய இரத்த செல்களை
உருவாக்க உறுதுணை.
வைட்டமின் ஸி
நோயெதிர்ப்புச் சக்தியைப்
பெருக்கி, ஸ்கர்வி நோய்வராதிருக்க.
வைட்டமின் டி
உறுதியான பற்கள்,
எலும்புகளுக்கு.
வைட்டமின் ஈ
கரு வளர்ச்சிக்கு.
வைட்டமின் கே
இரத்தம் இயற்கையான
முறையில் உறைய உதவும்.
இதர சிறுசிறு பொருட்கள்
வைட்டமின்களை உடல்
உறிஞ்சிக் கொள்ளவும்
சுரப்பிகள் நன்கு
இயங்கவும் உதவும்.
உலகெங்கும்காம்ப்ளான் பருகும் இலட்சக்கணக்கானோரில் வளரும் குழந்தைகள் உண்டு. சுறுசுறுப்பான இல்லத்தரசிகள், பரபரப்புடன் இயங்கும் அலுவலாளர்கள், கருத்தரித்த தாய்மார்கள், பாலூட்டும் அன்னையர், வயது முதிர்ந்தோர், விளையாட்டு வீரர்கள், பருமன் குறைப்போர் எனப் பலப்பல வகையினர் உண்டு. எளிதில் ஜீரணிக்கக் கூடிய காம்ப்ளான், டாக்டர்கள் சிபாரிசு செய்வது. வயிற்றுப்புண், வயிற்றுப் போக்கு, இரத்தபேதி, ஃப்ளு ஜுரம், பல்நோய் உள்ளவர்கள் கூட ஜீரணிக்கத் தக்கது. ஆரோக்கியமான சுவைமிகு பானம் தயாரிக்க, டப்பாவின் மீதுள்ள குறிப்பைப் பின்பற்றவும்.
பருகுவீர் காம்ப்ளான்®
பரிபூரண உணவு
போஷாக்குப் பற்றுக்குறையிலிருந்து
பாதுகாக்கவே.
உலகெங்கும்
உபயோகிக்கப்
படுவது—
க்ளாக்ஸோ
ஆராய்ச்சியில்
உருவானது.

வால் நட்சத்திரமும், வால் இல்லாத நட்சத்திரமும்!

— புஷ்பா.

'வால் நட்சத்திரத்தைப் பார்க்க முடியாது' என்றார் துரைசாமி....

'வெறும் நட்சத்திரத்தையாவது பார்க்கிறேனே' என்றார் குப்பண்ணா! விளைவு...?

காட்சி 1

(துரைசாமி தம் வீட்டு வராந்தாவில் உட்கார்ந்து, தம் பையன் கோபிக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.)

துரைசாமி: உம், சொல்லுடா... அசோகன் தம் வாழ்நாளில் என்னென்ன செய்தார்?



கோபி: அசோகன் பல வீர தீரச் செயல்களையெல்லாம் செய்தார்... பிரமாதமாகச் சண்டை போட்டார்...

துரை: உம், பலே!

கோபி: எதிரிகளை யெல்லாம் 'டுஷிங் டுஷிங்' என்று குத்தி வீழ்த்தினார்... 'சொய்ங், சொய்ங்' என்று கத்தி வீசி, எதிரிகளைப் பயந்தோடச் செய்தார்... பிறகு, தலையை மொட்டை அடித்துக் கொண்டு சொந்தப் படம் தயாரிப்பதில் ஈடுபட்டார்!...

துரை (திடுக்கிட்டு): என்னது! என்னது!

கோபி: படம்பா! சினிமா!... அசோகன் சொந்தப் படம் தயாரிக்கிறாரே - உனக்குத் தெரியாதா? எம். ஜி. ஆர்.தான் ஹீரோ!

துரை: அடப் பாவி! படிப்பிலே ஜீரோ: எந்தெந்தப் படத்திலே யார் யார் ஹீரோன்னு சொல்றயே!.... நான் கேட்டது சினிமா நடிகர் அசோகனைப் பத்தி இல்லேடா. மௌரிய சக்கரவர்த்தியைப் பத்தி!...

கோபி: ஓ! நீ அவரைப் பத்திக் கேட்டியா? ஸாரிப்பா!

துரை: ஸாரியா? எழுது இம்போஸிஷன் — முந்நூறு தடவை!... 'இனிமேல் சினிமாப் பத்திரிகைகளைக் கையாலும் தொட மாட்டேன்!'

(இந்தச் சமயத்தில் கையிலே ஒரு டிரங்குப் பெட்டி, ஹோல்டால் சகிதம் ஒருவர் வந்து நிற்கிறார்.)

வந்தவர்: என்னடா தொச்சா! சௌக்கியமா இருக்கியா?

துரை (திரும்பிப் பார்த்து): யாரு நீங்க தெரியல்லியே?

வந்தவர்: என்னைத் தெரியல்லியா? நன்னா யோசிச்சுப் பாரு!

துரை (புருவத்தைச் சுருக்கிக் கொண்டு): ஊஹூம், தெரியல்லியே!


வந்தவர்: நான்தான்டா உன் அம்மாஞ்சி— குப்பண்ணா? மறந்து போயிட்டியா என்னே?

துரை: அடேடேடே! குப்பண்ணாவா?... வாங்கோ, வாங்கோ!... ஏது இவ்வளவு தூரம்? (தனக்குமட்டும் கேட்கும்படியாக) சுத்தக் கழுத்தறுப்பு! இது எங்கேயிருந்து வந்தது இப்போ?

குப்பண்ணா: அடே! நம்ம ஊரிலே எதுவுமே தெரியல்லேடா! 'மெட்ராஸிலே போய்ப் பார்த்தால்தான் உண்டு'ன்னு எல்லாப் பசங்களும் சொல்லிட்டானுங்க... அதான் புறப்பட்டு வந்தேன்!

துரை: என்ன பார்க்கப் போறேள் இங்கே? வைத்தியமா?

குப்: இல்லேடா ஐயா... ஏதோ வால் நட்சத்திரமாமே!... அது நம்ம ஊர்லே தெரி






யிலே இல்லே! என் வீட்டு மொட்டை மாடியிலேகூட ஏறி நின்னு பார்த்தேன்!...

துரை (தனக்குள்): இவர் ஒட்டு வீடு எம்பயர் ஸ்டேட் பில்டிங்னு நினைப்பு போல் இருக்கு! (உரக்க) வால்நட்சத்திரத்தைப் பார்க்கிறதுக்காகவா இவ்வளவு செலவு பண்ணிக் கொண்டு வந்திருக்கீங்க?

குப்: என்னடா பிரமாதச் செலவு! வரபோது கோடி வீட்டுச் சுப்புணி டிக்கெட் வாங்கித் தந்துட்டான்... இங்கே நம்மாத்திலே தங்கப் போறேன்... திரும்பிப் போறதுக்கு நீ டிக்கெட் வாங்கித் தந்துடப் போறே!... இதிலே எனக்கென்ன செலவு!

துரை (தனக்குள்) அடப் பாவி மனுஷா! அடிமடியிலேயே கையைப் போட்டுட்டீரே!... (உரக்க) குப்பண்ணு! இங்கே கூட வால் நட்சத்திரம் சரியாவே தெரியறதில்லே... பேப்பர்லே போடறதெல்லாம் சுத்தப் பொய்! நானும்மூணு நாளாப் பார்க்கிறேன், தெரியல்லியே!



குப்: எங்கேடா போயிடும்?... தினமும் பார்த்துண்டே வந்தா ஒரு நாள் இல்லேன்னு ஒரு நாள் தன்னுலே தெரிஞ்சு போறது!... விடுவாளோ அதை?

துரை: இந்த வால்நட்சத்திரம் இன்னும் ஒரு வாரத்திலே மறைஞ்சு போயிடுமாம்!

குப்: போனாப் போகட்டுமே! திரும்ப வரபோது பார்த்துக்கறது... நான் எல்லாத்துக்குமே தயாராத்தான் மூட்டை கட்டிண்டு வந்திருக்கேன்! நட்சத்திரத்தைப் பார்க்காமே ஊருக்குத் திரும்பப் போறதில்லே!

துரை: குப்பண்ணு! அது திரும்பி வரதுக்கு எண்பதினுயிரம் வருஷங்கள் ஆகுமாம்!

குப்: ஆகட்டுமேடா ஐயா! எனக்கு அவசரம் இல்லேன்னேன்!...

(சொல்லிவிட்டு உள்ளே போகிறார். துரைசாமி திகைத்து நிற்க, மனைவி பார்வதம் அங்கு வருகிறாள்.)

பார்வதம்: ஆமாம், யார் இந்த அழுக்கு மூட்டை?

துரை (ரோஷத்துடன்): என்னது! அழுக்கு மூட்டையா? உன் சொந்தக்காரர்கள் எல்லோரும் ரொம்பப் பளபளப்பா, டால் அடிச்சுண்டு இருக்கிறதா நெனைப்போ? அத்தனையும் கரிமூட்டை! உன்னையும் சேர்த்துத்தான் சொல்றேன்!

பார்: சரி, நீங்க வெல்ல மூட்டையாவே இருந்துவிட்டுப் போங்கள்... வந்திருக்கிறவர் யார்னு சொல்லுங்களேன்!

துரை: என் அம்மாஞ்சி... வால் நட்சத்திரம் பார்க்க வந்திருக்கார்... அதைப் பார்க்காம ஊருக்குப் போக மாட்டார்.. ஒரு மாசம் நம்ம வீட்டிலே இருந்து கழுத்தை அறுக்கப் போகிறார்... போதுமா?

பார்: ஒரு மாசம் என்ன?... இரண்டு மாசமானாலும் இருந்துட்டுப் போகட்டுமே!

துரை: ஏய்! என்ன விளையாடறே?..இந்தத் தொணதொணப்பை யாராலும் சகிக்க முடியாது... தெரியுமா?

பார்: என்னாலே முடியும்!

துரை: எப்படி?

பார்: நான்தான் நாளைக்கே எங்க அம்மா வீட்டுக்குப் போகப் போறேனே! நீங்களாச்சு, உங்க அழுக்கு மூட்டை அம்மாஞ்சியாச்சு! அவஸ்தைப் படுங்கோ கிடந்து!

(வெடி குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டு விட்டு அப்பால் போகிறாள் பார்வதம்.)

காட்சி 2

(துரைசாமி அப்போதுதான் ஆபீஸிலிருந்து திரும்பியிருக்கிறார். சட்டையைக் கழற்றிக் கொண்டே சுவர்க் கடிகாரம் பக்கம் திரும்புகிறவர் திடுக்கிடுகிறார்.)

துரை: ஏய், கோபி! சுபத்ரா! திருட்டுக் கழுதைகளா! இங்கே வாங்க!

(குழந்தைகள் இருவரும் வந்து நிற்கிறார்கள்.)

துரை: நிஜத்தைச் சொல்லுங்க! கடிகாரத்தோட கண்ணாடியை யார் உடைச்சது?

கோபி, சுப: நான் இல்லேப்பா!

புகை பிடிப்பவருக்குப் பரிசு!

அமெரிக்காவில் லாஸ்ஏஞ்செல்ஸிலுள்ள ஒரு கடையில் புகை பிடிப்பவர்களுக்கும் பயன்படக்கூடிய ஒரு பொருள் விற்கப்படுகிறது. இது பார்ப்பதற்குச் சாதாரண 'ஆஷ் டிரே' (சாம்பல் தட்டு) மாதிரிதான் உள்ளது. எனினும் புகை பிடிப்பவர்கள் இதில் தமது சிகரெட்டைப் போட்டவுடன் இதற்குள் அமைந்த ஒரு மினி-டேப் ரிகார்டர் இருமத் தொடங்குகிறது; அரை நிமிடம் வரையில் விடாமல் இருமுகிறது! நியூடைம்ஸ்



துரை: பொய்யா சொல்றீங்க?... சரி யாதையா உண்மையை ஒத்துக்கப் போறீங்களா, இல்லே பெல்டாலே தலைக்கு இரண்டு போடட்டுமா?

கோபி, சுப: பிராமிஸா நான் எடுக்கலேப்பா!

(இதற்குள் குப்பண்ணா மாடியிலிருந்து இறங்கி வருகிறார். அவர் கையில் நீளமான பழைய பவுடர் டப்பா ஒன்று இருக்கிறது.)

குப்: குழந்தைகளை மிரட்டாதேடா தொச்சா!.. அதுகளுக்கு உண்மையிலேயே ஒண்ணும் தெரியாது!... கடிகாரத்தோட கண்ணாடியை உடைச்சது நான்தான்!

துரை (திடுக்கிட்டு): குப்பண்ணா! என்ன இது!

குப்: டெலஸ்கோப் வழியா பார்த்தால் தான் வால் நட்சத்திரம் பளிச்சுன்னு தெரியும்னு ஏதோ ஒரு பேப்பரிலே போட்டிருந்தான்... டெலஸ்கோப் பண்ண ஒரு கண்ணாடி தேவைப்பட்டது. அதனாலே நான்தான் கடிகாரத்தோட கண்ணாடியை லேசா ஒரு தட்டுத் தட்டி எடுத்துண்டேன்... இதோ டெலஸ்கோப்கூட ரெடி! (பவுடர் டப்பாவை நீட்டுகிறார்) நீ பார்க்கிறயா இது வழியா?

துரை (எரிச்சலையும் கோபத்தையும் அடக்கிக்கொண்டு) அது வழியாப் பார்த்தால் வால் நட்சத்திரம் தெரியறதா?

குப்: இல்லேடா துயா!... ஹைரோட் கிருஷ்ணா லஞ்ச் ஹோம் போர்டுதான் பளிச்சுன்னு என் கண்ணுக்குத் தெரியறது!

துரை (தனக்குள்): சரியான தீனிப் பிசாசு!

குப்: இருந்தாலும் யார் விட்டா அந்த வால் நட்சத்திரத்தை!... எனக்குத் தெரிஞ்சதுன்னா உன்னையும் கூப்பிடறேன்! ரெடியா இரு! (சொல்லிவிட்டு மாடிப் படி ஏறுகிறார்.)

துரை (கோபியின் கையில் இருக்கும் எதையோ பார்த்துவிட்டு அதட்டலாக): என்னடா அது, கையிலே?

கோபி: ஒண்ணும் இல்லேப்பா!

துரை (பாய்ந்து கோபியின் கையிலிருந்த புத்தகத்தைப் பறித்துவிட்டு) 'வெள்ளி நட்சத்திரம்' — சினிமாப் பத்திரிகையா?... ஏய்! அன்னிக்கே உன்கிட்டே என்ன சொன்னேன்? சினிமாப் பத்திரிகைகளைத் தொடக் கூடாதுன்னு சொன்னேனா இல்லையா?... இதை வாங்க ஏதுடா காசு?

கோபி: நான் வாங்கல்லேப்பா... அம்மாஞ்சிதான் வாங்கிண்டு வந்தார்... 'இதைப் படிச்சா நிறைய விஷயம் தெரிஞ்சுக்கலாம்; படிடா பயலே'ன்னார்... ஸ்டூடியோவுக்குக் கூட அழைச்சுண்டு போறேன்னு சொல்லியிருக்கார்... யாரோ கைபாஷன்ஷியரைக்கூட அவருக்குத் தெரியுமாம்!

துரை: அவருக்குத் தெரிஞ்ச ஒரே கைபாஷன்ஷியர் சட்டிக்காரன்தாண்டா!... உருப்படற வழியைப் பாரு! பாடப் புத்தகத்தைக் கையிலே எடு, போ! (விரட்டுகிறார்.)

காட்சி 3

(பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு. துரைசாமி ரேடியோ கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். குப்பண்ணா ஒரு சினிமாப் பத்திரிகையை வைத்துக் கொண்டு பாராயணம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.)

துரை: என்ன குப்பண்ணா! இன்னிக்காவது வால்நட்சத்திரம் தெரிஞ்சுதா?

குப்: இல்லேயேடா துயா... நானும் தினமும் மூணு மணி நேரம் மொட்டை மாடியிலே நிக்கறேன்... தெரியல்லியே!

துரை: அதைப் பார்க்காம நீர் ஊருக்குப் போக மாட்டீர்?

குப்: எப்படிடா துயா போக முடியும்?... ஊருக்குப் போனா எல்லோரும் கேப்பாளே— என்ன பதில் சொல்றது?

துரை: பார்த்தேன்னு சொல்றது.

குப்: பொய் சொல்லலாமோடா துயா? அதுவும் இந்த விஷயத்திலே?

துரை: பொய் யார் சொல்லச் சொன்னா? 'நட்சத்திரத்தைப் பார்த்தேன்னு சொல்லுங்கோ... 'வால்'னு சேர்த்துச் சொன்னாத் தானே பொய் ஆகும்? தரும புத்திரரே 'அசுவத்தாமா அத: குஞ்சர'ன்னு சொல்லலியா?

குப் (ஒரு நிமிஷம் யோசித்துவிட்டு): தொச்சா!... நீ சொல்றதிலேயும் பாயிண்ட் இருக்கு!...சரி, அப்படியே செய்துட வேண்டியதுதான்.... ஆனா அதுக்கும் நீதான் ஹெல்ப் பண்ணணும்!

துரை: வெறுமனே நட்சத்திரம் பார்க்க என் ஹெல்ப் எதுக்கு?

குப்: துயா! வெறும் நட்சத்திரத்தை என்னடா பார்வை வேண்டிக் கிடக்கு!... ஒரு சினிமா நட்சத்திரத்தைப் பார்க்க ஏற்பாடு பண்ணேன்... பார்த்துட்டு ரயில் ஏறிடறேன்!


துரை (திகைத்து): சினிமா நட்சத்திரமா?

குப்: ஆமாண்டா!... எப்படியாவது ஒரு ஸ்டூடியோவுக்கு அழைச்சிண்டு போயேன்... அது போதும்...

(துரைசாமி சற்று யோசிக்கிறார். பிறகு தமக்குத் தாமே பலமாகத் தலையை ஆட்டிக் கொள்கிறார்.)


ஒரு 90-விநாடிக் கண்ணோட்டம்-
டிவிஎஸ் அளிக்கும் முழுமையான சேவை
டிவிஎஸ் ஒரு புதிய டிரக்கை உங்களுக்கு விற்பனை செய்கிறது.
அதன் முதலீட்டில் 70 சதவிகிதம் அல்லது அதற்கு மேலும் பெற வழி செய்கிறது.
அதன் பாடியைக் கட்டித் தருகிறது.
அதற்கான பராமரிப்பு சேவையை அளிக்கிறது.
டயர்களை ரீடிரெட் செய்கிறது.
உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்
TVS
அசல் மாற்றுப் பகுதிகள் பல டிவிஎஸ் அலுவலகங்களிலும், ஏராளமான விற்பனை/பணி நிலையங்களிலும் கிடைக்கின்றன.
டி.வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை.
SAA/TVS/1036

கிட்டாத பொருள்!



போர்ட் மோட்டார் கம்பெனியின் அதிபர் ஹென்றி போர்ட் அவர்களிடம் அவரது வாழ்க்கையின் அந்திம காலத்தில் நிருபர் ஒருவர் கேட்டார்:

''வாழ்க்கையில் தங்களுக்கு எல்லா வித இன்பங்களும் கிட்டியுள்ளன. பெயர், புகழ், பணம் எதிலும் குறைவில்லை. ஆயினும் தங்களுக்கு ஏதாவது குறையுண்டா?''

ஹென்றி போர்ட் ஒரு பெருமூச்சுவிட்டுச் சொல்வார்: ''ஒரே ஒரு மதிப்புமிகுந்த பொருள் கிடைக்கவில்லை; உண்மையான நட்பு.'' — ரா. வி.

துரை: குப்பண்ணு! பரிமளாவைப் பார்க்கிறீரா — பரிமளாவை? நான் அறிமுகம் செய்து வைக்கிறேன் உங்களுக்கு!

குப்: (திகைத்து): பரிமளா!.... யாரு, இந்தக் 'குரங்கு மனம்' என்கிற படத்திலே நடிச்சிருக்காளே, அவளேயா சொல்றே?... அவளே உனக்குத் தெரியுமா?

துரை: பேஷாத் தெரியும்.... என் ஆபீஸிலே ராமதுரைன்னு ஒருத்தன் இருக்கான். அவனோட தங்கைதான் இந்தப் பரிமளா! வேணும்னு சொல்லுங்க. அவளைச் சந்திக்க நான் ஏற்பாடு பண்ணறேன்!

குப்: நான் இப்பவே ரெடி!... நீ புறப்படறியா சொல்லு!

துரை: அவசரப்படாதீங்க. அவகிட்டே டைம் தெரிஞ்சுண்டு வந்துட்டு அப்புறமா உங்களை அழைச்சுண்டு போறேன்...

குப்: சரிடா ஐயா!... நான் இப்போ மொட்டை மாடிக்குப் போய் இன்னொரு தரம் அந்த வால் நட்சத்திரத்தைப் பார்க்க முயற்சி பண்ணறேன். (போகிறார்.)

சுபத்ரா: ஏம்பா, உனக்கு அந்தப் பரிமளாவை நன்னாத் தெரியுமா என்ன?

துரை: உஸ்! இரையாதே! (தணிந்த குரலில்) சும்மாவானும் புருடா விட்டேன்... குப்பண்ணு ஏமாந்துடுத்து!

சுப: அப்படீன்னு நட்சத்திர சந்திப்பு?

துரை: எங்க ஆபீஸ் டெலிபோன் ஆபரேட்டர் அசைப்பிலே அந்தப் பரிமளாவைப் போலவே இருப்பாள்.... அவளைக் கிழவனுக்கு அறிமுகம் செய்து வைச்சுட்டு, ஊருக்கு மூட்டை கட்டச் சொல்றேன் பார்! (மார் தட்டிக் கொள்கிறார்.)

காட்சி 4

(குப்பண்ணு மூட்டை முடிச்சுக்களுடன் ஹாலில் உட்கார்ந்திருக்கிறார். துரைசாமி அவருடன் படு உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்.)

துரை: குப்பண்ணு! நீ நம்ம விருந்தாளியா இத்தனை நாள் இருந்ததிலே எனக்கு ரொம்பச் சந்தோஷம்!... நீர் ரெடிதானே? டாக்ஸி கொண்டு வரட்டுமா ஸ்டேஷனுக்குப் போக?

குப்: தொச்சா! நான் ஊருக்குப் போறதுக்கு முன்னாலே உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்னு இருக்கேன்....

துரை: சொல்லுங்கோ!

குப்: அன்னிக்கு அந்தப் பரிமளாவை அறிமுகம் செய்து வைச்சியே, அதை நான் என் ஆயுசிலே மறக்க மாட்டேன்!

துரை: பூ! இதென்ன பிரமாதம் குப்பண்ணு!

குப்: விஷயத்தை முழுக்கக் கேளு, தொச்சு!.... எனக்குத்தான் சினிமான்னு அபார மோகம்னு உனக்குத் தெரியுமே!.... பரிமளாவோட கையெழுத்தை வாங்கணும்கிறதுக்காக ஊர்லேருந்து ரெண்டு நூறு ரூபா நோட்டு கொண்டு வந்திருந்தேன்....

துரை: ஆனா நீங்க அன்னிக்கு எதிலேயும் அவ கையெழுத்தை வாங்கல்லியே! என்கிட்டே வேணா கொடுங்க... நான் அவ கையெழுத்தை வாங்கி ஊருக்கு அனுப்பி வைக்கிறேன்!

குப்: உனக்கு அந்தச் சிரமம் வேண்டாம்டா ஐயா... அந்தப் பொண்ணு நிஜமான பரிமளா இல்லேன்னு எனக்கு அன்னிக்கே தெரியும்!

துரை (திகைத்து): ஹா! தெரியுமா! எப்படி?

குப்: இன்றைய நட்சத்திரம் பரிமளா இருக்காளே — அவ நம்ம ஊர்ப் பால்காரப் பரமசிவத்தோட ஒரே பொண்ணுடா ஐயா! அவளை எனக்கு நன்னாத் தெரியுமே! நீதான் நம்ம ஊர்ப் பக்கமும் வரதில்லே; சினிமாப் பத்திரிகைகளையும் பார்க்கிறதில்லே. அதனாலே உனக்கு எப்படி இந்த விஷயம் தெரியப் போறது?

துரை: அப்படீன்னு...

குப்: நீ ஆடின நாடகம் முழுதும் எனக்குத் தெரியும். பரிமளா கையெழுத்துப் போட்ட நூறு ரூபா நோட்டுக்களிலே ஒண்ணை நான் வைச்சுண்டு இன்னொண்ணை உன்கிட்டே தரலாம்னு இருந்தேன் .. அந்தப் பொண்ணு உங்க ஆபீஸிலே வேலை பார்க்கிறவதான்னு தெரிஞ்சதும் அந்த ரெண்டு நோட்டையும்...

துரை (பதறி): என்ன பண்ணேள்?

குப்: அவ்வளவு நன்னா பரிமளா போல வேஷம் போட்ட அந்தப் பொண்ணுக்கே என் பரிசாக் கொடுத்துட்டேன்!... குப்பண்ணு! நீ நினைக்கிற மாதிரி முட்டாள் இல்லேடா தொச்சா!

துரை: அப்போ எனக்கு நூறு ரூபாய் நஷ்டம்னு சொல்லுங்கோ!

குப்: உன் வீட்டிலே ரெண்டு மாசம்போல நான் தங்கி யிருந்திருக்கேனே—அந்தச் செலவுகளையும் சேர்த்து நஷ்டக் கணக்குப் போட்டுப் பார்! நான் வரேன் — எனக்கு ரயிலுக்கு நேரமாச்சு!

(குப்பண்ணு வாசலுக்கு விரைகிறார். துரைசாமி திகைத்துப் போய் நிற்கிறார்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam



வலிமிகுந்த தலைவலிக்கு
மிக விரைந்த விடுதலை!
ஒரே ஒரு
அவேதன்®
ப்ளஸ்
சக்தி வாய்ந்தது,
விரைந்து
செயல்படுவது
அவேதன் ப்ளஸ்
SQUIBB
SARABHAI CHEMICALS PVT. LTD.
® இ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். எஸ்.வி.பீ.எல். இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.
Shilpi HPMA 36a/73 Tam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)

